# நாகரிகம்

[நாடகம்]

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

ஆர். பி. மல்லாரி

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
MADURAI

ஸ்ரீமகள் கம்பெனி
சென்னை : கோயமுத்தூர் : மதுரை

Univ. Grants Commission.

வெளியீடு: 183
முதற் பதிப்பு: அக். 1956
உரிமை உடையது

விலை ரூ. 1—0—0

விற்பனை நிலையம் :-
எம். எஸ். ராமுலு கம்பெனி
286, சைனாபஜார், சென்னை-1.

# பதிப்புரை

சமுதாயத்தைத் திருத்தி அமைப்பதாயினும் சரி சமுதாயத்தின் விழிப்புக்குரிய கருத்துக்களை விதைப்பதாயினும் சரி கடினமான சொற்களாலும் உணர்ச்சிவயமான வார்த்தைகளாலும் அம்முயற்சியை மேற்கொள்ளுதல் ஒரு முறையாகும். இம்முறையையே பெரும்பாலோர் கையாள்கிறார்கள். சூடானவார்த்தைகளைவாரிஇறைப்பதாலோ உணர்ச்சிகரமான சொற்களை அள்ளிக் கொட்டுவதாலோ தாங்கள் ஏற்றுள்ள சமுதாயப்பணி நிறைவேறிவிடுமெனக் கருத முடியாது. சொல்லவேண்டிய கருத்துக்களை—எழுதப்படவேண்டிய எண்ணங்களை நகைச்சுவையான வார்த்தைகளாலேயே பேசி—எழுதி மாபெரும் வெற்றி காண முடியும். எவர் மனதும் புண்படாத வேறு சிரிப்பூட்டும் சொற்களாலேயே வெளியிடுதல் நன்முறையாகும்.

ஆர். பி. மல்லாரி சிறந்த நகைச்சுவை எழுத்தாளர். சமுதாயத்தின் இன்றைய நாகரிகப் போக்கை நயம்படத் தாக்கி—அதே வேளையில் நாட்டுப்புற நங்கையை நாகரிகப் பெண்ணாக மாற்றிக் காட்டுவதில் நிகரற்றவராகிவிட்டார் மல்லாரி, இந்நூலின் மூலம்.

உயரிய நாடக நவீனம். ஏற்று மகிழ்வீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்குண்டு.

**பதிப்பாளர்கள்.**

# மகாத்மா காந்திஜியின் கருத்துள்ள நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| சத்திய சோதனை | 6 | 0 | 0 |
| ஆரோக்கிய வழி | 2 | 0 | 0 |
| அனுசக்தி யோகம் | 2 | 0 | 0 |
| இல்லறமும் பிரும்மச்சரியமும் | 1 | 8 | 0 |
| மகா தியாகம் | 1 | 8 | 0 |
| உத்தம வாழ்க்கை | 1 | 4 | 0 |
| ஹிந்து தர்மம் | 1 | 4 | 0 |

**ஸ்ரீமகள் கம்பெனி**

சென்னை - 1

# முக்கிய பாத்திரங்கள்

UNIVERSITY ... MADURAI

## (ஆண்கள்)

**1. விஜயன்:**

(25 வயது) கதாநாயகன்; "ராமபாணம்" பத்திரிகையின் சப் எடிட்டர்; ஆரம்பத்தில் நாகரிகத்தில் ஆர்வங்காட்டி, அதற்காக பிற்காலத்தில் வருந்துபவன்; சற்று முன்கோபி.

**2. விமல்:**

(30 வயது) விஜயன் நண்பன்; நாகரிகத்தில் கரைகண்டவன் போலப் பாவனை செய்து கொள்பவன்; எப்போதும், எவருக்கும் தகுந்த குல்லாப் போட்டுத் தன் பிழைப்பைத் தேடிக் கொள்ள 'ப்ளான்' செய்பவன்.

**3. மிஸ்டர் ராம்நாத்:-**

(40 வயது) பணக்காரர்; வேட்டைக்காரர்; வேட்டையைப் பற்றி பேச ஆரம்பித்து விட்டால் சற்று 'லூஸா'கி விடுவார்.

**4. ரவீந்திரன்:-**

(20 வயது) ராம்நாத் மகன்; காலேஜ் மாணவன்; வாழ்க்கையில், அத்தியாவசியத்திற்கு வேண்டாத பாஷனை, முக்கியமாகப் பெண்களின் "நாகரிகம்" என்ற வெறும் டம்ப முன்னேற்றத்தை வெறுப்பவன்; வாஸந்தியின் காதலன்.

**5. மிஸ்டர் எக்ஸ்:-**

('மேக்அப்' வயது) மிஸ்டர் எக்ஸ் பாஷன் எக்ஸ்பர்ட்; உலகிலுள்ள பல தேசங்களின் மாறும் பாஷனைக் கணக்கிட்டு, அதை நடைமுறையில் கொண்டுவர முயற்சிப்பவர்; "வாழ்க்கையே பாஷன்" என்பது இவர் சிந்தாந்தம்.

**6. கேசவ பிள்ளை:-**

(24 வயது) கதாநாயகி காந்திமதியின் தந்தை; ஆரோக்கியமுள்ள கிராமவாசி.

**7. கோவிந்த பிள்ளை:-**

(38 வயது) கேசவ பிள்ளையின் நண்பர்; தான் சதா சீக்குக்காரர் என்ற கற்பனையில், ஆஸ்பத்திரிகள் மருந்துகள் உதவிகொண்டு, தன் வயதை அதிகப்படுத்த முயலுபவர்.

8. **'எடிட்டர்':-**
(35 வயது) "ராமபாணம்" பத்திரிகை ஆசிரியர்.

9. **புரொபஸர் புருஷோத்தமன்:-**
(45 வயது) 'பாட்டனி' புரொபஸர்; பனிமா நிபுணர்; எதிலும் சந்தேக முடையவர்.

**(மற்றும் ஆண்கள்:-**
டாக்டர், வேலைக்காரத் தங்கப்பன், ரிக்ஷாக்காரன், கிளப் மெம்பர்கள், மாணவர்கள்-முதலானோர்.)

## பெண்கள்

1. **காந்திமதி:-**
(20 வயது) கதாநாயகி; கிராமப்பெண்; கணவன் இஷ்டத்திற்காக பாஷனைப் பழகி, அளவுக்கு மீறி வாழ்க்கையில் அதைப் புகுத்தி, அதன் தொல்லையை அனுபவித்து, மீண்டும் குடும்பத்திற்கேற்ற 'மனைவி'யாக மாறுகிறவள்.

2. **வாஸந்தி:-**
(17 வயது) கதாநாயகன் தங்கை; ரவியின் காதலி; ஆனால் ரவியைவிட முன்கோப முள்ளவள்; நாகரிக மங்கையான அவள், ரவிக்காக "இந்திய மங்கை"யாக மாறி, அதிக ஆனந்தம் அடைகிறாள்.

3. **கௌரி:-**
(32 வயது) விஜயனின் தூரபந்து; வீட்டுவேலைகளை எல்லாம் கவனித்துக் கொள்பவள்; உண்மையாக உழைப்பவள்; வேண்டாத 'பாஷன்' அவள் எதிரி.

4. **மிஸஸ் ராமநாத்:-**
(37 வயது) வாழ்க்கைக்கு அத்தியாவசியமான நாகரிகத்தை அறிந்து, அளவோடு இருப்பவள்; காந்திமதியை தன் மகளைப் போல நேசிப்பவள்.

5. **ஜயஸ்ரீ:-**
(6 வயது) ராம்நாத்தின் துடுக்கான பெண்; சதா விளையாட்டு; வாஸந்தி மீது அவளுக்கு உயிர்.

**(மற்றும் பெண்கள்:-**
மாதர் சங்க செக்ரடரி, காலேஜ் மாணவிகள், க்ளப் மெம்பர்கள்- முதலானோர்.)

# காட்சி 1

**விஜயன் வீடு :**

[விஜயன் வீட்டில், நன்முக அலங்கரிக்கப்பட்ட குத்துவிளக்கு; பொட்டிட்டு, பூப்போட்டு, நிறை திரியுடன் எரிந்து கொண்டிருக்கிறது. அதனருகில், காந்திமதி, கீதையுடன் பயபக்தியாக உட்கார்ந்திருக்கிருள். அவள் முகத்தில் சாந்தம்.

மற்ருெரு பக்கம் வர்ண விளக்கு-பிரகாசமான ட்யூப் லாம்ப்—அது ஜாஜ்வல்யமாக எரிந்து கொண்டிருக்க, வாஸந்தி அதன் ஒளியில், நவநாகரிகமான மேக் அப்புடன் மின்னியவாறு 'கலகல' வென சிரித்துக் கொண்டிருக்கிருள்.

இந்த இரு நிலே, இருவர் போக்கையும் காட்டுகிறது. காந்திமதி படித்த பிறகு, கீதையை மூடிவைத்து எதிரே பார்க்கிருள். அவள் கணவன் விஜயன் போட்டோவைக் கண்டு புன்முறுவல் பூக்கிருள். அந்த சமயத்தில், விஜயன், அந்த போட்டோவில் எப்படி இருக்கிருனே, அதே போல, வாசற்படியில் நின்றுகொண்டிருக்கிருன. பிறகு மெல்லிய நகையுடன் உள்ளே வந்து, கையிலிருந்த சிகரெட்டை அந்த குத்துவிளக்கில் கொளுத்திக்கொண்டு, உள்ளே ட்ராயிங் ரூமுக்குப் போகிருன். அவன் சகோதரி வாஸந்தி 'கலகல'வென சிரிக்கிருள். விஜயன் முகத்திலும் லேசான புன்முறுவல், ஆனுல் அதில் சற்று வெட்கம்]

**விஜயன் :** வாஸந்தி....ஏன் சிரிக்கிறே?

**வாஸந்தி :** (சிரிக்கிருள்)

**விஜ :** (காந்திமதியைச் சுட்டிக்காட்டி) இவளோட இந்தப் பட்டிக்காட்டுத்தனம் எல்லாம் எவ்வளவு சீக்கிரமா மாறப்போகுது பாரு...

வாஸ: ஆமாம் ஆமாம் மாறும்.

விஜ: நீன்னு பாரு, காந்தி எப்போதும் இப்படியே இருந் திடுவான்னு? ...ம்?

வாஸ: (கேலியாக) ஆ.........ஹாங்! அப்படியா மனக் கோட்டை!

விஜ: காந்தி உண்மையாகவே தனித்தங்கம்.

வாஸ: தெரியுது! முகத்திலே, மஞ்சளோட ஜ்வலிப்பும் கொஞ்சம் கூடுதலா யிருக்குதல்ல! அதிலே கொஞ் சம் கில்ட் மாத்திரம் கொடுத்திட்டா......

[விஜயன் பதில் சொல்வதறியாமல் சிரித்துக் கொண்டே தன் அறைக்குப் போகிறான். வாஸந்தியும் வாயை மூடி சிரித்தவாறு காந்திமதி இருக்கும் இடத்திற்கு வருகிறாள். கெளரி காந்திமதியுடன் பேசிக்கொண்டிருக் கிறாள்]

கெளரி: என்னம்மா இன்னைக்கி இவ்வளவு சீக்கிரமா கீதை பாராயணம் முடிஞ்சி போச்சு (வாஸந்தி சிரிப்பதைக் கண்டு) வாஸந்தி! கல்யாணம் முடிஞ்சி இன்னும் சரியா ரெண்டுவாரம் ஆகலே, அதுக்குள்ளற கேலி செய்ய ஆரம்பிச்சுட்டியே?

காந்தி: கெளரி! வாஸந்தி சிறிசுதானே; விளையாட்டு புத்தி எங்கே போகும்?... (மெதுவாக) இருந்தாலும் எனக்கு இந்த டவுன் நாகரிகம் கொஞ்சமும் தெரி யலேதான்.

கெளரி: ஐயோ, டவுன் நாகரிகமா? அது வேணும்மா நமக்கெல்லாம்; அது பெரிய ராகு இல்லேயா?

காந்தி: எது ராகு?

கெளரி: டவுனு பக்கத்துலேருந்து வர்ற இந்த நாகரிகம் தான். ஆளே விழுங்க ஆரம்பிச்சா, அதிலேருந்து யாராச்சும் தப்ப முடியுமா, என்ன?

[கௌரி சீதையை எடுத்துக்கொண்டு உள்ளே போகிருள். பின்னுல் காந்திமதியும் தொடர்ந்து போகிருள்]

**வாஸ:** (அவர்கள் போகும் போக்கைக் கண்டு சிரித்து) ரெண்டும் சரியான ஜோடி இந்த நூற்ருண்டுலே ரெண்டு அற்புதங்கள்தான்.

[எதிரே இருக்கும் ஒரு அமெரிக்க நடிகையின் பகட்டான படத்தையும், அகலவிருக்கும் ரவிவர்மாவின சாவித்திரியின் படத்தையும் மாறிமாறிப் பார்க்கிருள்]

## காட்சி 2

**விஜயன் அறை:**

[விஜயன் ரேடார் விமானம் போட்ட புஷ்கோட் அணிந்திருக்கிருன். காந்திமதி கெஜலக்ஷ்மி பதித்த ஒட்டியாணமும், பசுமுகப்பு வைத்த வங்கியும் அணிந்திருக்கிருள்]

**விஜ:** இப்போ இங்கே யாரெல்லாம் வாருங்க தெரியுமா, காந்தி? ஒண்ணு மிஸ்டர் விமல், மற்றவர்...(காந்திமதியை ஏறிட்டுப் பார்த்து) காந்திமதி! நான் சொல்றதை நீ கேக்குறியோ?

**காந்:** (மெதுவாக) உம்...

**விஜ:** இந்த காலத்துலேயும், நீ இவ்வளவு கட்டுப்பெட்டியாயிருந்தா முடியுமா?....

**காந்:** (மௌனம்)

**விஜ:** என்னேட ரெண்டு சிநேகிதருங்க இங்கே வருவாங்க?...(செல்லமாக) எங்கே வருவாங்க?

**காந்:** இ...ங்...கே!

**விஜ:** ஒண்ணு விமல்.........மற்றவர் பத்திரிகையின் எடிட்டர்.........காந்தி, இதோபாரு, அப்புறமும் நீ தலையை குனிஞ்சுக்கிட்டே...?

காந்: (மெதுவாகச் சிரித்து) ம்....இல்லே...சொல்லுங்க.

விஜ: அவுங்களை வரவேற்று, வேண்டிய உபசாரம் செய்யவேண்டியது உன்னுடை கடமை.

காந்: (மௌனம்)

விஜ: (அன்போடு அவள் பக்கம் சென்று) காந்தி, நீதான் எவ்வளவு அழகாயிருக்கே!........ஆனா, நீ மாத்திரம் கொஞ்சம் நாகரிகமா நடந்துகிட்டா.......உம். போய் இந்த பதினெட்டு முழப்புடவையை கழற்றி போட்டுட்டு, நீட்டா ட்ரஸ் செஞ்சுகிட்டு வா...சே...என்ன புழுக்கமா யிருக்குது.......உலகத்துலே காத்துக்குக் கூடல்லே, இப்போ பஞ்சமும் பர்மிட்டும் வந்திடுச்சு. (டேபிள் பேன் ஸ்விட்சைப்போட்டு) ....ம்...நேரமாச்சு, போ (வாட்சில் டயம் பார்க்கிறான்)

[அதே சமயம் வாட்ச் ஓடுகிறதா இல்லையா என்று, விமல் தன் காதினிடம் தன் வாட்சை ஆட்டிப் பார்க்கிறான். விமல் நல்ல நவ நாகரிக யுவனாக உடுத்திருக்கிறான். கையில் ஸ்டேட் எக்ஸப்ரஸ் சிகரெட் டின்]

விம: (ஸ்டைலாக) நமஸ்தே!

விஜ: விமல்?....நமஸ்தே வா வா...இப்போதான் பேசிகிட்டிருந்தேன்...உனக்கு...

விம: நூறு வயது வேணும்ப்பா...யமன் கோவிச்சுக்கப் போறான்.

விஜ: காந்தி—இவர்தான் என் நண்பர்—மிஸ்டர் விமல்

விம: ஓ மிஸஸ் விஜயன்.

[சொன்னவாறே மேஜையின் மீதிருந்த மின்சார விசிறிப் பக்கம் கைவைக்க, ஷாக் அடித்துவிடுகிறது]

விஜ: (திடுக்கிட்டு) என்ன, ஷாக்கா?

**விமல்:** (அசட்டு சிரிப்புடன்) பரவாயில்லே — இதுபோல எவ்வளவோ ஷாக்லே அடிபட்டாச்சு.......ம்...... விஜயன் உங்க பெட்டர் ஹாஃபுக்கு ரொம்ப ஷைன்னு தோணுது.

**விஜ :** (அசட்டு சிரிப்புடன்) வந்து ஒருவாரந்தானே ஆயிருக்குது. காலா காலத்துலே எல்லாம் சரியாயிடும்!

**விமல் :** (சிரிப்பை அடக்கி) இருந்தாலும் ஒரு கிராமத்திலேருந்து வந்திருக்குற நாரீமணிதானே?

**விஜ :** ஆனு விமல், நீ நினைக்கிறதுபோல அவ்வளவு குக்கிராமமுமில்லே.

[விமல் சிகரெட் டின்னிலிருந்து ஒரு சிகரெட்டை எடுத்து, தீப்பெட்டி வேண்டுமென சைகை காட்ட, விஜயன் தன் சட்டைப்பையில் சிகரெட்லைட்டர் இல்லையென்று அறிந்து, உள்ளே போகிருன்]

**விமல் :** (காந்திமதியை நோக்கி) உங்க தகப்பனுரோட பேரு என்னுங்க......?

**காந் :** (மெதுவாக) கேசவபிள்ளை.

**விம :** (பெரிதாகச் சிரித்து) ஓஹோ சேசவபிள்ளை! உங்க ஊரிலே ஒரு ராஜா மாதிரில்லே அவரு!... எனக்கு நல்லாத் தெரியுமே!

[கௌரி வாசற்பக்கம் வந்து ஏதோ சைகைகாட்டுகிருள்]

**விமல் :** (சிரித்தவாறு) ஓ...வா ச ந் தி ய ா...ம்...ஏன் வாசந்தி ஒளிஞ்சு நின்னுக்கிட்டே?

**கௌ :** நான் வர்சந்தியில்லே—கௌரி

**விம :** (அசட்டு சரிப்புடன்) கௌரியா? (காந்திமதியை நோக்கி)...ம்...இருந்தாலும் விஜயனுக்கு நாகரிகத்திலே உள்ள இந்த அநாவசிய மோகம் கொஞ்சம் அதிகந்தான்.

[விஜயன் சிகரட் லைட்டரை எடுத்துக்கொண்டு வருகிருன்]

**விஜ :** (காந்திமதியை நோக்கி) என்ன காந்தி இப்படியே நின்னுகிட் டிருந்தா? விருந்தாளி வந்து இருக் கிறபோ?......

[காந்திமதி உள்ளே போகிருள்]

**விமல் :** (வாய்விட்டு சிரிக்கிருன்)

**விஜ .** என்ன விமல்?

**விம :** (சிரித்துக்கொண்டு) ஒண்ணுமில்லே.........

**விஜ :** சும்மா சொல்லு விமல்?

**விம :** ரேடார்விமானம் வேகத்துலே விர்னு பறந்து போற ஒரு கணவன்! மாட்டு வண்டியிலே "லொடக் லொடக்"ன்னு பிரயாணம் செய்யும் ஒரு மனைவி!... ஹ.......ஹ .....நல்லபொருத்தம்.....ஹ.......ஹ....... ஹ...விஜயனின் விமான புஷகோட்டு, காந்தி மதியின் பசுபோன்ற ஜரிகையிடப்பட்ட, பெரிய பூப்போட்ட ஜாக்கெட்!

**விஜ:** இல்லை விமல் இன்னும் கொஞ்ச நாள் பொறுத் துப்பாரேன்......

[மெதுவாக அசட்டுசிரிப்பு சிரிக்கும் விஜயனிடம் வி ல் சிகரெட் டின்னை நீட்டுகிருன்; விஜயன் ஒரு சிகரெட் எடுத்துக்கொண்டு சிகரெட்டை தன் லைட்டால் பற்றவைக்கிருன்]

## காட்சி 3

**மிஸ்டர் ராம்நாத் வீட்டில் அவர் அறை :**

[ஒரு வேட்டைக்காரன் அறையின் அலங்காரம்— சுவற்றில் ஒரு பெரிய புலிதோல், மற்றும் பல வேட்டை சாமான்கள். ஒரு பெரிய அல்சேஷன் நாய் ராம்நாத் காலடியில் கிடக்

கிறது. ராம்நாத் "ராமபாணம்" பத்திரிகை எடிட்டருடன் பேசிக் கொண்டிருக்கிறார். எடிட்டருக்குசிகரெட் பற்றவைத்துக் கொடுக்கிறார்]

ராமபாணஎடிட்டர்: (புலித்தோலைச் சுட்டிக்காட்டி) ஒரே குண்டுலேயே இந்தப்புலி சுருண்டு விழுந்துடிச்சா?

ராம: (பெருந்தன்மையுடன் மழுப்பி) அதெப்படி முடியும்?

எடிட்: அதான் எனக்கும் சந்தேகமா யிருந்துச்சு, இவ்வளவு பெரிய புலித்தோலை நான் கண்டதேயில்லை.

ராம: அது உயிரோடயிருக்கிறப்போ பார்த்திருக்கணும்! எவ்வளவு பயங்கரமா, ஆங்காரமா......

எடிட்: உங்களோட இந்த புலிவேட்டை எனக்குத் தெரியாமே போச்சே! தெரிஞ்சிருந்தா, "ராமபாண"த்துலே விபரமா, படத்தோட பிரமாத பப்ளிசிடி கொடுத்திருப்பேனே!

ராம: இது என்ன பிரமாதம் ஒவ்வொரு சமயத்திலே....

எடி: அப்பிடின்னு, இதைவிட இன்னும் பயங்கரமா செய்திருக்கீங்கன்னு சொல்லுங்க.

ராம: (அசட்டுச் சிரிப்புடன்) ஒண்ணு, ரெண்டா?

[ராம்நாத்தின் மகள் ஜயஸ்ரீ ஓடிவருகிறாள்]

ஜயள்: அப்பா!........அப்பா!

ராம: ஏம்மா ஜயஸ்ரீ?

ஜய: அந்த மீசைக்கார மாமா, தெருவிலே அப்படி போறாரு.

ராம: எந்த மீசைக்கார மாமா?

ஜய: (புலித்தோலைக் காட்டி) இந்த புலித்தோலை நமக்குக் கொண்டுவந்து தரலே......அவர்தாம்ப்பா

[எடிட்டர் விஷயம் அறிந்து மெதுவாகச் சிரிக்கிருர். ராம்நாத்துக்கு தன் குட்டு வெளிப்பட்டதில் ஒரு அசட்டுச் சிரிப்பு]

ராம: (ஜய்ஸ்ரீயிடம் அதட்டியபடி) உம்...போ...போய் புலிக்குட்டிப் பாடம் படி....உம்.

ஜய: போங்கப்பா...நான் மாட்டேன்! வாசந்தி அக்கா இப்போ வருமுன்னு அம்மா சொன்னுங்க.

ராம: உங்களோட சப் எ்டிட்டர் விஜயனுேட சகோதரி தானே இந்த வாஸந்தி?

எடி: ஓஹோ விஜயனின் சகோதரியா? (எழுந்திருக்கிருர்)

ராம: என்ன, கிளம்பியாச்சா?

எடி: ஆமாம், கொஞ்சம் வேலையிருக்கு, வரட்டுமா?

ராம: நமஸ்.......

[தொப்பென்று புலித்தோல் கீழே விழ, 'நமஸ்தே' பாதியிலேயே நிற்கிறது.]

எடி: (திரும்பி சிரித்துக்கொண்டே) குண்டு சரியா படலேன்னு தோணுது.

[சிரித்தவாறு போகிருர்]

[அசட்டுச் சிரிப்புடன், அந்தப் புலித்தோலின் வாயை சற்று நேரம் முறைத்துப் பார்க்கிருர், வேட்டைக்கார மிஸ்டர் ராம்நாத்]

## காட்சி 4

**ராம்நாத் ட்ராயிங்ரூம்:**

[ரவி சீட்டி அடித்தபடி, அறையிலிருந்து வெளியே வருகிருன்; வாசந்தி தோட்டத்தில் வருவதைக் கண்டதும், ஓட்டமாகஓடி, கண்ணுடியின் முன்நின்று, தன் கிராப்பை, திரும்பவும் வாரிக்கொள்கிருன். வாசந்தியின் ஆடை அலங்காரம் ஒரு வண்ணுத்திப் பூச்சியைப்

போல "டிசைன்" செய்யப்பட்டிருக்கிறது. மிஸஸ் ராம்நாத் ஓடோடிச் சென்று அவளை வரவேற்கிறாள். ஜயஸ்ரீ எல்லையற்ற ஆனந்தத்துடன் துள்ளிக்குதித்தபடி,ஓடிவந்து வாசந்தியின் கையைப் பிடித்துக்கொள்ளுகிறாள்.]

**மிஸஸ்ராம்:** (ஜயஸ்ரீயைச் சுட்டிக்காட்டி) இந்த வாண்டு அஞ்சு மணியிலேருந்து, இந்த வாசற்படியிலேயே, உனக்காக நின்னு தவம் செய்ய ஆரம்பிச்சுட்டா.

**ஜய:** (முகம் சிணுங்கி) அஞ்சுமணியோ? நாலுமணியாக்கும்.

**வாஸ:** நான் என்ன செய்வேம்மா.........காலேஜ்லே இண்ணைக்கி ஒரு மீட்டிங் இருந்துச்சு.

**ஜய:** அக்கா, நீ ரொம்ப நல்லா பிரசங்கம் செய்வியாமல்ல?

**மிஸ:** (சிரித்து) பின்னே? விஜயனோட சகோதரியல்ல வாஸந்தி?

**ஜய:** அப்படின்னா காந்தி அண்ணியும் பெரிய பிரசங்கியா இருக்கணும் இல்லியா?

**மிஸஸ்:** காந்திமதியா........ஹூம், பாவம்!

**வாஸ:** (பெரிதாகச் சிரித்து) இப்படி ஒரு பட்டிக்காட்டுப் பெண்ணை என் அண்ணன் 'ஸெலக்ட்' செஞ்சாரே......அதைச் சொல்லுங்க.

**மிஸ:** அளவுக்கு மீறிய நாகரிகம்ன்னு நடக்கிறவங்களுக்கு இப்படித்தான் பெண்சாதி கிடைக்குற வழக்கம்.

[மிஸஸ் ராம்நாத் வாஸந்தி ஜயஸ்ரீ மூவரும் பேசியவாறே ட்ராயிங் ரூமுக்குள் வருகிறார்கள். வாஸந்தியை எதிர் பார்த்து, அங்கே மறைந்தவாறு காத்து நின்ற ரவி, ஒன்றும் அறியாதவன் போல 'மட மட' வென எதிரே வருகிறான். வாஸந்தியை கவனிக்

காமல் போவது போல அவன் பாவனை செய்தாலும், அவன் விருப்பம் எல்லாம் வாஸந்தியின் கவனத்தைக் கவர வேண்டும் என்பதே! வாஸந்தி இதை அறிந்து கொண்டு, ரவிமாத்திரம் பார்க்கும்படி அவனைக் கேலி செய்யும் வகையில் சிரிக்கிருள்]

**ஜய:** (சிரித்தவாறு) அம்மா, அக்கா சிரிக்குது.

**மிஸ:** ஏன் வாஸந்தி?

**வாஸ:** இண்ணக்கி காலேஜூலே ஒரு தமாஷ் நடந்துச்சு, அது ஞாபகம் வந்ததும் சிரிப்பு வந்துச்சு.

**ஜய:** அக்கா அண்ணாவும் இப்படித்தான். திடீர்னு பைத்தியம் போல சிரிக்கும். நானும் கூட சிரிச்சா, என்னை அடிக்கவரும்.

**மிஸஸ்:** ஆமாம் வாஸந்தி. ஏன் சிரிக்கிறேன்னு கேட்டா, இப்போ நீ சொன்னதைப் போலவே தான், காலேஜ்லே நடந்த தமாஷை நினைச்சு சிரிச்சேன்னு சொல்லுவான்.

**ஜய:** ஏனக்கா, ஸ்ட்ரைக் செய்றது தவிர, காலேஜ்லே இந்த தமாஷூங்க செய்றது மாத்திரந்தான் நீங்க கத்துக்கிட்டு வர்றீங்களா?

**மிஸ:** அதுக்குத்தான் இப்பப்போ காலேஜ் இவ்வளவு அடிபுடி!.......

[எல்லோரும் சிரிக்கிருர்கள்......பிறகு சோபாவில் அமர்ந்து டிபன் சாப்பிட ஆரம்பிக்கிருர்கள். கடிக்க முடியாதபடி ஒரு கேக் கடினமாக இருக்கிறது.]

**வாஸ:** என்னம்மா இது? இப்படிக் கல்லுமாதிரி இருக்குது?

**மிஸஸ்:** இது...சொன்ன கோவிச்சுக்க மாட்டியே.

**வாஸ:** என்ன?

மிஸ: "ஆண்களுக்கு மட்டும்" ங்குற பகுதியிலே, ஆண்கள் எப்படி கேக் செய்யனும்னு, நீ ரேடியோவுலே சொன்னீயல்ல, அதைக் கேட்டு செய்த கேக் தான் இது (சிரிக்கிறுள்)

வாஸ: (ரவி பக்கம் ஜாடையாகப் பார்த்து சிரித்து) ஆண்களுக்காக மட்டும் தானே நான் சொன்னது.

மிஸ: (கவனிக்காமல்) ஜயஸ்ரீ அப்பா எங்கே? துப் பாக்கியும் கையுமா தோட்டத்துலே நிப்பாரு...... வாஸந்தி இரம்மா, இதோ போய் அவரையும் அழைச்சுக்கிட்டு வந்திடுறேன்.

[மிஸஸ் ராம்நாத் எழுந்து போகிறுள். அவள் வர்ணித்த நிலையில்தான் மிஸ்டர் ராம்நாத். தோட்டத்தில் குறி பார்த்துக் கொண்டு நிற்கிறுர்)

(ரவி வராண்டாவில் இருந்தவாறு, தோட்டத்தில் துள்ளி விளையாடும் வண்ணாத்திப் பூச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கிறுன். அடிக்கொரு தடவை அவன் பார்வை உள்ளேயிருந்து வாஸந்தியிடம் தாவிக் கொண்டிருக்கிறது. இதைக் கண்டு அர்த்த பாவத்துடன் வாஸந்தி சிரிக்கிறுள்)

ரவி: (சிரிப்பைக் கண்டு) ரொம்பவும் துள்ளிக் குதிக் காதே வண்ணாத்திப் பூச்சியே...உன்னுடை இந்தப் பகட்டெல்லாம், கேவலம் புழுவுலேருந்துதான் வந்ததுங்குறது மறந்து போச்சா, என்ன?

[வாஸந்தி இதைக் கேட்டு, சற்றுக் கோபமாக எழுந்திருக்கிறுள்]

ஜய: எங்கேக்கா? (உரக்க) அம்மா இதோ பாரு அக்கா புறப்படப் பார்க்குது.

[வாஸந்தி எழுந்து நடக்கிறுள்]

மிஸஸ்: (வந்து கொண்டே) வாஸந்தி என்னம்மா, அவ்வளவு அவசரம்?

வாஸ: ஆமாம் அம்மா, பரீக்ஷை கிட்டே வந்துடுச்சு; வாசிக்கணும்.

ஜய: (சிரித்து) பரீக்ஷைன்னா, என் அண்ணனுக்கு முதல்லே தூக்கம்தான், வரும்.

மிஸ: இவ ஒருத்தி, பெரிய படிப்புக்காரி போலத் தான் பேசுகிறது!

ஜய: (வாஸந்தியிடம் மெதுவாக) என்னோடே அம்மா. அஞ்சாங் கிளாஸ்தான்-வெறும் அஞ்சாங்கிளாஸ்,

[ஜயஸ்ரீ, ஐந்து என்று தன் ஐந்து விரல்களையும் அழகாக மடக்கிக் கொண்டிருப்பதைக் கண்டு, மிஸஸ் சிரிக்கிருள்]

வாஸ: பின்னே, நான் வரட்டுமா?

மிஸ: அப்போன்னு சாயந்திரம் வாறியா? பீச்சுக்குப் போகலாம்.

வாஸ: சரி.

[வாஸந்தி இறங்கிப் போகிருள்; ரவி பார்த்துக் கொண்டிருக்கிருன்]

ஜய: (வாஸந்தி போனபிறகு) நல்ல அக்கா, இல்லே யாம்மா?

[இருவரும் உள்ளே போகிருர்கள்......]

மிஸஸ்: (சிரித்து) ஆமாம் பாட்டியம்மா.

[தோட்டத்தின் வழியே வாஸந்தி நடந்து போவதும், பக்கத்திலிருக்கும் பூந்தோட்ட புஷ்பங்களில் வண்ணத்திப் பூச்சி மாறி மாறி பறப்பதும்...தெரிகிறது. ரவியைக் கடந்து போகும்போது, கேலியாக நாக்கைவெளியே நீட்டி பழிப்புக் காட்டுகிருள்]

ரவி: (கோபமாக) அப்பா இந்த உலகிலே, கண்ட்ரோலுக்கு அடங்காத வஸ்து ஒண்ணு உண்டுன்னு, அது ஸ்திரீகளுடைய நாக்குத்தான்.

**வாஸ:** (போய்க்கொண்டே) இது மறந்து போச்சா, ஆண்களோட கண்ணு?

[வாஸந்தி சிரித்துக்கொண்டே போக, ரவி அதைப் பார்த்து நிற்கிறன்; அரத்தில் இரண்டு ஆட்டுக்குட்டிகள் சண்டையிடுவது போலத் துள்ளி விளையாடுகின்றன]

## காட்சி. 5

**விஜயன் படுக்கை அறை**

[காலை-விஜயன் இன்னும் கட்டிலில் படுத்திருக்கிறன். காந்திமதி, குளித்து பின்னப் படாத கூந்தலுடன், ஒரு அலங்காரமில்லாம லிருக்கிறள். :படத்துக்குப் பூமாலை போட்டபிறகு, நமஸ்காரம் செய்து கொண்டிருக்கிறள்]

**விஜ:** (கட்டிலை விட்டிறங்கி) என்னுடை லீவெல்லாம் தீர்ந்து போச்சு காந்தி.

**காந்:** (திடுக்கிட்டு) இவ்வளவு சீக்கிரமாகவா?

**விஜ:** ரெண்டு வாரமில்லே — கல்யாணத்துக்கு இதை விட அதிகமா, ஒரு பத்திரிகை ஆபீஸ்லே லீவு தருவாங்களா?

[காந்திமதி வருத்தந்தோய்ந்து மௌனத்துடன் அவனைப் பார்க்கிறள்]

**விஜ:** இன்னிக்கு சாயந்திரம் ஆபீஸுக்குப் போகணும்...அடடே, நீ ஏன் வருத்தப் படணும்? தனியாயிருக்கிறது கஷ்டமாயிருந்தா, சாயந்திரம், நீ கிளப்புக்கு போயிட்டுவா.

**காந்:** கிளப்பா?

**விஜ:** (சிரித்து) காப்பி கிளப்பல்ல காந்தி, நம்ப "ரெயின்போ" கிளப்.

**காந்:** (மௌனம்)

**விஜ:** காந்தி, இங்கேபாரு நீ இனியும் லக்ஷிமிபுரத்துக் கிராம லக்ஷிமி இல்லே—விஜயனுடை மனைவி 'ஸொஸைட்டி'யிலே பழகப் படிச்சுக்கணும்.

**காந்:** (மெதுவாக) ம்

**விஜ:** என் சிநேகிதருங்க இப்பவே பரிகாசம் செய்ய ஆரம்பிச்சுட்டாங்க என்னை.......

**காந்:** பரிகாசமா?...நான் என்ன தப்பு செய்றேன்?

**விஜ:** ஒரே ஒரு தப்புத்தான் செய்யிறே

[காந்திமதி ஒன்றும் புரியாது விழிக்கிறாள்]

**காந்:** காந்தி நாம் காலத்தோட சேர்ந்து வாழப்பழகணும் (சமீபத்தில் வந்து அணைத்து) இதோ பாரு காந்தி, இதென்ன விக்ரமாதித்யன் கதையிலே வருமே படங்க, அது போல அலங்காரம்? நீ வாஸந்தியைப் பார்க்கலே?

(காந்திமதி லஜ்ஜையோடு சிரிக்கிறாள்)

**விஜ:** காந்தி! மிஸஸ் விஜயன் கிட்டேதான் நாகரிகம் கத்துக்கணும்னு ஊரார் புகழ்ச்சியா சொன்னு, அது எனக்கு எவ்வளவு பெருமை?

(அவளிடம் அதே லஜ்ஜை கலந்த புன்சிரிப்பு)

என்ன, மறுபடியும் தலே குனிஞ்சுட்டே?...உம்... தலே நிமிர்ந்து...எங்கே.......சிரி.......ம்......சரின்னு சொல்லு.

**காந்:** (செல்லமாக) ம்....

[விஜயன் காந்தியை கட்டி அணைக்கிறான். இருவரும் ஜன்னல வழியே வெளியே பார்க்கிறார்கள். ஒன்றுக்கும் பலனில்லா குரோட்டன்ஸ் செடிகள் தெரிகின்றன)

## காட்சி 6

**கேசவபிள்ளை வீடு**

[கிராமம் — நல்ல மாந்தோட்டம் — ஒரு மரம் நிறைய பூவும் பிஞ்சும் — தொடர்ந்து பல கிராம காட்சிகள் - கேசவபிள்ளையின் வீடு— அவர் கஸரத் செய்யுமிடம்—கரலாக்கட்டை, குண்டு முதலிய கஸரத் சாமான்கள்]

**கேச:** (மேல்துண்டை எடுத்து வியர்வை துடைத்துக் கொண்டிருக்கிறார். கோவிந்தபிள்ளை வருவதைக் கண்டு) கோவிந்தபிள்ளையா? வரணும்...வரணும்...

**கோவி:** (கும்பிடுகிறார்—ஒரு சின்ன இருமல்)

**கேச:** எங்கே? ...ஏதாவது விசேஷம் உண்டா?

**கோவி:** ஒரு எக்ஸ்ரே எடுத்துப்பாத்தா என்னுன்னு தோணுது?

**கேச:** எனக்கு எதுக்குப்பிள்ளை எக்ஸ்ரே? (நெஞ்சில் தட்டி) இது நல்ல வயிரம் பாஞ்ச கட்டையில்ல?...

**கோவி:** ஐயோ அப்படித் தட்டாதீங்க. ........நுட்பமான இடம். எனக்கு ஏழு வயசுலே ஒரு தட்டு அந்த இடத்துலே விழுந்த பலன்தான், நான் இப்ப இப்படி நோயாளியா இருக்கேன்.

**கேச:** நீங்க நோயாளியா......?

**கோவி:** என் தேகநிலெ உங்களுக்குத் தெரியலெ. நான்னு எந்திரிச்சு நடக்கிறேன்—அவ்வளவுதான்.

**கேச:** பிள்ளை! நீங்க ஒரு கிறுக்கன் காணும்! ...உடம்புக்கு ஒண்ணுமில்லாமலேயே, சதா சீக்கு சீக்குன்னு — இது ஒரு பைத்தியம் உமக்கு...ம்...சரி, எந்திரிச்சி வெளியே வாங்க; நம்ப தோப்பு, துரவையெல்லாம் ஒரு நடை சுத்திப் பார்த்திட்டு வரலாம்.

(இருவரும் வெளியே போகிறார்கள். பல உரிய கிராம காட்சிகள், பின்னணியில் நாட்டுப் பாடல்கள் கேட்கின்றன.)

**கேச:** கோவிந்தப்பிள்ளே நான் சொல்றதைக்கேளுங்க- உங்க உடம்புக்கு ஒண்ணுமே யில்லே... ...

**கோவி:** (கெஞ்சி) ஐயோ இல்லேன்னு தயவு செய்து சொல்லிடாதீங்க-உடம்பு வர வர ரொம்ப ஒடுங்கிப் போச்சு.

**கேச:** சே...நான் சொல்றது போல செய்யுங்க. தினமும், ஒரு 101 பஸ்கி, தண்டால், நீங்க காலங்காத்தாலே எடுத்து வந்தா... ...

**கோவி:** நானு? (பயத்தால் இருமுகிறார்)

**கேச:** அப்புறம், கரலாக்கட்டை எடுத்து ஒரு 50 தடவை சுத்தினுப்போதும்.

**கோவி:** தீந்துச்சு, அப்புறம் நான் ஆளே இருக்க மாட்டேன்... இவ்வளவு பெரிய சீக்குக்காரன்....

**கேச:** (சிரித்து) சீக்குக்காரன்! நல்ல சீக்குக்காரனய்யா நீர்?

**கோவி:** போன பொங்கலுக்கு நான் ஒரு அம்மிக் குழவியை எடுத்து அப்பாலே வைக்க குனிஞ்சேன் பாருங்க...விலாவிலே டக்ன்னு ஒரு சத்தம் கேட்டுச்சு—அவ்வளவுதான்.

**கேச:** (சிரித்து) பாவம்

**கோவி:** இப்பவும் பொங்கல் வர்ற சமயத்துலே, விலாவுலே ஒரு சுவர் கோழி கத்துறது போல சத்தங்கேககுது! இனி பட்டணம் ஆஸ்பத்திரிக்குப் போகாட்டி எனக்கு வேற கதியே இல்லே.

**கேச:** ஏனய்யா; எப்பவும் ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரின்னு பேசுகிறீங்களே...நீங்க போகாத ஆஸ்பத்திரி இந்த உலகத்துலேயே கிடையாதா?

**கோவி:** (பெருமையாக) ஒண்ணும் கிடையாது.

**கேச:** (சிரித்து) ஏங்காணும், பெண்கள் ஆஸ்பத்திரிக்கும் நீங்க போனதுண்டா?

**கோவி:** நான் பிறந்ததே அங்கேதானே.

**கேச:** (பேச்சை மாற்றி) பிள்ளே! நான் பட்டணத்துக்கு போகணும்னு நெனேச்சிருக்கேன். என் மக காந்திமதியைப் பாத்து ரொம்ப நாளாயிடுச்சு.

**கோவி:** நானும் அதைச் சொல்லத்தான் இப்போ வந்தேன். பேச்சு வாக்குலே காரியத்தை மறந்துட்டேன்.

**கேச:** என்ன காரியம்?

**கோவி:** நாம நினேச்சதுபோல அல்ல விஜயன். அவர் ஒரு நாகரிக பித்தர்.

**கேச:** அதனுலேதானே, அவர் எல்லாருக்கும் ரொம்ப வேண்டிய ஆசாமியா இருக்கார்...

**கோவி:** அது சரி...ஆனு நம்ப பெண்ணுக்கு அவ்வளவு நாகரிகம் தெரியாதேன்னுதான்.......

**கேச:** கோவிந்தப்பிள்ளே இந்தப் பகட்டும் நாகரிகமும் யாருக்கு வேணும்காணும்...ம்......ஆனு, புருஷன் இஷ்டப்படி நடக்கவேண்டியது பெண் ஜாதி கடமையாச்சே...

**கோவி:** அதை நான் காந்திமதிகிட்டே, நேரா, தெளிவாச் சொல்லிவிடுறேன்.

**கேச:** அப்போ நீங்களும்கூட வர்றீங்களா?

**கோவி:** வரவேண்டி இருக்குதே; ஆஸ்பத்திரியிலே ஒரு இன்ஜெக்ஷன் போட்டுக்கணும். இந்தகாலத்துலே இன்ஜெக்ஷனுக்கு அடங்காத வியாதியே கிடையாது. தலேவலிக்கு இன்ஜெக்ஷன்,வயிற்று வலிக்கு இன்ஜெக்ஷன்; காது வலிக்கு இன்ஜெக்ஷன்; பிள்ளேபெத்துக்க இன்ஜெக்ஷன்.........

**கேச:** பின்னே, நீங்க பிரயாணத்திற்கு தயாரா வாங்க· ரெண்டு பேரும் சேந்து போவோம்.

**கோவி:** அப்படி விசேஷமா தயார் செய்யவேண்டியது ஒண்ணுமில்லே - ஒரு ஆறு அவுன்ஸ் மருந்து குடிக்கணும். அதுவும் மடியிலேயே தயரா எடுத்து வந்திருக்கிறேன்.

[மடியில் 7, 8 பாட்டில்களிருக்கின்றன. ஒரு அவுன்ஸ் கிளாஸை எடுத்து 3, 4 பாட்டில்களிலுள்ள மருந்தைக் கலக்கிக்குடிக்கிருர்]

[இருவரும் கிராமத்தைச் சுற்றி வீடு பக்கம் வருகின்றனர்]

**கேச:** நீங்க கொஞ்சம் உக்காருங்க, குளிச்சுட்டு வந்துடுறேன். நீங்க குளிச்சாச்சா?

**கோவி:** ஒருநாள் காலங்காத்தாலே குளிச்சதுலேஎனக்கு பிடிச்சிது டபுள் நிமோனியா—அதிலேருந்து....

**கேச:** (சிரிக்கிருர்) உங்க சீக்குக்கெல்லாம் இப்பல்ல காரணம் புரிஞ்சுது. மாஸம் ஒருதடவை குளிப்பீங்களா?

[ஒருபஸ் மிசவும் ஓவர்லோடாக போகிறது]

**கோவி:** ஐயோ இந்த பஸ்ஸிலே போகணும் நெனேச்சாலே....ம்....நடந்தேகூட போயிடலாம்.

## காட்சி 7

**ராம்நாத் ட்ராயிங் ரூம்:**

[வாஸந்தி "ராமபாணம்" பத்திரிகை வாசித்துக் கொண்டிருக்கிருள்]

**வாஸ:** "ரெயின்போ கிளப்" பின் 5-வது ஆண்டு விழா! அதிவிமரிஸையாக கொண்டாட வேண்டுமென்று ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. பலவகையான கேளிக்கைகளும், நாடக நடனங்களும், இசை நிகழ்சிகளும் நடக்கும். முதல் தினத்தன்று......

ஜய: அக்கா உன்னோட 'டு' — (முகத்தைத் திருப்பிக் கொண்டு விரலை மடக்கி டு என்று காட்டுகிருள்)

வாஸ: (சிரித்து) காரணம் என்னம்மா?

ஜய: என்னைவிட இந்த நியூஸ் பேப்பர்தானே உனக்கு பிடிச்சிருக்கு.

வாஸ: யாரு சொன்ன அப்படி?

ஜய: அண்ணாத்தான்.

வாஸ: அண்ணாவுக்கு வேறென்ன வேலை?

ஜய: இந்த பேப்பரை அண்ணாகிட்டே கொடுத்துட்டு வந்துடுறேன் — நாம பேசிக்கிட்டு இருப்போம்.

வாஸ: (மெதுவாக அபிநயத்துடன்) உன் அண்ணா அடுத்த ரூம்லே இருக்கிருரா?

ஜய: ஆமாம் (மெதுவாக சிரிப்பை அடக்கிக்கொண்டு) பரீக்ஷைக்கு படிக்குது!

[ஜயஸ்ரீ பேப்பரைக் கொண்டுபோய் அடுத்த அறையிலிருக்கும் ரவியிடம் கொடுக்கிருள்]

ரவி: சே! 'கிளப்' பும் ஆண்டுவிழாவும்! இந்த ஊர்லே சில வனிதாமணிகளுக்கு இதே தொழிலாபோச்சு (பேப்பரை வீசி அடிக்கிருன்)

ஜய: ஐயோ, நான் என்ன செஞ்சேன் அண்ணா?

ரவி: உனக்கும் வயசானு, இதைவிட அதிகமாகத்தானிருப்பே.......

[ஜயஸ்ரீ வாஸந்தியிடம், சிரிப்பை அடக்கியபடி ஓடிவருகிருள்]

ஜய: (மெதுவாக) அண்ணனுக்கு மூக்குமேலே கோபம்.

வாஸ: (உரக்க) கோவந்தானே இருந்துட்டுபோகட்டுமே.

ஜய: (மெதுவாக) அக்கா

வாஸ: ( ,, ) என்ன ஜயஸ்ரீ?

ஜய: ( ,, ) ஒரு.......

வாஸ: ( ,, ) ஒரு?

ஜய: ( ,, ) ஒரு பாட்டு பாடனும்

வாஸ. ( ,, ) பாட்டா?

ஜய: ( ,, ) பாட்டைக் கேட்டா, அண்ணாவுக்கு இன்னும் சரியான கோபம் வரும்.

வாஸ: அப்போன்னா சரி.......

[ஒரு தலைகாணியை எடுத்து, தன் ரிப்பனால் அதன் ஒரு மூலையில், கட்டி, அதை ஒரு முகம் போல செய்து, ரவியோட புஷ்கோட் போடுகிறாள். இது செய்தவாறு, இருவரும் பாடவும் செய்கிறார்கள். அடுத்த அறையிலிருந்து ரவி ஜன்னல் பக்கம் நின்று பாட்டை கேட்கிறான்.]

ரவி: (பாட்டு நின்றதும்) உலகத்திலே பல இடங்கள்ளே பஞ்சம் பஞ்சமுன்னு சொல்றப்போ-அதுக்காக நம்ம தலைவருங்க தலைகீழா ததிங்கணதோம் போடுறப்போ-இங்கே சில மாதர் மணிங்க-பாஷனுக்குப் பின்னாலே........

[ஜன்னல் கதவை மெதுவாகத் திறந்து]

பாட்டும் கூத்துமே கதின்னு - (ஜன்னலை இன்னும் திறந்து) டான்சும் ஸினிமாவும் விடிமோக்ஷமுன்னு (இன்னும் திறந்து) பணத்தை பாழாக்கி.........

[ஜன்னல் முழுவதையும் திறந்து பார்க்கிறான்-ஹாலில் யாருமில்லை - வாஸந்தியும் ஜயஸ்ரீயும் போய்விட்டார்கள் - அந்தப் பொம்மை இவனைப் பார்த்து சிரிப்பதுபோல் நிற்கிறது. அக்கம் பக்கம் பார்த்து, சீக்கிரமாகப்போய், அந்தத் தலைகாணியிலிருந்து ரிப்பனை எடுத்து பத்திரப்படுத்திக் கொள்கிறான்.]

## காட்சி 8

**விஜயன் வீட்டுத் தோட்டம்:**

["ராமபாணம்" பத்திரிகையைக் கொண்டுவந்து]

**காந்:** இதோ பாத்திங்களா, நம்முடைய மந்திரி ஒரு அணைக்கட்டுக்கு அஸ்திவாரம் போட்டிருக்காரு.

**விஜ:** மந்திரிங்க குறுக்கிட்டாலே எந்தக்காரியத்துக்கும் அணைக்கட்டுன்னுதானே அர்த்தம்!

**காந்:** எவ்வளவு பெரிய அணை தெரியுமா?

**விஜ:** (சலித்துக்கொண்டு) அப்பா! அப்பா!.......

**காந்:** ..............................

**விஜ:** உன்னோட கொஞ்சம் ஹாய்யா உக்காந்தா இதென்ன பேச்சு காந்தி? இங்கேயும் எனக்கு ஆபீஸ் ஜோலிதானு?

**காந்:** (பயந்து) இந்த அணை பூர்த்தியானு எவ்வளவு ஆயிரம் ஏக்கர் சாகுபடியாகுந்தெரியுமா?

**விஜ:** ம்...(மெதுவாக) நல்ல மகராசியம்மா நீ! (தலையில் கையைவைத்துககொள்கிருன்)

**காந்:** (திடுக்கிட்டு) ஐயோ தலைவலியா-இதோ, 'பாம்' கொண்டுவரட்டுமா?

**விஜ:** அதெல்லாம் ஒண்ணும் வேணும்... ஹூம்! பெண்டாட்டின்னு வயறு நிறைய சோறு போடவும், பாம் தடவவும்னுதான் உன் நினைப்பு!......கொஞ்சமாவது நாகரிகம் வேணும்?

[விமல் வருகிருன் — கையில் வேறெரு மேக் சிகரெட் டின்—ப்ளேயர்ஸ்]

**விஜய:** யார்? விமல்?

**விம:** (காந்திமதியைப் பார்த்தவாறு) ஆண்டு விழா தயாரிப்பெல்லாம் எப்படி யிருக்குது?

விஜ: யாரை கேக்குறே விமல்?

விம: "ரெயின்போ கிளப்"பின் இந்த ஆண்டு விழாவுலே, காந்திமதி விஜயன் பெரிய பங்கு எடுத்துக்கணும்னு—எல்லாரும் எதிர்பார்க்குறுங்க!

காந்: (விஜயனைப் பார்க்கிருள்)

விம: இந்த ஆண்டு விழாவிலே வாஸந்திக்கு ரொம்ப ரொம்ப உற்சாகம்—எவ்வளவு தீவிரமா வேலே செய்யுது தெரியுமா?

விஜ: அவ என்னேட சகோதரி.

விம: இவுங்க மாத்திரம்? உன்னேட—உன்னேட—உன்னேட.

விஜ: உம, சொல்லு விமல்—இவ, என்னேட பட்டிக் காட்டு மனைவின்னு சொல்லு.

விம: இல்லே, நீ ரொம்ப தப்பான அபிப்பிராயத் தோடு சொல்றே விஜயன். உன்னேட பெட்டர் ஹாஃப் இவுங்க! நம்மை எல்லோரையும் விட, இவுங்க நாகரிகமடைவாங்க. நீன்னு பார்!

விஜ: (அலுப்புடன்) அதுவும் பாக்கத்தான் போறேம்!

[வாஸந்தி தலைநிறைய மலர்களுடன் தோட்டத் தில் மலர்ந்திருக்கும் ரோஜாச்செடிகள் பக்கம் போகிருள்.]

விம: (வாஸந்தியை நோக்கி மெதுவாக) பூ கொஞ்சம் அதிகமாயிடுச்சி!

விஜ: (அதைக் கவனியாமல்) காந்தி, விமல் சொன்னதைக் கேட்டியா? எனக்குத் தகுந்தமனைவி தான்னு எல்லாரும் சொல்றப்போல, நீ எனக்குப் பேர் வாங்கித்தரணும்; ஞாபகத்துலே வச்சுக்கோ.

விம: (சிரித்துக்கொண்டு) ஆண்டு விழாவுக்கு இன்னும் அதிக நாளில்லே........அதையும் ஞாபகத்தில் வச்சுக்கணும்... ...

(விமல் காந்தியைப் பார்த்துச் சிரிக்கிருன்)

[ஊரில், பாஷன் உலகில், எங்கும் பரபரப்பு. எல்லோரும் பல வகையில் மேக்அப் செய்து கொள்ளும் காட்சிகள். மிஸ் மியூரா, மிஸ் ஹம்ஸா, மிஸ் அஷ்டமுடி சரோஜம் முதல் மிஸ்டர் எச்ஸ் வரையில், எல்லோரிடமும் ஒரு கோலாகலம்—என்ன செய்கிருேம் என்று அறிந்துகொள்ளாமலேயே வேஷம் போட்டுக் கொள்கிருர்கள்.]

## காட்சி 9

**விஜயன் டிராயிங்ரும்**

[வாஸந்தி மிகவும் பிரமாதமான பாஷனுள்ள தோரணையில் அலங்காரம் செய்து கொண்டிருக்கிருள். 'வானிடிபாக்' எடுத்துத் தன் அழகை சீர்திருத்த முயற்சிக்கிருள்.]

[காந்தி, ஒரு குடும்பப் பெண்ணுக்கு வேண்டிய அலங்காரத்துடன் காணப் படுகிருள். வாஸந்தி அதைக்கண்டு, மெதுவாகத் தனக் குள்ளே சிரிக்கிருள். அந்தச் சிரிப்பை மறைக்க அவள் வளர்க்கும் மீனகள் உள்ள ஜாடியிடம் குனிந்து கொள்கிருள்.]

**வாஸ :** கௌரி நாங்க இப்போ 'கிளப்'க்குப் போகணும். கதவெல்லாம் சாத்திடு! வீட்டை பத்திரமா பாத்துக்கோ....

**கௌ :** ஐயோ, இதென்னமா தலையைச்சுத்தி முத்தை கட்டியிருக்கே?

**வாஸ :** அது எப்படியிருந்தா உனக்கென்ன?

**கௌ :** (காந்தியைக் காட்டி) இந்தாம்மா வாஸந்தி, சொல்றேன்னு கோவிக்காதே—இதோ பாரு உன் அண்ணியை—முத்து மூக்குத்தியும், வைர மாங்கா மாலையும் போட்டுக்கிட்டு மகாலக்ஷிமிபோல...

வாஸ : (கௌரி மாத்திரம் பார்க்கும்படி மஹாலக்ஷிமி போல பாவம் பிடித்து) உங்க கிராமத்து மகாலக்ஷிமி, முத்தும் வைரமும் போட்டுக்கிட்டுத்தான் தாமரையிலே உக்காந்திருக்கா, இல்லே?

கௌ : (இதைக் கவனியாமல்) பெண்களுக்கு லக்ஷணம் இதுதாம்மா?

வாஸ : (சிரித்து) ஆனு, இப்போ எங்க லட்சியம் என்ன தெரியுமா? உன்னைப்போல கர்நாடகங்களுக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டியதுதான்.

[விமல் வருகிருன். அவன் வில்ஸ் சிகரெட் எடுக்கு முன்பே கௌரி தீப்பெட்டியைக் கொடுக்கிருள்.]

விம : (சிரித்து) கொஞ்ச நேரத்துக்கு முன்னுலே போன் செய்தேன்.

வாஸ : சரி...சரி...நீங்க கிளப்புக்கு வந்து என் அண்ணு கிட்டே எல்லாம் சொல்லுங்க.

[விஜயனின் நிர்ப்பந்தத்தின் பேரில், காந்திமதி 'ரெயின்போ கிளப்' ஆண்டு விழாவிற்குப் போகிருள். வாஸந்தியும், மிகவும் ஆடம்பரமாக உடுத்துக்கொண்டு, உடன் போகிருள் என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை.]

## காட்சி 10

### ரெயின்போ கிளப்

[ஆண்டு விழா — "காமன் எரிந்தால்" என்ற டான்ஸ் ட்ராமா நடக்கிறது. கடைசியில் சில 'செக்ஸி குளோஸப்' வருகிறது. இதைக் கண்ட காந்திமதி மிகவும் லஜ்ஜையுடன் ஒடுங்கியவாறு உட்கார்ந்திருக்கிருள் — விஜயன், இவள் கோலத்தைக் கண்டு, ஸதஸில் இப்படி நடந்து கொள்ளுகிருளே என்று கோபப்படுகிருன்—அப்போது காந்தி அவனை

மெதுவாகக் கூப்பிடுகிறாள்—விஜயன் கவனியாதவனைப்போல் பாவனை செய்து, திரும்பாதிருக்கிறான். அவள் அவனை மெதுவாக தட்டுகிறாள் — கடைசியில், கோபத்தோடு விஜயன் அவளைப் பார்க்கிறான்.]

**காந் :** (மெதுவாக) போகலாம்!

**விஜ :** ஷ்!

**காந் :** வீட்டுக்கு........

**விஜ :** (வெறுப்பும், கோபமும் கொண்ட பார்வையோடு) சே!... ...

[சதஸில் அது கேட்கிறது. சிலர் திரும்பிப் பார்க்கிறார்கள்.]

**காந் :** ஐயோ போகலாமே.

**விஜ :** எங்கே?

**காந் :** வீட்டுக்கு...எனக்கு இந்த காட்சிங்க காணச் சகிக்கலே.

[அங்கிருந்தவர்களுக்கு, இவர்களது மெதுவான சம்பாஷணை பிடிக்காததால் 'பிஷ்' போன்ற பல சப்தங்கள் கேட்கின்றன. விஜயன் இதை மிகவும் அவமானமாக எண்ணி காந்தியை பலமாகப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியே வருகிறான்.]

**எக்ஸ் :** (அவன் போகுமுன்) ஸிட்டௌன் ப்ளீஸ்!

[விஜயன் 'ஆடிட்டோரி'யத்தை விட்டு, வெளியே காந்திமதியுடன் வருகிறான்.]

**விஜ :** (கோபத்தோடு) காந்தி உன்னைக் கூப்பிட்டு வந்ததுக்கு, எனக்கு நல்ல பாடம்!

**காந் :** (மெதுவாக) என்னாலே இதெல்லாம் காண முடியலே.

**விஜ :** (கோபமாக) இங்கே வந்திருக்கிறவுங்க எல்லாம் மனுஷங்க இல்லே...நீ ஒருத்திதான்...

**காந் :** நாம் வீட்டுக்கு போயி பேசுவோமே.

**விஜ :** வீட்டிலேயே அடைஞ்சி கிடக்கிறதுதானே உன் ஜீவிய லக்ஷியம்.

**காந் :** (தலைகுனிந்தபடி மௌனமாக நிற்கிறாள்)

**விஜ :** நினைக்கிறப்போ உள்ளே போகவும், வேண்டா தப்போ வெளியே வரவும், இது கிராமத்துப் பிள்ளையார் கோவில் இல்லே.

(விமல் வஞ்சகப் புன்முறுவலுடன் வருகிறான்.)

**விம :** (சிரித்து) என்ன, ரெண்டுபேரும், ஒரு 'வாக் அவுட்' நடத்திட்டீங்க?

**விஜ :** ம்...வந்து...வந்து...

**விம :** இல்லே, நீங்க ரெண்டுபேரும் வெளியே புறப் பட்டதைக் கண்டுதான் நானும் வந்தேன்.

**விஜ :** விமல் இங்கே கொஞ்சம் நில்லு—இதோ நான் போய், செக்ரட்ரி கிட்டே ஒரு வார்த்தை சொல்லிட்டு வந்திடுறேன்...ம்...மானர்ஸ் இல்லாம நடந்துகிட்டாச்சு......

[சொன்னவாறே பதிலை எதிர்பாராமல் விஜயன் உள்ளே போகிறான்.]

**விம :** (கையிலிருந்த சிகரெட்டை விட்டெறிந்து) சே! டான்ஸாம் டான்ஸு! இப்படியும் உண்டா ஒரு ஆபாசம்? காமன் எரிஞ்சுபோன பிறகு ரதி இந்தக் கோலத்திலேயா நிப்பா?

**காந் :** (மௌனம்)

**விம :** இந்தக் 'காமதகனம்' ஒரு தேசத்திலேயும் நடந்த தில்லே மிஸஸ் விஜயன்.

**விஜ :** (வந்துகொண்டே, காந்தியை நோக்கி போகலாம் என்ற வகையில் கோபமாகத் தலையை ஆட்டிக் கொண்டு) உம்...(திரும்பி) நீயும் வருகிறாயா விமல்.

விம : வருவேன்.........ஆனு நம்ம ரெண்டு பேரும் போயிட்டா........

விஜ: அதுசரி.......(விஜயன் காரிலேற, காந்திமதியும் காரில் உட்காருகிருள்- கார் மிகவும் வேகமாகப் புறப்பட்டு போகிறது)

## காட்சி 11

**விஜயன் வீடு**

[வீட்டு போர்டிகோ முன், கார் ஆங்காரமாக வந்து நிற்கிறது. கதவைத்திறந்து காந்திமதி இறங்குகிருள். விஜயனும் கதவை திறக்க, காரில் உள்ளே உள்ள லைட் எரிகிறது. அந்த வெளிச்சத்தில் அவன் முகம் கடுமையாகத் தெரிகிறது. காந்திமதி பரிதாபமாகப் பார்க்கிருள். விஜயன் கார் கதவை படாரென அடைக்க உள் லைட் அணைகிறது. விஜயன் முகம் இருட்டில் மறைகிறது]

விஜ: உம்...இப்போ சமாதானமா போச்சா?

[கார் ஸ்டார்ட் செய்கிருன்]

காந்: நீங்க?

விஜ: (கோபமாக) நீங்க.........இவுங்க, இங்கேயே வீட்டுக்குள்ளே உக்காந்து கிட்டு, உங்களோட பேசிப் பேசி ரஸிக்கப் போருங்க.

[கார் புழுதி கிளப்பியபடி வேகமாக மறைகிறது. அவன் கார் விட்ட வேகத்தில், அங்கிருந்த துளசிச் செடியும் ஆடுகிறது, காந்தி வருத்தமுடன் வராண்டாவின் தூணில் சாய்ந்தபடி நிற்கிருள். கௌரி வருகிருள்)

கௌ: அம்மா

காந்: (கண்ணீர் ததும்பும் கண்களுடன்) கௌரி!

கௌ: ஏம்மா எங்கே அவரு?

காந்: போயிட்டாரு.

கௌ: எங்கே?

காந்: (மௌனம்)

கௌ: பாட்டும் கூத்தும் முடிஞ்சுடுச்சா?

காந்: இன்னும் இல்லே (ஒரு துள்ளி கண்ணீர் சிதறி விடுகிறது)

கௌ: (தாமதித்து மெதுவாக) உள்ளே போகலாம் வாங்க (காந்திமதி கண்ணீரைத் துடைத்தபடி கௌரியுடன் உள்ளே போகிறாள். துளசிச்செடி ஆடிக்கொண்டிருக்கிறது)

## காட்சி 12

**விஜயன் வீடு**

(அதிகாலே-காந்தி மயங்கிப் படுத்தவள், கண் விழித்துப் பார்க்கிறாள். பக்கமிருந்த விஜயன் படுக்கையில், அவனைக் காணவில்லை. ஜன்னல் வழியே வாஸந்தியின் அறையைப் பார்க்கிறாள். வாஸந்தி 'மேக் அப்' மும்மரத்தி லிருக்கிறாள். மெதுவாக 'ஹம்' செய்து கொண்டிருந்தவள், ஆனந்தமாக, முதல் நாள் 'கிளப்' விழாவில் பாடப்பட்ட ஒரு பாட்டைப் பாடியவாறே, வெளியே புறப்பட ஏற்பாடு செய்கிறாள். காந்திமதியின் பார்வை தெருபக்கம் போக அவள் தந்தை வருவது தென்படுகிறது. அவள் சஞ்சலம் தற்காலிகமாக நீங்க மனம் குதூகலமடைகிறது.

காந்: (கண்களைத் துடைத்தபடி) அப்பா?

கேச: காந்திமதி..........சௌக்கியமா அம்மா? (உள்ளே வந்து) ஏயப்பா இந்த பஸ் பிம்யாணம் (கண்ணீரைக் கண்டு) ஹா என்னம்மா அழுதுகிட்டிருந்தயா?

**காந்:** (லேசாகச் சிரிந்து) ஒண்ணும் மில்லேப்பா.........

**கேச:** விஜயன் எங்கேம்மா?

**காந்:** வெளியே போயிருக்காரு அப்பா.

**கேச:** இவ்வளவு காலங்காத்தாலேயா? காந்தி குடிக்க ஏதாச்சும் கொடம்மா.........ஒரே தாகமாயிருக்கு.

**காந்:** இதோ கொண்டு வர்றேன் அப்பா, கௌரி இங்கே பாரேன், அப்பா வந்திருக்காங்க. சீக்கிரமா காப்பி கொண்டுவா.

**கேச:** விஜயன் எங்கேயாவது வேலையா போயிருக்காரா அம்மா?

**காந்:** ஆமாம். ஏனப்பா, தனியாகவா வந்தீங்க?

**கேச:** இல்லேம்மா.............நம்ம கோவிந்தப்பிள்ளையும் வந்திருக்காரு.

**காந்:** மாமாவுமா வந்திருக்காங்க? எங்கே அவரு?

**கேச:** (உரக்க) கோவிந்தப் பிள்ளே உள்ளே வாருங் காணும்.

[கௌரி காப்பி கொண்டு வந்து வைக்கிருள்.]

**கேச:** (இன்னும் உரக்க) ஏ கோவிந்தப்பிள்ளே!

**கோவி:** (தூரத்தில்) இதோ வந்துட்டேன்.

**காந்:** (கோவிந்தப் பிள்ளையைக் கண்டு, புன்னகையுடன் கைகுவித்து) நமஸ்காரம் மாமா...உள்ளே வாங்க, ஏன் வெளியே உக்காந்திட்டீங்க?

**கோ:** (இருமலோடு) எனக்கு உடம்பு சுகமே யில்லேம்மா·

**காந்:** அதுக்கு உள்ளே வரக்கூடாதா மாமா (சிரிக்கிருள்)

**கோ:** இல்லே, வெயில்லே நடந்துட்டு, டக்னு இருட்டுலே வந்தா- பார்வைக்கு ரொம்ப கெடுதலாம். கண்ணுலே கருப்புமணி இருக்குது பாரு, அதுலே ஒரு வெள்ளைமணி விழுமாம்.

**கேச:** ஏய்!... சும்மா இருங்காணும்!

[வாஸந்தி புல்மேக்கப்புடன் வெளியே வருகிருள்]

**வாஸ:** (சிரித்து) மாமா எப்போ வந்தீங்க?

**கேச:** (இவள் டிரஸைக் கண்டு) இதெல்லாம் என்னம்மா வாஸந்தி?

**வாஸ:** (அவர்களை இளக்காரமாக நினைத்துத் தனக்குள் சிரிக்கிருள்)

**கோவி:** இப்படியெல்லாம், வழக்கமில்லாத வழக்கமா, ஏதானுலும் செய்து வந்தா, ஏதாவது ஒரு புது நோய்லே கொண்டு விட்டுடும்மா......

**வாஸ:** (சிரித்து) நீங்க உஷாரா யிருக்கணும். என்னு... இந்தமாதிரி பேஷனயிருக்கப் பார்க்கிறது ஒரு தொத்து நோயாக்கும்.

**கேச:** (கௌரியைச் சுட்டிக் காட்டி) அதோ பாரு கௌரியை, காலையிலே எந்திரிச்சு குளிர்ந்த தண்ணியிலே நல்லா குளிச்சுட்டு; கூந்தலை இஷ்டம் போல, அள்ளி சொருகிக்கிட்டு.........

**வா:** (சிரித்து) காலணு அகலத்துக்கு காளியம்மன் மாதிரி குங்குமப் பொட்டை வச்சுக்கிட்டு... ஆஹா ஹா கௌரி போற போக்கைப் பார்த்தா, வர்ற வருஷம் அழகு போட்டியிலே அவ்தான் "மிஸ் இந்தியா"

[கௌரி சிரித்தபடி உள்ளே போகிருள். கோவிந்தப் பிள்ளையும், கேசவபிள்ளையும் வாஸந்தியை ஆச்சரியத்தோடு பார்த்தவாறு இருக்கின்றனர். வாஸந்தியின் 'அஜந்தா தலைக்கட்டும் பஞ்சாபி கோழியின் முதுகுப் பககமும், வலதுகை கடிகாரத்தோடு தொங்கிய மஞ்சள் வான்டி பாகும், பாம்புத்தோலால் செய்த உயரமுள்ள மிதியடியும் அவர்களுக்கு ஒரே வியப்பை அளிக்கின்றன.

## காட்சி 13

**ராமபாணம் பத்திரிகை ஆபீஸ்**

[பத்திரிகை ஆபிஸில் விஜயன் அறை அவன் பல தலையங்கங்கள் எழுதிக் கொண்டிருக்கிறான்]

**விஜ:** (எழுதுகிறான்) மனைவி உள்நாட்டிலாக்கா மந்திரி, தகப்பனார் கல்வி மந்திரி, மகள் அயலார் தொடர்பு, வேலைக்காரி மராமத்து, இப்படி நம் இலாக்காக்கள் இருந்தால்.......

[அதை அடித்துக் கிழித்தெறிகிறான்]

மூளை வேண்டும் — யாரைத் திருத்தவேண்டுமென்றாலும் மனைவியை திருத்துவதானாலும் மூளை வேண்டும்.

[இதையும் கோபமாக கிழித்துப் போட்டுவிட்டு மௌனமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அவன் ஆபீஸ் ஆட்கள் ஒவ்வொருவராக வருகின்றனர்]

**முதல் ஆசாமி:** மிஸ்டர் விஜயனுக்கு வேலையே ஓடலை...

**இ. ஆசாமி:** சே, இருந்தாலும் விஜயனோட......அவுங்க, இவ்வளவு கர்நாடகமா இருக்கக் கூடாது.

**மு. ஆசாமி:** மிஸஸ் விஜயனுக்கு ஏன் இவ்வளவு?

**இ. ஆசா:** (அவனருகில் சென்று மெதுவாக காதில் ஏதோ சொல்லுகிறான்)

**மு. ஆசாமி:** மிஸ்டர் விஜயன் நான் சொல்றேன்னு கோவிச்சுக்காதீங்க. அவுங்க தியேட்டரை விட்டு பாதியிலே அப்பாலே போனது மற்றபேர் அநாகரிகமென்று சொல்றாங்க.

(பத்திரிகை எடிட்டர் வர, எல்லோரும் அவரவர் ஸீட்டுக்குப் போகின்றனர்)

**விஜ:** நமஸ்தே!

எடி: (சிரித்தவாறே) நமஸ்தே...என்னை இனிமே எந்த ஆண்டுவிழாவுக்கும் போறதில்லென்னு மிஸஸ் ஸோடு சபதம் செய்துகிட்டீங்களாமில்ல? (வேடிக்கையாகச் சொன்னவாறே போகிறார். போகும் போது ப்யூன் தங்கப்பனிடம்) எப் எடிட்டர், 'எடிட்டோரியல்' எழுதியிருப்பார். நான் பாக்கணும்னு சொல்லு...

(எடிட்டர் போனதும் ஒரு சிலர் வாய் பொத்தி சிரிப்பதுபோல பாவனை செய்கிறார்கள். மற்றவர்கள் பரிதாபமாக விஜயனைப் பார்க்கிறார்கள்-விஜயனுக்கு மிகவும் அவமானமாகப் படுகிறது]

## காட்சி 14

### காந்தி வீட்டின் தோட்டம்

[தோட்டத்தில் பெஞ்சுகள் இருக்கின்றன. ராமநாத் தம்பதிகள், ஜயஸ்ரீ முதலானோர் காந்திமதியிடம் பேசிக் கொண்டிருக்கிறார்கள்]

மிஸஸ்: அதனாலே—காதுலே விழுதா காந்திமதி-நான் என்ன சொல்றேன்னு, காலத்தை அனுசரிச்சு அதுக்குத் தகுந்தாப்போல நடந்துக்க பழகிக்கணும்—(கணவனை நோக்கி) இல்லையா?

ராம: ஆமாம் இப்பப்போ, நீதான் கவனிச்சிருப்பியே, நானும் என்வேட்டை சம்பிரதாயங்களை பூராவும் மாத்திக்கிட்டேனே .........முன் காலத்திலே, ஒரு 'கன்ட்ரி' துப்பாக்கியை வச்சுக்கிட்டு....

மிஸ: உங்க வேட்டை விஷயமிருக்கட்டும். காந்திமதி, நீ கணவன் இஷ்டப்படித்தான், நடக்கணும்.

காந்: (தயங்கி மெதுவாக) அப்பா கூட, இவுங்க இஷ்டப்படித்தான் நடக்கணும்னு சொல்றாங்க. (விமல் வருகிறான்)

விம: (மெதுவாக வந்துகொண்டே) நமஸ்தே...

ராம: நமஸ்தே...வா...விமல்

விம: (காந்திமதியைப் பார்த்து) மிஸ்டர் விஜயன் 'பிரஸ் ஸுக்குப் போயிருக்காரா?

காந்: ஆமாம்...ம்....உக்காருங்க.

(விமல் உட்கார்ந்தபடியே, "சிகரெட்" டின்னை எடுத்து ஒரு சிகரெட்டை மிஸ்டர் ராமநாத னுக்குக் கொடுத்து, அதே சமயம் தீப்பெட்டி வேண்டுமென சைகை காட்டுகிறுன்)

ராம: (சிகரெட்டை வாங்காமல்) தாங்ஸ்...

விம: சிகரெட் பழக்கமில்லையா?

ராம: உண்டு, ஆனு, வேட்டைக்குப் போறப்ப மட்டுந் தான் ஸ்மோக் செய்வேன்.

விம: அது சரி...வாஸந்தி எங்கே? எல்லாம் ரெடிதானே?

ஜய: எதுக்கு மாமா?

விமல்: நாளைக்கு காலேஜ் 'பிக்னிக்' இல்லே? வாஸந்தி யும் வரணுமே.

ஜயஸ்ரீ: ஓ....பிக்னிக்கா?...ரவி அண்ணுவும் போனுரே.

ராம்: (சிரித்து) ரவி லேசுலே போறேண்ணு ஒப்பித்துக் கிட்டானு? அந்த புரொபஸர் என் சிநேகிதராச் சென்று, இவனை நானல்ல விரட்டவேண்டி இருந் துச்சு. இந்த ஒழுங்குலே இவன் காலேஜ் செக்ரடரி.

மிஸஸ்: ரவிக்கு, இதெல்லாம் அவ்வளவா பிடிக்கிற தில்லே.......

ராம: விமல் மாணவ மாணவிகளோட பிக்னிக் எல்லாம் உங்களுக்கு எப்படி தெரிஞ்சுது?

மிஸஸ்: (சிரித்து) இவருக்குத் தெரியாத விஷயம் ஏது?

விமல்: (சிரித்து) ...ம்...வாஸந்தி எங்கே?.......

காந்: இந்த பிக்னிக் விஷயமா, யாரோ சிநேகிதிங்க கூப்பிட்டாங்கன்னு....வெளியே போயிருக்குது.

விம: ஓ.......ம்......இந்தக் காலத்துப் பெண்ணுகளுக்கு வாழ்க்கையே ஒரு பிக்னிக்காப் போயிடுச்சு...சரி, விஜயனைப் பாக்கணும்....வரட்டுமா?

(அவன் போக, மற்றவர்கள் பார்க்கிறார்கள்)

## காட்சி 15

**விஜயன் அறை**

[ஆபீஸிலிருந்து வந்த பைல்களை மேஜைமேல் விட்டெறிந்து, 'ட்ரஸ்' மாற்றிக்கொண்டு வெளியே போகப் புறப்படுகிறான். அவன் பைல்களிலிருந்து ஒரு ஸினிமா 'பாம்ப்ளெட்' கீழே விழுகிறது.]

காந்: (பயந்து மெதுவாக) வெளியே போறீங்களா?

விஜ: (கோபமாக) பகல் பூராவும் மாடுமாதிரி உழைக்கிறவனுக்கு கொஞ்சம் ஓய்வு வேண்டாமா?

(ஒரு சிகரெட்டை பற்றவைத்துக் கொண்டு போகிறான்)

காந்: (கௌரி வருவதைக்கண்டு வருத்தமுடன்) அவர் வெளியே போயிட்டாரு கௌரி..........என்மேலே ரொம்ப கோவமாயிருக்காரு போலிருக்கு; நான் என்ன செய்வேன்?

கௌரி: (பாம்ப்ளெட்டை) அடே ஸினிமாவுக்கல்ல போறாரு போல இருக்குது.

[அந்த சினிமா புஸ்தகத்தில் சில 'ஸெக்ஸி' படங்கள் இருக்கின்றன.]

காந்தி: ஐயோ! இதெல்லாம் இவர் பாக்கப்போற ஸினிமாவுலேயா? இந்த கண்றாவியை எப்படித் தான் கண்ணாலே பாக்குறாங்களோ?

**கௌரி:** இதைக் காணத்தானே, ஆம்பிளைங்களும் பொம்பிளைங்களும் அடுக்கடுக்கா, போட்டிப் போட்டுக் 'க்யூ'லே நிக்குறாங்க.

**காந்:** பொம்பிளைங்களுமா? நல்லவிதி.

**கௌரி:** அவுங்கதான் அதிகமா போறாங்கம்மா. ஸினிமா வுக்கு வரிபோட்டதே இவுங்க கூட்டத்தை கண்டு தானே.

[காந்திமதி வருத்தமுடன் மௌனமாக இருக்கிறாள்.]

[மாணவ, மாணவிகள் ஒவ்வொருவரும் தங்கள் அலங்காரங்களை முடித்துக்கொண்டு 'பிக்னிக்' புறப்படுகிறார்கள்.]

**பெண்:** நம்முடைய எக்ஸ்பர்ட் கொஞ்சம் "லூஸ்" போலத் தோணினாலும், பாஷன்லே நல்ல ஞான மிருக்கு.

**மாணவர்-1:** என்னுடைய இந்த வலது காதைப்பாரு, என்ன லேட்டஸ்ட்டா மேக்கப்செஞ்சி விட்டுட்டாரு.

**பெண்-2:** (புரொபஸர் அறையின் பக்கந்திரும்பி) இந்த புரொபஸர் என்ன ஜென்மமோ? நேரம் எவ்வளவு ஆயிடுச்சி.

(புரொபஸர் அறையின் வெளிப்பக்கம்)

[புரொபஸர் மெதுவாக நடந்து வருகிறார்— தூரத்தில் மாணவ — மாணவிகள் நேரம் செல்வதைக் கண்டு பொறுமையற்று இருக் கின்றனர். புரொபஸர் வெளியே வந்து அறையைப் பூட்டுகிறார். சரியாகப் பூட்டப் பட்டதா என்று 4, 5 தடவை, பூட்டை இழுத்துப் பார்க்கிறார்.)

**புரொ:** (கம்பீரமாக) செக்ரட்டரி.

**ரவி:** எல்லாம் ரெடி ஸார்.

**புரொ:** இன்னிக்கித்தானே நாம் பிக்னிக் போக வேண்டிய நாள்?

ரவி: ஆமாம் இண்ணிக்கித்தான்....10-ந் தேதி.

புரொ: இன்னிக்கு 10 தானு தேதி? எனக்கு சந்தேகமாயிருக்குது.

[புரொபஸர் பூட்டைத்திறந்து அறைக்குள் சென்று, பனைமரம் போட்ட காலண்டர் ஒன்றில தேதியை பார்க்கிருர். ரவியும் பின் தொடர்ந்து அருகில் நிற்கிருன். தேதி 10 தானு என்பதைப் பார்த்து திருப்தியுடன் மறுபடி வெளியே வந்து, மறுபடியும், பூட்டை பூட்டி 5 முறை பூட்டியிருக்கிறதா என்று பூட்டை இழுத்துப் பார்க்கிருர்.]

புரொ: ஏன் ரவி நாம் பார்த்தது இந்த வருஷக் காலண்டரா?... இல்லே போன வருஷத்ததா?...... இல்லே வர்ற வருஷத்தோடதா?

ரவி: இல்லே ஸார்... இந்த வருஷந்தான்.

புரொ: எனக்கென்னமோ சந்தேகம். (மீண்டும் பூட்டைத் திறக்கிருர்.)

பெண்-2: நல்ல மனுஷன் இவர், ஒரு லெக்சர் பண்ற துக்குள்ளே ஒன்பது தடவை 'வெரிஃபை' செய்றது போலதான், இவர் காரியம்...

[பிக்னிக் போகவேண்டிய "வான்" வருகிறது பனை மரத்தடியில் நின்று கொண்டிருந்த புரொபஸர், அதை சைகை காட்டி நிறுத்துகிருர்.]

புரொ: நாம் போகவேண்டிய "வான்" இதுதானே.

ரவி: ஆமாம் ஸார்.

புரொ: நிச்சயமாவா?

["ஃபார ரிஜிஸ்ரேஷன்" என்று காரில் போட்டிருப்பதைக் கவனித்துப் பார்க்கிருர்.]

புரொ: "பிக்னிக்"க்கு எத்தனைபேர் போகிருேம்?

**ரவி:** முப்பது.

[வெளியே இருக்கும் மாணவ மாணவிகளை வானில் ஏறுங்கள் என்று ஆக்ஞை காட்டுகிறார்—எல்லோரும் காரில் ஏறுகிறார்கள்.]

**புரொ:** செக்ரட்டரி.

**ரவி:** ஸார்.

**புரொ:** எவ்வளவு பேர்? (பென்ஸிலைக் கொண்டு எண்ணுகிறார்.)

**ரவி:** முப்பது.

**புரொ:** ஆனா 3! இருக்குதே—(மறுபடியும் எண்ணுகிறார்) ரவி, ரமேஷ், பாஸ்கரன், ரமணி, கீதா, சுலோசனா, வாசந்தி, பானு, சுகந்தி...(உரக்க ஆச்சரியத்தோடு) முப்பத்தி ஒண்ணு...

(ரவியும் எண்ணுகிறான்.)

**ஒரு மாணவி:** அடடே இதாரு?

[எல்லாரும் அந்தப் பக்கம் பார்க்கிறார்கள்]

[மாணவிகளின் கூட்டத்தில் "மிஸ்டர் எக்ஸ்" பெண்ணைப்போல "மேக்அப்"புடன் உட்கார்ந்திருக்கிறார்.]

[புரொபஸர் அவனை எழுந்திருக்கும்படி கோபமாக ஜாடை செய்கிறார்.]

[அது பக்கத்திலுள்ள மாணவியைக் குறிக்கிறது என்ற முறையில் "எக்ஸ்பர்ட்" பக்கத்திலிருக்கும் மாணவியிடம் ஜாடை செய்தல்.)

**புரொ:** (கோபமாக) ஏய்...உன்னைத்தான்...ம் எழுந்திரு.

**எக்ஸ்:** என்னையா? என்னையா எழுந்திருக்க சொல்லுறீங்க...

[அசல் பெண்ணைப்போல வளைந்து பேசுகிறார். எல்லோரும் மெதுவாக சிரிக்கிறார்கள்.]

**புரொ:** கிளியர் அவுட் (புரொபஸர் அவனை வெளியே பிடித்துத் தள்ளுகிறார்.)

**எக்ஸ்:** (கீழே விழுந்து, லாவகமாக, ட்ரஸ்ஸில் மண்ணை தட்டிக் கொண்டே அசட்டு சிரிப்புடன்) ஒற்றைப் பாலத்துக்குத்தானே "பிக்னிக்"? அங்கே நேரே வந்துடுறேன். ஹி... ஹி...

**புரொ:** (கோபமாக) நோ நோ

[கதவை அடைக்கிறார்—வான் புறப்பட்டுப் போகிறது.]

[எக்ஸ் ர்ட் கீழே நின்றவாறே இடது கையை இடுப்பில் வைத்தபடி புன்சிரிப்புடன் கர்ச்சீப்பை ஆட்டி...]

**எக்ஸ்:** சியரியோ... சியரியோ.

[கார் புழுதி மண்டலத்தில் மறைகிறது. ]

**ஸீன் மாற்றம்**

[கௌரியும் காந்தியும் — காந்தி வருத்தமாக யிருக்கிறாள்.]

**கௌ:** என்னம்மா... நீங்க இப்படி சதா வருத்தமா இருந்தா?

**காந்:** (வருத்தமாக) என்னுடைய துன்பங்கள்ளேயே முதல் துன்பம் நான் பிறந்ததுதான். கௌரி!

**கௌ:** அம்மா நான் இப்படி உரிமையா பேசுறேனென்று தவறு நினைக்காதீங்க... இந்த உலகம் ஒரு கண்ணாடி போல. நாம சிரிச்சா, அது சிரிக்கும் அழுதா அதுவும் அழும்.

**காந்:** அவர் இன்னும் வரலேயே......

**கௌரி:** வந்திடுவாரு...... நீங்க காலையிலே இருந்து ஒண்ணுமே சாப்பிடலையே... ...ஏதாச்சும்......

**காந்:** அவரில்லாமலா? (பெருமூச்சும்) எங்கப்பா காலையிலே சொன்னதை நீ கேக்கலையா கௌரி! அவரோட இஷ்டந்தான் என்னோட இஷ்டமாயிருக்கணும்னு சொல்றாங்க.

**கௌ:** அது சரிதானேம்மா... ...

**காந்:** நான் இப்படி ஒரு பட்டிக்காட்டு பெண்ணு இருந்தா ......

**கௌ:** (மௌனம்)

**காந்:** கௌரி வாஸந்தியைப்போல நானும் பட்டண வேஷங்கட்டிப் பாக்கட்டுமா?

**கௌ:** சரியம்மா (சிரித்து) நான் கதவுகளையெல்லாம் அடச்சுட்டு வாரேன்.

[காந்திமதி நாகரிக ட்ரஸ், பொருத்தமின்றி செய்து கொண்டு கண்ணாடியின் முன்னின்று பார்த்துத் தன் கோலத்தைக்கண்டு வெட்கத்தால், கண்களை கைகளால் பொத்திக் கொள்கிறாள்]

## காட்சி 16

**ஒற்றைப்பாலம் பிக்னிக் :**

[பாலம்வழியே எல்லோரும் அக்கரை போகிறார்கள்-வாஸந்தி தயங்கித் தயங்கி அந்தப் பனைமரப் பாலத்தின்மேல் நடக்கிறாள். கால்தவறி கீழே ஆற்றில் விழுகிறாள். மாணவமாணவிகள் திடுக்கிட்டு ஓடிவருகிறார்கள் - ஒரு கலவரம்]

**எல்லோரும்:** புரொபஸர்.....புரொபஸர்......வாஸந்தி.....தி ஆற்றில் விழுந்துவிட்டாள்.

**புரொ:** (சற்றும் பதட்டமின்றி மூக்குக் கண்ணாடியைக் கழற்றி துடைத்துக்கொண்டு) உண்மைதானா?

**மற்றொரு பெண்:** ஆமாம் புரொபஸர்.

**புரொ:** (கம்பீரமாக) செக்ரட்டரி!

[இதை கேட்டவுடன், ரவி ஆற்றில் குதிக்கிறான்-விழுந்தவனைச் சற்று நேரம்வரை காணவில்லை-அவன் விழுந்த இடத்திலிருந்து 4, 5 குமிழ்கள் மாத்திரம் கிளம்புகின்றன. எல்லோரும்

கவலையுடன் பார்க்கின்றனர் - சிறிது நேரம் கழித்துரவியை இழுத்துக்கொண்டு, வாஸந்தி கரையேறுகிருள். எல்லா ஸ்டூடன்ஸ்களுக்கும் ஒரே சந்தோஷம். ஆர்வத்துடன் கைகொட்டி சிரிக்கிருர்கள். — இந்தச்சமயத்தில் பின்புற மிருந்து வந்துகொண் டிருக்கும் மிஸ்டர் எக்ஸ்பர்ட் தன் கைகளைத் தட்டிச் சிரிக்க, அந்த சப்தம் கேட்க மாணவர்கள் பின்புறம் திரும்பி, இன்னும் கொல்லென்று சிரிக்கிருர் கள்-இரு பக்கமும் மாறி மாறிப்பார்த்து, புரொபஸருக்குக் கோபம்வருகிறது.]

புரொ: ஸ்டாப்.

[மாணவ மாணவிகள் கர்சிபை வைத்து, வாய்மூடி சிரிப்பை அடக்குவதை போல பாவனை செய் கிருர்கள் - புரொபஸருக்குச் சந்தேகம்-கரை வந்த ரவியையும் வாஸந்தியையும், அவர்கள் தானுவென்று இருவரையும் உற்று உற்று கவனித்துப் பார்க்கிருர்]

## காட்சி 17

### காந்திமதியின் வீடு:

[கேசவபிள்ளை ஊருக்குப் போகத் தயாராகிருர்]

கேச: (கோவிந்தப் பிள்ளையைப் பார்த்து) என்னங் காணும், கிராமத்துக்குப் புறப்பட தயார்தானே?

கோவி: ஆமாம்; ஆனு அடுத்தமாசம் இங்கே மறுபடியும் வரவேண்டியதா இருக்கும்னு நினைக்கிறேன். இதோ பாருங்க......முதுகு பிடிச்சிருக்குதுன்னு ப்ளாஸ்டரு போட்டேன். இப்போ ப்ளாஸ்டரு பிடிச்சுக்கிட்டது. எவ்வளவு கழுகியும் போகலே— அதுக்காக டாக்டரைப் பாக்கணும்.

கேச: இதுக்கு டாக்டர் எதுக்குப் பிள்ளே? எங்கே திரும்பி முதுகைக் காட்டுங்க, இப்பவே நான்

உரிச்சி எடுத்து, உங்க கையிலேயே கொடுத்திட றேன்.

**காந்:** (வந்துகொண்டே) என்னப்பா இன்னிக்கே நீங்க புறப்படணுமா?

**கேச:** ஆமாம்மா நான் வரும்போது, நம்ப தேன் மாந் தோப்புலே பூவும் பிஞ்சுமா நிறைஞ்சி இருந்துச்சு. நானும் இங்கே வந்துட்டேன், இத்தனை நாளா அந்த ஊரு பசங்க தோப்பை என்ன கதியா வச்சிருக்குதோ?

**கோவி:** காந்திமதி நீ பயப்படாதே நான் இங்கே அடிக் கடி வரும்படியாயிருக்கும். எனக்கும் ஒரு 10, 12 ஊசி போட்டுக்கணும்.

**கேச:** (சிரித்து) ஒருபத்து ஊசியைக், கூடவே ஊருக்கு கொண்டு வாருங்காணும்.

**காந்:** ஏனப்பா, இவ்வளவு அவசரமா......

**கேச:** (சாந்தமாக) காந்திமதி அடிக்கடி சொல்றேன்னு நினைக்காதேம்மா புருஷன் இஷ்டப்படி நடக்க வேண்டியதுதாம்மா, பெண்களோட கடமை. கல் யாணமான பெண்ணுக்குக் கணவன்தான் தெய்வம்.

[கோவிந்தப்பிள்ளையைப் பார்க்கிறார்]

**கோவி:** இதுலே என்ன சந்தேகம்? நம்முடைய பண்பே அதிலேதானே அடங்கியிருக்குது?

**கேச:** நீ கணவனோட, சொல்லுக்கு கௌரவம் அளிக் கணும். இதைபத்தி விஜயன்கிட்டேயும் சொல்லி யிருக்கேன்-நீங்க ரெண்டு பேரும் மனமொத்து சந்தோஷமா வாழணுங்கிறதுதான் என்னோட பரி பூரண ஆசை.

**காந்:** (மெதுவாக) சரியப்பா.

**கோவி:** குழந்தைங்க சந்தோஷந்தானே நம்முடைய சந் தோஷம் - அதிலும் வியாதியில்லாத சந்தோஷம் இருக்கு பாருங்க, அது ரொம்ப உசத்தி (இருமல்)

## காட்சி 18

**காந்தி அறை:**

[இரவு 11 மணி-கணவன் வரவை எதிர்பார்த்து காந்தி காத்து நிற்கிருள்]

**கௌ:** இப்படி தினமும், கண்முழிச்சா, உடம்பு எதுக் காகும் அம்மா?

**காந்:** (வருத்தமாக) அவர் இப்போ என்ன செய்துக் கிட்டிருக்கிருரோ?

**கௌ:** இப்பவே உங்க உடம்பு மோசமாயிருச்சு......

**காந்:** நீ போ கௌரி........

[கௌரி மனமின்றி போகிருள்—காந்தி "ராம பாணம்" பத்திரிகையை எடுத்துப் பார்க்கிருள்—பட்டிக்காட்டு மனைவி — "விஜயன்" என்ற ஒரு கதை கார்ட்டூனேடு பிரசுரமாகி இருக்கிறது—அதைப் படிக்கிருள்]

**காந்தி:** (மெதுவாக படிப்பதுபோல) பாவம் அவன்தான் என்ன செய்வான்? ஒரு நவநாகரிக ஃயுவன்—நாகரிகத்தில் திளைத்தவன்—ஆனல் அவன் மனைவியோ? சரியான கர்நாடகம்—கணவன் சிரித்தால், கவிழ்ந்த தலையுடன் கதவிற்குப் பின்னின்று சிரிப்பவள். அவன் மற்றப் பெண்களின் புன்சிரிப்பிலும், புதுமையிலும், ஆனந்தம் காண எண்ணியதில் தவறுஎன்ன? மற்றப் பெண்களின் புதுமையின் பகட்டு சிரிப்பு, அவனுக்கு எத்தகைய ஆபத்து என்பதை, அவள் — அவன் மனைவி— உணர்ந்து கொள்ளவில்லை........

[படித்தபடியே படுக்கையில் படுக்கிருள்—கண்நிறையக் கண்ணீர்—ஏதோ எண்ணியவாறு உறங்கி விடுகிருள்—கனவில் விஜயன் பல பெண்களோடு பிக்னிக், போட்டிங் கிளப், முதலான

இடங்களில் ஆனந்தமடைவதாகக் காண்கிறாள். ஒருபெண், விஜயனை அணைத்தபடி, தன் வீட்டிற்கு அழைத்துப் போகிறாள் — கனவைக் காணும் காந்தி திடுக்கிட்டு, அலறியபடி எழுந்திருக்கிறாள். அவள் மனம் மிகவும்சஞ்சலமடைகிறது.]

**காந்:** (நேரே விஜயன் படத்தின் பக்கம் சென்று கதறுகிறாள்) என்னை மன்னிப்பீர்களா? என்னை மன்னிப்பீர்களா?

[அந்த சமயம் விஜயன் ஆபீஸிலிருந்து வருகிறான்— காந்திமதி விழித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, மணியைப் பார்க்கிறான்]

**விஜ:** (தூரத்தில் வந்தபடியே) காந்தி இன்னும் தூங்கலையா நீ?

**காந்:** (ஓடிவந்து அவன் காலடிகளைப் பிடித்துக் கதறியவாறு) இனிமே நீங்க சொல்றபடி யெல்லாம் நான் செய்யுறேன்- என்னை மன்னிச்சுடுங்க- என்னைக் கை விட்டுடாதீங்க (அழுகிறாள்)

**விஜ:** இதெல்லாம் என்ன காந்தி? ஏன்? என்ன நடந்துச்சின்னு.......

**காந்:** இப்போ நீங்க பேசிட்டு வந்தீங்களே.......அந்தப் பெண்களெல்லாம் யாரு? நீங்க ஏன் அவுங்களோட............ஐயோ சொல்லவே முடியலையே.

**விஜ:** என்ன? நான் இப்ப பேசிட்டு வந்த பெண்களா? நீ எனன சொல்றே காந்தி? ஆபீஸிலிருந்து நேரே இங்கேதானே வாரேன்......

**காந்:** இனிமே என்னைவிட்டு எங்கேயும் போகாதீங்க- போகமாட்டீங்களே?

**விஜ:** (பரிதாபத்துடன்) ம்- குழந்தைபோல உன் மனசு.........இருந்தாலும் அறியாப் புத்தியாலே,

எனக்கு கோவம் வரும்படியாகவும் நடந்துக் குறியே.......

**காந்:** இனிமே உங்களுக்குக் கோவம் வரும்படி நடக் கவே மாட்டேன். உங்க இஷ்டம் போல.........
(அவளை அன்புடன் அணைத்துக் கொள்ளுகிறான்)

## காட்சி 19

**கடற்கரை**

[மிஸ்டர்- மிஸஸ் ராமநாத், வாஸந்தி, ஜயஸ்ரீ முதலானோர் பீச்சில் உட்கார்ந்திருக்கின் றனர்- தூரத்தில் ஒரு பட்டிக்காட்டு தம்பதி கள்]

**ராம:** என்னதான் திமிங்கலம் ஒரு பெரிய கடல் பிரா ணியா இருந்தாலும், ஒரு நல்ல வேட்டைக்காரங் கிட்டே, ஒரு முயல் குட்டிப் போலத்தான்- ஒரு சமயம் பாரு வாஸந்தி...

**வாஸ:** நீங்க திமிங்கல வேட்டைகூட ஆடியிருக்கீங்களா?

**ராம:** அதான் சொல்றேனே.........

**மிஸஸ்:** போதும், அக்கம் பக்கம் ஆளுங்க இருக்காங்க, நம்ப வீடில்லே இது......

**ஜய:** (விளையாட்டாக, கையைத் தட்டிக்கொண்டு) அதோ பாரும்மா ஒரு புதுப் பொண்ணும் மாப் பிள்ளையும்......... (பொக்கென்று சிரிக்கிறார்கள்)

**மிஸஸ்:** (அதட்டி) ஜயஸ்ரீ பேசாமே இருக்கமாட்டே? நீ பெரியவங்களை கேலி செய்யிறது எவ்வளவு கெட்ட பழக்கம்.

**வாஸ:** (சிரிப்பை அடக்கி) அண்ணிக்கி என் அண்ணி தியேட்டர்லே உக்காந்திருக்கலே, அதே மாதிரி தான் அவளும் உக்காந்திருக்கா.

**மிஸஸ்:** வாஸந்தி நீயும் ஜயஸ்ரீ போல, சின்ன குழந்தையா? நீயே உன் அண்ணியைப் பத்தி இளக்காரமா பேசலாமா?

**ஜய:** காந்திமதி அக்காவும் நம்மகூட பீச்சிக்கு வந்திருந்தா ......எவ்வளவு சந்தோஷமா யிருக்கும்-

**வாஸ:** (சிரித்து) அண்ணிக்கு இங்கெல்லாம் வரப் பிடிக்குமா? அதிகாலையிலே எழுந்து, பிள்ளையார் கோவிலுக்குப் போன்னு போயிடும்.

**மிஸஸ்:** அப்படியெல்லாம் இல்லை வாஸந்தி, காந்தியைப் பழக்கப் படுத்தி கொண்டு வரவேண்டியது நாம தான் ...நீயும்வா ... ...போய், காந்திமதியையும் பீச்சுக்கு கூட்டிக்கிட்டு வரலாம்.

**ஜய:** (சந்தோஷமாக) ஹையா காந்திமதி அக்கா வரப்போருங்க.

[மிஸஸ் ராம்நாத், வாஸந்தி, ஜயஸ்ரீ மூவரும் காரின் அருகில் செல்லுகிருர்கள்].

**வாஸ:** (போகும் போதே) ம் ... ...கார் பெட்ரோல் வீணு நஷ்டம்.

[காரில் காந்திமதி வீட்டுக்கு வருகிருள்- காந்திமதி சாதாரண உடையுடன் வீட்டு வாசற்படியில் நிற்கிருள்]

**மிஸ:** (ஆச்சரியத்துடன்) காந்தி நீயா... ...

**காந்:** (சிரித்து) ஏன்? நான் தான்.

**மிஸஸ்:** நீ...நீ...எங்கேயாவது வெளியே போக...?

**காந்:** (மௌனம்)

**மிஸ:** கடற்கரைக்குப் போகலாம் வர்றியா?

**காந்:** ம்......

**ஜய:** (காந்தியின் கையைப் பிடித்துத் துள்ளிக் கொண்டே) எனக்குத்தெரியும்- நான் வந்தா, காந்தி

மாமி கட்டாயம் வருவாங்கன்னு எனக்குத் தெரியும்.

[காந்தி வருவதைக் கண்டு, வாஸந்தி மிகவும் ஆச்சரியப் படுகிருள்-எல்லோரும் காரிலேறிப் போகிருர்கள். துளசிச் செடிக்குத் தண்ணீர் விடாததால சிறிது வாடி நிற்கிறது]

## காட்சி 20

**விஜயன் வீடு**

[துளசிச்செடி வாடி வதங்கிவிட, ஒரு குரோட்டனஸ்-அதனருகில் செழிப்பாக நிற்கிறது-ட்ராயிங் ரூமிலிருந்த சாமான்களெல்லாம், ஒரு மூலேயில் வைக்கப் பட்டிருக்கிறது- நாட்டியத்துக்கு வேண்டிய வாத்தியங்கள்-நடன வாத்தியார்-விஜயன்-மிஸ்டர் எக்ஸ் முதலானேர்- காந்தி நாட்டியம் கற்றுக் கொள்கிருள்-எல்லேயற்ற மகிழ்வுடன் விஜயன் ஈஸிசேரில் சாய்ந்தபடி பார்த்துக் கொண்டிருக்கிருன். பலவித பயிற்சி பெற்று, கடைசியில் ஒரு பதத்துக்கு அபிநயம் பிடிக்கிருள். மிஸ்டர் எக்ஸுக்கு இது திருப்தி அளிக்கவில்லே.

**எக்:** சே சே.

**விஜ:** என்ன?

**எக்:** எந்த நூற்ருண்டுலே ஆடவேண்டிய நடனம்இது.?

[கட்டுவனுர் திடுக்கிடுகிருர்.)

**எக்:** இந்தக் காலத்து டான்ஸ்தான் இப்போ தேவை.

**விஜ:** மிஸ்டர் எக்ஸ்!

**எக்:** (ஸ்டைலாகத் திரும்பிப் பார்க்கிருர்)

**விஜ:** இந்தக் காலத்து டான்ஸுன்னு எதை குறிப்பிடுறீங்க? அது உங்களுக்குத் தெரியுமா?

**எக்:** நல்லாச் சொன்னீங்க.........(சிரிக்கிறார்) நல்ல பாஷன் டான்ஸன்னு......இதோ பாருங்க.........

[மிருதங்கக்காரருக்கும், சலங்கைகாரருக்கும் இங்கிலீஷ் ரீதியில் சைகை செய்து, தாளம் போட்டவாறே டான்ஸ் ஆடுகிறார்- பாயின் ஒரு பாகம் தடுக்கிவிட, கீழே விழுந்து விடுகிறார்]

**நாட்டியக்காரர்:** என்ன ஸார்- உங்க இங்கிலீஷ் டான்ஸூம் 'ததிங்கிணதோம்- தாதை, தானு?

**எக்:** அந்த கர்நாடகம் ஒண்ணுமில்லே. இது......

**விஜ:** என்ன மிஸ்டர் எக்ஸ் களைப்பு தீர காபி, கீபி ஏதாச்சும் வேணுமா?

**எக்:** அதெல்லாம் ஒண்ணும் வேணும்—எனக்கு இப்போ வேண்டியது கொஞ்சம் இண்டர்வல் (எல்லோரும் சிரிக்கிறார்கள்)

## காட்சி 21

**வாஸந்தியின் அறை**

(வாஸந்தி ரவிக்குப் 'போன்' செய்கிறாள் — ரவி போன் எடுத்துக் கேட்கிறான்)

**ரவி:** ஹலோ ம்...... யாரது?

**வாஸ:** நான்தான் வாஸ...(சட்டென்று) கௌரி

**ரவி:** (புரிந்துகொண்டு) ஓ வி. எஸ். கௌரியா? என்ன விசேஷம்? அங்கே இன்னிக்கி என்ன சமையல்? வெஜிடபிள் பிரியாணி கிடைக்குமா?......

**வாஸ:** இல்லே....அண்ணி வீட்டுலே இல்லேன்னு...

**ரவி:** அண்ணியா? ஓஹோ ஹோ யஜமானியம்மாவா?... ஓ ஒத்தாசைக்கு வரணுமா?

**வாஸ:** (பல்லேக் கடித்துக்கொண்டு) இல்லே..........நான் என்ன சொல்றேன்னு...

(அதே சமயம் விமல் வாஸந்திக்குப் "போன்" செய்யப்போகிறான்).

**விமல்:** (மெதுவாக) இன்னிக்கி வாஸந்தியை தனியா சந்திச்சி......(போனை எடுத்து ரிங் செய்கிறான், எங் கேஜ்டு சப்தம் கேட்கிறது) சே எங்கேஜ்டு ம்...ம்... நேரே போய்ப் பார்க்கலாம்.

(ரவி போனில் பேசிக்கொண்டிருப்பதின் தொடர்ச்சி)

**ரவி:** (சிரித்தவாறு) என்னை அவ்வளவு சுலபமா ஏமாத் திடலாமுன்னு நெனைக்காதே மிஸ். வி. எஸ். கௌரி (சிரித்தல்)

**வாஸ:** (வாஸந்தியும் சிரித்து போனை கீழே வைக்கிறாள்) (ரவி சீட்டியடித்தவாறே ட்ரஸ் செய்கிறான)

**வாஸ:** சே நான் அவருக்கு சுலபமா புரியும்படியா, மடத் தனமா பேசிட்டேன்.........குரலை மாத்திப் பேச ணும்னு எப்படி ப்ளான் போட்டு வச்சிருந்தும், அவர் குரலைக் கேட்டதும் ஏற்பட்ட குதூகலத்திலே, எல்லாம் மறந்து போச்சு...ரவி இங்கே வந்து ஏன் கூப்பிட்டேன்னு கேட்டா....என்ன சொல்றது?... சே...ம்?......மனதுலே உள்ளதை ஒரு கவிதையா எழுதி, அவர் பார்க்கும்படியா வச்சுடுறேன்.

[வாஸந்தி தான் எழுதிய காதல் கவிதையை, திரும் பப் படிக்கும்போது வெட்கத்தினால் கடி தத்தை தூள் தூளாகக் கிழித்து, வாசற் பக் கம் விட்டெறிவதற்கும், ரவி உள்ளே நுழை வதற்கும் சரியாயிருக்கிறது. ரவி முகத்தில் விழுகின்றன....அந்தக் காகிதத் துண்டுகள். ரவிக்கு கோபம் ஏற்டுகிறது]

**ரவி:** (கோபத்துடன்) மரியாதை தெரிஞ்சுக்க வேண் டியது, மனிதர்களோட முதல் கடமை.

(ரவி மூக்கின மேல் 'காதல்' என்று எழுதப்பட்ட கடிதத் துண்டு மட்டும் ஒட்டிக் கொண்டிருக் கிறது. அதைக் கண்டு வாஸந்தி குட்பென்று

சிரித்துவிட்டு வாயைப் பொத்திக் கொள்ளு கிருள்)

**வா:** (சிரித்தவாறு) மூக்குமேலே காதல்...

**ரவி:** (கோபத்துடன்) சிரிப்பு வேறு.........அடக்கம் வேணும்.

**ரவி:** (சிறு கண்ணுடியை ரவியின் முகத்தின் முன்னுல் வாஸந்தி காட்ட, காதல் என்று எழுதப்பட்ட கடிதம், கண்ணுடியில் மாறி தெரிகிறது.........ரவி கோபத்துடன் பார்த்து தட்டிவிடுகிருன். வாஸந்தி சிரிக்கிருள்) வர வர, இருந்த மரியாதைக்குக்கூட நோட்டீஸ் கொடுத்துட்டாப் போலிருக்கு — சே கொஞ்சங்கூட "மேனர்ஸ்" கிடையாது.

**வாஸ:** (சிரித்து) உண்மை, முற்றிய உண்மை! அதைத் தான் நானும் நெனச்சுக்கிட்டு நிக்கிறேன்.

**ரவி:** குப்பையை முகத்திலே எறியறதுதான், காலேஜ் படிப்பிலே கத்துக்கிட்ட முதல் நாகரிகம்... இல்லே?....

**வாஸ:** (சற்று கோபமாக) அதிருக்கட்டும், ஒரு பெண் தனியா இருக்கிற அறைக்குள்ளே, திடுதிப்புன்னு சம்மன் இல்லாமே ஆஜர் ஆகறதுதான் காலேஜ் படிப்பிலே கத்துக்கிட்ட ரெண்டாவதுமரியாதை... இல்லே...?

**ரவி:** (அதிகக் கோபமாக) உன்னைப்போல ஒரு கர்வங் கொண்ட, நாகரிகச் சின்னத்தின் அறையிலே கால் வச்சதே என் தப்புத்தான்.

**வாஸ:** (கோபமாக) இந்த மாதிரி எண்ணம் முன்னு லேயே இருந்திருந்தா நல்லா யிருக்கும்.

**ரவி:** இப்படி பதிலுக்குப் பதில் சொல்றதை நீ நிறுத்த லேன்னு....

**வாஸ:** (கேலியாக) அது உங்க வேலையில்லே... உங்க ளுக்கு வேண்டியதை நீங்க பாத்துக்கிட்டாப் போதும்.

(விமல் வருகிருன், இவர்கள் சண்டையைக் கண்டு மனதுக்குள் ஆனந்தமடைகிருன்)

**விமல்:** (சிரித்து) என்ன விசேஷம் மிஸ்டர் ரவி...?

**ரவி:** (மௌனம்)

**விமல்:** அடடா மிஸ்டர் ரவியோட முகம் சிவந்து போயிருக்கே....ஓ....வாஸந்தி ஏதாவது கோபமா...

(விமல் காதலர் படம் போட்ட சிகரெட் டின்னிலிருந்து ஒரு சிகரெட் எடுத்து, ரவியிடம் தீப்பெட்டி இருக்கிறதா என்று சைகையால் கேட்கிருன்)

**ரவி:** (எரிச்சலாக) எனக்கு இன்னும் தீ வைக்கிற இந்த நல்ல நாகரிகப் பழக்கமெல்லாம் ஏற்படலே.

**வாஸ:** தீப்பெட்டித்தானே நான் எடுத்து வாரேன்.

**ரவி:** (கோபமாக அவளைப் பார்த்துப் பல்லைக் கடித்தவாறு) ஹூம்...நான்...எடுத்து...

**வாஸ:** (ரவியைக் கவனியாதபடி)......ம்......நீங்க வாங்க மிஸ்டர் விமல்...

(விமல் ரவி முதுகில் வேடிக்கையாகத் தட்டிவிட்டு வாஸந்தியுடன் குஷியாகப் போகிருன்)

**விம:** (போய்க்கொண்டே ரவியிடம்) பெண்களோட ஸ்நேகம், இந்த காலத்துலே "பாட்னர்ஷிப்" பத்திரம் போலத்தான்—பாட்னர்ஷிப் கம்பெனியைப்போல இதுவும் தகராறுலேதான் முடியுது.

(வாஸந்தி ரவியைப் பாராது, முன்னே நடக்க பின்னால் விமல் போவதைக் கண்ட ரவியின மனம் தாங்கமுடியாத வேதனைக்குள்ளாகிறது)

**ரவி:** (மெதுவாக) ஹூம். அன்புங்கிறதைப்போல பொய்யும் புனைந்த மொழி இந்த உலகத்துலே வேற எதுவுமில்லை....அதிலும் பெண் அன்பு...தூ....... பெண்ணுக்கு அன்பாம் அனபு.

(தோட்டத்திலிருக்கும் அழகான வண்ணத்திப்பூச்சி ஒன்றை, ஒரு ஒணன் தாவி ஓடி பிடிக்க முயற்சி செய்துகொண்டிருக்கிறது)

## காட்சி 22

### விஜயன் வீட்டு தோட்டம்

(தோட்டத்தில் புது குரோட்டன்ஸ் பல வளர்ந்திருக்கின்றன. காந்தி நாகரிகமாக **டிரஸ்** செய்து கொண்டு வருகிருள்)

**விஜ:** (மிக சந்தோஷத்துடன்) யாரது?

**காந்:** ஒரு பட்டிக்காட்டு மனைவி.

**விஜ:** (ஸ்வப்பனத்தில் இருப்பதுபோல) இல்லே...... இல்லே......ஒரு ஸ்வப்பன லோக ராணி

**காந்:** (செல்லமாக) நானு?

**விஜ:** ஆமாம்......மோஹினியின் உருவம்போல......

**காந்:** (ஆனந்தமாக சிரிக்கிருள்)

**விஜ:** காந்தி!

**காந்:** (சிரித்து) ஏன்? என்ன வேணும்?

**விஜ:** காந்தி இப்போ நானொரு புதிய உலகத்திலே இன்பப்படகிலே.......ஆனந்தமா?......

**காந்:** (செல்லமாக) உம்.......அந்த இன்பப்படகுலே, எனக்கும் இடமுண்டோ? இல்லே ரொம்ப சின்னப்படகோ?

**விஜ:** நீயில்லாமல் நான் மட்டுமா? நம்ப ரெண்டுபேருக்கு மாத்திரந்தான் அது இடங்கொடுக்கும்...மூணவது ஆசாமி யாரும்......

[விமல் வருகிருன்]

**விம:** ஹல்லோ

**காந்:** (விலகி) யாரு?

விஜ: ஓ.......விமல்.......வா.......வா......

[விமல் வருகிருன்—காந்திமதியின் புதிய மாறு தலைக்கண்டு ஆச்சரியமுடன் பார்க்கிருன்—அவளுடைய எழிலில் அவனுக்கு ஒரே திகைப்பு]

விஜ: என்ன விமல் இப்படித் திகைச்சு நிற்குறே? (சிரித்து) இது......

விம: மிஸஸ் காந்திமதி விஜயன்.......

விஜ: (சிரித்து) பாஷனுக்கு இறைக்கிற பணம் பந்தயக்குதிரைமேலே கட்றபணமுன்னு சொல்லுருங்களே......

விம: ஒவ்வொரு சமயம், இதுபோல அரிய பரிசு கிடைக்கத்தான் செய்யுது......

விமல் சிரித்தபடி காந்தியின் அழகை இன்னும் நன்ருக உற்றுப் பார்க்கிருன். அவள் நாணத்தால் முகம் சிவந்து உள்ளே போகிருள்]

## காட்சி 23

**காந்தி ட்ராயிங் ரூம்:**

[மிஸஸ் ராம்நாத்—வாஸந்தி ஜயஸ்ரீ, ரவி—எல்லோரும் இருக்கின்றனர். ரவி சுவரிலிருக்கும் "குதிரை—மான்" படத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிருன்—ஓடும் மானைப் பிடிக்க குதிரைதானே சடிவாளத்தைப் போட்டுக்கொண்டதன்றி, ஒரு ஆளையும் முதுகில் ஏற்றிக் கொண்டிருக்கிறது]

மிஸஸ்: காந்தி இவ்வளவுநாள் "கிளப்"க்கு வராத இருந்தது, கிளப்புக்கு எவ்வளவு நஷ்டம்னு இப்பதான் தெரியுது.

ராம: சந்தேகமென்ன? இப்பவாவது "கிளப்" பாக்கியமடைய சந்தர்ப்பம் கிடைச்சுதே.

**வாஸ:** கிளப் மெம்பர்ஸ் எல்லாம் அண்ணிகிட்டே எவ்வளவு மதிப்பு வச்சிருக்காங்க தெரியுமா?

**மிஸ:** காந்தி இவ்வளவு நாகரிகமா வந்துடும்னு நான் கனவுகூட கண்டதில்லே.

**ரவி:** (வேறுபக்கம் பார்த்து) போதும் பெண்களெல்லாம், கனவிலே கூடல்ல, பேஷன்லே மிதக்க ஆரம்பிச்சுட்டாங்க......

**மிஸ:** ரவி உன்னோட வறட்டு விதண்டாவாதத்துக்குப் பதில் சொல்ல யாராலும் முடியாதுப்பா......

**வாஸ:** (மெதுவாக) இந்த நூற்றாண்டோட பிற்பகுதியிலே ஆண்களேயும் இதுபோல பட்டிக்காட்டுங்க இன்னும் உலாவுதே.

**மிஸ:** (சிரித்து) அதை உரக்கச் சொல்லு வாஸந்தி.

**ரவி:** முன்னேற்றத்தின் பூப்பந்தல் தானே உங்க பேஷன்—கிளப்—இதெல்லாம். ஆனு, இதை மாத்திரம் நினைவிலே வச்சுக்கணும். வருங்கால உலகத்திலே, சீக்கிரமா சீட்டு வாங்கப்போறது, பெண்களோட இந்த அவசியமில்லாத நாகரிகந்தான்.

[ரவி இறங்கித் தோட்டப்பக்கம் போக கௌரி வாஸந்தியை ஒருவிதமாகப் பார்க்கிருள்]

**மிஸ:** காந்தி என் மகன் இன்னும் இப்படி கிராக்கா இருக்கானே.......

**காந்:** (சிரிக்கிருள்)

[இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது வாஸந்தி ஏதோ யோசித்தபடி அப்பால் போகிருள். கௌரி பின்னே போகிருள்]

**கௌ:** (சிரித்து) இப்பல்ல தெரிஞ்சுகிட்டேன், படிச்சவங்க எல்லாரும் மடத்தனமா நடந்துக்க மாட்டாங்கன்னு.

**வாஸ:** கௌரி பேசாமே உன் வேலையைப் பார்த்துகிட்டு போகமாட்டே?

ERSITY EXTENSION L

கௌ: அதுக்கில்லேம்மா அர்த்தமில்லாத பரவி வர்ற இந்த நாகரிகம் வேண்டாமுன்னு சொல்றது, எவ்வளவு நிஜமானதுன்னு சொல்ல வந்தேன்.

வாஸ: (தணிந்தகுரலில்) ஏன் கௌரி ரவிக்கு நிஜமாகவே, நாகரிகம்னு பிடிக்கலையா? அதனாலே தானே அப்படிச் சொன்னரா?

கௌ: (பரிகாசச் சிரிப்புடன்) வாஸந்தின்னா அவருக்கு உயிர்தான். ஆனா, வாஸந்தியோட வேண்டாத இந்த நாகரிகம் இருக்கே, அதுதான்......

வாஸ: பெரிய பாஷன் தெரிஞ்சவ மாதிரி பேசவந் துட்டியாக்கும், உனக்கென்ன தெரியும்?

கௌ: எனக்கு தெரிஞ்சது இவ்வளவுதான். கண்ணாடி பாத்திரத்திலே போட்டு வளக்கிறே பாரு மீனுங்க... அது உனக்கு பாஷனா இருக்கலாம். ஆனா, மீனுக்கோ...ம்....அது இருக்க வேண்டிய நிர்மல மான தண்ணீர்லே இருந்தா, எப்படி ஓடியாடி விளையாடும்.

வாஸ: ஊம்? (ஏதோ நினைக்கிறாள்)

[ரவி சொன்ன சில வாக்கியங்கள் ஞாபகத்தில் வருகின்றன. மீன் வாயால் வாக்கியங்கள் வருவதுபோல வந்து தேய்ந்து மறைந்து போகின்றன.]

## காட்சி 24

பல இடங்கள்:

[கார்த்தியின் நாகரிக முன்னேற்றத்தைக் குறிக்கப் பல காட்சிகள்]

## காட்சி 24 A

கிளப்பில்:

[பிலியர்ட்ஸ்—கால்ப் முதலிய ஆட்டங்கள்]

## காட்சி 24 B

**பீச்சில்:**

[அங்கு சென்று போட்டிங் — பீச்சையடுத்த ஏரியில் "போட்கிளப்" முலியன]

## காட்சி 24 C

**தியேட்டர்:**

[சுவரில் டல "செக்ஸி" படங்கள் — காந்தி சர்வ சாதாரணமாக உள்ளே போகிருள்.]

## காட்சி 24 D

**கிளப்பில்:**

[பல சம்பவங்கள் — கடைசியில் கிளப் செக்ரட்டரியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிருள்.]

**விமல்:** இந்த "ரெயின்போ கிளப்"பை, சென்ற சில மாதங்களுக்குள் எல்லேபற்ற கல கலப்புடனும், உற்சாகத்துடனும் செய்தவர் ஸ்ரீமதி காந்திமதி விஜயன் அவர்கள்தான் என்பதை யாவரும் அறிவீர்கள். அதனல் இந்த கிளப்பின் அடுத்த செக்ரட்டரியாக, தேர்ந்தெடுக்கப் பட வேண்டுமென்பதற்காக, நான் அவர் பெயரை பிரேரிப்பிக்கிறேன்.

**எக்ஸ்:** அதை நான் பலமாக ஆமோதிக்கிறேன்.

[பலமான கரகோஷங்களுக் கிடையே அவள் செக்ரட்டரியாக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப் படுகிருள். இதையடுத்து சில சில கிராமக் காட்சிகள்- பயிர்களில் பூச்சி விழுந்துவிட்ட தென்பதற்காக மருந்து தூவுகிருர்கள் கேசவபிள்ளே அதி உற்சாகத்துடன் வேலே செய்கிருர்]

**கேச:** கோவிந்தப் பிள்ளே உம்மைப் போலவே, இந்த வருஷ பயிர் பச்சைகளுக்கும், மருந்தடிக்க வேண்டிருக்கு... ...

கோவி: சிக்கு யாரைத்தான் விட்டு வைக்குது?

கேச: (தோட்டத்திலுள்ள ஒரு குரோட்டன்ஸ் செடியைப் பார்த்து) இதை யாரு இங்கே வச்சது? பயிர் பச்சைகள்ளே, பயனில்லாதபடி பகட்டா நிற்கிறது இந்த குரோட்டன்ஸ் செடிகதான்.

கோவி: எல்லாம் வெளிப்பகட்டுத்தான். இப்ப என் உடம்பைப் பாருங்க, மேலுக்கு மனுஷஞ, உருவமா இருக்கேன். உள்ளே படுத்துற வியாதி......

கேச: குரோட்டன்ஸ் செடிகளாலே யாருக்கு என்ன பயன்?

கோவி: மருந்துக்குக் கூட ஒரு பூவும் பூக்கறதில்லே (இருமல்) மருந்து குடிக்க மறந்தே போயிட்டேன்.

கேச: (சிரித்து) உம்மைப்போல களைகளையும், வெறும் பகட்டு குரோட்டன்ஸ் ஆசாமிகளையும், மொதல்லே வேரோட பிடுங்கி எறியணும்காணும்.

[சிரிக்கிருர்.]

## காட்சி 25

**காந்திமதியின் அறை**

[ஆரம்பத்தில் குரோட்டன்ஸ் தோட்டம், எங்கும் குரோட்டன்ஸ் மயம். பிறகு அங்குள்ள காந்திமதியின் வீட்டில் அவள் அறை. காந்திமதி கௌரியிடம் பேசிக் கொண்டிருக்கிருள்.]

காந்தி: விஸிட்டிங் கார்டு கொடுத்தனுப்பலே?

கௌ: இல்லேம்மா......, கார்டு ஒண்ணும் இல்லேன்னுட்டாங்க.

காந்: அந்த அம்மா யாராம்?

கௌ: ஏதோ சங்கத்துலே......

காந்: பேரு என்னவாம்?

**கௌ:** கூர்க்காஞ்சேரி அம்மணி அம்மாவாம்.

**காந்:** சரி உள்ளே வரச்சொல்லு.

[அம்மணியம்மா ஒரு பெரிய கும்பிடு போட்டு உள்ளே வருகிறாள். காந்திமதி உட்காரச் சொல்லுகிறாள். காந்திமதிக்கு அவள் வந்த காரணம் தெரிகிறது.]

**காந்:** ஓஹோ "பெனிபிட் பர்பாமன்ஸ்"க்காக...

**அம்மணி:** ஆமாம்.

**காந்:** இதிலே வசூலாகிற தொகை பூராவும், உங்க பெண்கள் சங்க முன்னேற்றத்துக்காகத் தானே செலவிடப் போகிறீங்க?

**அம்:** ஆமாம். பணம் பூராவும் சங்க வளர்ச்சிக்காகவே உபயோகப் படுத்தப் போகிறோம்.

**காந்:** ரொம்ப சந்தோஷம். இதுபோல உள்ள சகோதரிகள் சங்க தொண்டுகளுக்கு நான் ஒருநாளும் ஆக்ஷேபணை சொல்றது வழக்கமில்லே.

**அம்:** ரொம்ப வந்தனம் அம்மா......அப்ப...நீங்க...

**காந்:** நான் என் கார்லேயே வந்திடுறேன் (சிரித்து) "பெனிபிட் பர்பாமன்ஸ்ன்னு" சொல்லி 10, 15 பஸ்ட் கிளாஸ் டிக்கட்டுக்களுக்கு வழி வைக்கிறாங்களே சில பெரிய மனுஷங்க, அந்த கோஷ்டியிலே நான் இன்னும் சேரலே......

**அம்:** அப்போ நான் வரட்டுமா? நமஸ்தே

**காந்:** நமஸ்தே.....(அவள் போனதும்) ம்......பாவம் இதுபோல ஒரு பட்டிக்காடு எப்படித்தான் ஒரு பெண்கள் சங்கத்துக்கு செக்ரட்டரியாயிருந்து...... ம்...இது பேருமாத்திரம் முன்னேற்ற சங்கம் (சிரிக்கிறாள்)

[வாஸந்தி சாதாரண உடையில் வெளியே வருகிறாள்.

**கௌரி:** ஆங்......இது யாரம்மா என் வாஸு கண்ணு? இப்போல்ல குழந்தை முகத்துலே, ஒரு தனி களை மின்னுது.

**வாஸ:** நான ஜயஸ்ரீயைப் பார்க்க அவுங்க வீட்டுக்குப் போறேன் கௌரி.

**கௌ:** (கிண்டலாக அன்புடன்) அப்படி போறதுதான் போறே, எல்லாரையும் கண் குளிரப் பார்த்துட்டு வாம்மா......

[வாஸந்தி வெட்கத்துடன் தலை குனிகிருள். கோவிந்தப்பிள்ளை வருகிருர்]

**வாஸ:** யாரு? கோவிந்தப்பிள்ளை மாமாவா? இப்பதான் வர்றீங்களா? உக்காருங்க மாமா.

**கோவி:** காலம்பரதான் பட்டணத்துகரு வந்தேன். உடனே டாக்டரைப் போய்ப் பார்த்தும் பய னில்லே.

**வாஸ:** மாமா இப்ப நீங்க கொஞ்சம் நல்லா, தேக புஷ்டியா இருக்கீங்க.

**கோவி:** ஐயோ அப்படிச் சொல்லிடாதேம்மா......

**கௌ:** முகம் நல்ல களையா இருக்குதே.

**கோவி:** அதுவா? தெளிவு கொடுத்து, தொல்லே கொடுத் துக் கிட்டே யிருக்குது......இப்ப புதுசா ஒரு சிக்கு நம்மகிட்டே முளைச்சிருக்கு பாரு.........அதோட கோளாறுதான், முகத்துலே களை மின்னுது-இதை கவனிக்கவே கொடைக் கானலுக்கு போயிட்டு, அங்கே சுகப்படாமே, பட்டணத்துக்கே வந்துட் டேன்.

**கௌ:** கொடைக்கானல் ரொம்ப அழகான ஊருன்னு சொல்றுங்களே......

**கோவி:** நல்ல அழகான ஊர்தான் ஆனு......நடு நடுவே மலேங்க வந்துதான் கெடுத்துடுதே.

[காந்திமதி மகா ஆடம்பரமான டிரஸ்ஸுடன் வருகிருள். கையிலிருந்த 'வானிடி பாக்'கை வீசி எறிந்தபடி உள்ளே போகிருள். கோவிந்தப் பிள்ளை இருந்ததையும் அவள் கவனிக்கவில்லை. கோவிந்தப்பிள்ளைக்கு ஆச்சரியமாக இருக்கிறது]

**கோவி:** இது யாரு?......நம்ம......

**கௌ:** சின்னம்மா

**கோவி:** காந்திமதியா......

**கௌ:** ஆமாம்

**கோ:** காந்திமதிக்கு பார்வைகூட கொஞ்சம் மங்கிப் போச்சா? கண்டும் காணுமே போவுதே. இந்தப் புது சீக்கு எந்த வகையிலே சேந்ததோ?

[மடியிலிருந்து ஒரு புட்டி மருந்து எடுத்துக் குடிக்கிருர்.]

## காட்சி 26

**தியேட்டர்:**

[தியேட்டரில் பெனிபிட் பர்பாமன்ஸ் சோப்பு நுரைக் கொப்புளங்களிலிருந்து புஷ்பங்கள் மலர்ந்து வந்து, நடனமாடி, அதே கொப்புளங்களில் மறைகின்றன. புஷ்ப நடனம்—"வானவில்" வர்ணங்களில் வானவில்லாக வளைந்து, அடுத்த விநாடி வெள்ளைத் தும்பைப் பூக்களாக உதிர்ந்து சோப்புகளில் மறைகிறது. எத்தனைவித வர்ணமிருந்தும், அது வெள்ளை நிறத்திலிருந்தே ஜனனம் என்றும், மலர்கள் ஆயிரம் ஆயிரமாக இருந்தாலும் அதன் ஜனனம் ஈஸ்வர அர்ப்பணத்துக்கே என்னும் பொருள்பட நாட்டியம் அமைக்கப்பட் டிருக்கிறது,

[இந்த நாட்டியத்தை எல்லோரும் புகழ்கின்றனர். முக்கிய பங்கெடுத்த காந்திமதியை வானளாவ மெச்சுகின்றனர். "ராமபாணம்" எடிட்டர் அவளைப்புகழ அவள் வீட்டுக்கே வருகிறார். அவர், விஜயன், காந்திமதி மூவரும் கூல் டிரிங் குடித்தபடி பேசுகின்றனர்]

எடிட்டர்: (சிரித்து) புஷ்ப நடனத்தைப்பற்றி, மிஸ்டர் விஜயனுக்கு எழுத என்னவோ இஷ்டமில்லை—நான்தான் விமர்சனம் எழுதினேன்.

காந்: (சிரித்து) கொஞ்சம் அதிகமா புகழ்ந்து எழுதிட்டீங்க.

விஜ: எடிட்டர் ஸார் இப்படியெல்லாம் சொல்லி எங்களை ஏமாத்திட முடியாது. உங்க வீட்டு கல்யாணச் சாப்பாடு எப்போ தரப்போறீங்க?

எடிட்: அதைச் சொல்லத்தான் வந்தேன்—வர்றமாதம் 6-ம் தேதி ஏற்பாடாகி இருக்கிறது. நீங்க ரெண்டு பேரும் ரெண்டு நாளைக்கு முன்னாலேயே வந்திடணும்.

காந்: (சிரித்து) ரெண்டு நாளென்ன? ஒரு வாரத்துக்கு முன்னாலேயே வந்திடுறோம்.

(வாய்விட்டு சிரிக்கிறாள்)

எடிட்: தாராளமா வாங்க......கல்யாணத்துக்கு வர்ற விருந்தாளிகளை கவனிச்சு, உபசரிக்க வேண்டியது உங்க ரெண்டுபேருடைய பொறுப்புத்தான்.

காந்: சந்தேகமில்லாமே.......நம்ம வீட்டு கல்யாணமில்லே?

எடி: நீங்க......அவசியம்.......

காந்: அதைப்பத்திய கவலே உங்களுக்கு வேண்டவே வேண்டாம். வரவேண்டியது எங்க கடமை

(எல்லோரும் சிரிக்கிறார்கள்)

## காட்சி 27

**விஜயன் வீடு:**

[கேசவபிள்ளை வருகிறார்]

**கேச:** அம்மா காந்தி

**காந்:** யாரு அப்பாவா? உங்களைப் பார்த்து ரொம்ப நாளாச்சே........

**கேச:** கிராமத்துலே கொஞ்சம் வேலையா இருந்துச்சு வர முடியலை.......

**காந்:** ம்?

**கேச:** நீ எனக்கு ஒரு லெட்டர் கூட போடலையே அம்மா........

**காந்:** நேரம் ஒழியலையப்பா இங்கே என்வேலைகளுக்கே பொழுது கிடைக்கலை... ...

**கேச:** பட்டணத்துலே நேரம் இவ்வளவு குறைவா இருக்குமுன்னு இப்போதாம்மா தெரியுது....... உனக்கு அவ்வளவு வேலை இருக்கா இப்பவெல் லாம்?

**காந்:** (சிரித்து) உங்களுக்கு அதெல்லாம் எப்படி விளங் கும்? மூச்சுவிடக்கூட நேரமில்லே.

**கேச:** ஏம்மா நம்ப கோவிந்தப்பிள்ளை இங்கே வந்திருந் தாராமில்ல....நீ...

**காந்:** வந்திருக்கலாம்...யாருக்கு அதையெல்லாம் கவ னிக்க முடியுது?........

**கேச:** நீ ரொம்ப மாறி போயிட்டேன்னு அவர் வந்து சொன்னாரம்மா...நீ அவரை சரியாப் பாத்துகூட பேசலையாம்.

**காந்:** (சிரித்து) பாவம்

**கேச:** (மௌனம்)

**காந்:** நீங்க கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்குங்க. எனக்குக் கொஞ்சம் அவசர வேலையிருக்கு...கௌரி கிட்டே உங்களுக்கு வேண்டியதைச் சொன்னு செஞ்சு கொடுப்பா......நான் வர்றேன்.

[அவள் போகிருள்]

[கேசவபிள்ளை ஆச்சரியத்தால் அவள் போன திக்கையே பார்த்துக்கொண்டிருக்கிருர்]

## காட்சி 28

**ராம்நாத் வீட்டுத் தோட்டம்:**

[ரவி தோட்டத்தில் மறைந்திருக்கிருன்—வாஸந்தி வருகிருள்—ரவியைக்கண்டு கொள்ளுகிருள்]

**வாஸ:** ஜயஸ்ரீ.......ஜயஸ்ரீ.......

**ரவி:** (மரத்தின் பின்னல் ஒளிந்தபடி) ஜயஸ்ரீ வீட்டிலே, அவளோட அண்ணன் தோட்டத்திலே (வாஸந்தியின் கிராமிய டிரஸ்ஸைக் கண்டு) அடடே இது யாரு? இன்னிக்கு ஏதாச்சும் டான்ஸ் ப்ரோக்கிராம் இருக்கா? டான்சுக்குக் கிராமப் பெண் வேஷங் கட்டத்தானே நம்ப பெண்களுக்கு இப்ப தெரியுது. இந்த கிராமிய உடையை, இப்ப கலையா வச்சுல்ல கும்பிடுருங்க...ம்...மிஸ் வாஸந்திதேவிக்கு இந்த உடை.........

**வாஸ:** என்னிஷ்டத்துக்கு உடுத்திக்க எனக்கு உரிமையில்லாததுபோல, மளமளன்னு பேசுறீங்களே?....

**ரவி:** ஆமாம்மா.......உரிமை பேசுற காலந்தானே இது.......ஆமு, உன்னுேட அண்ணன்......

**வாஸ:** அண்ணி நாகரிகமாக நடந்துக்கறதுலே அண்ணனுக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?

**ரவி:** ஆமு.....அவரோட சந்தோஷத்துக்கும் பின்னுலே என்ன ஒளிஞ்சிருக்குதோ......

**வாஸ:** நீங்க பேசுறது புரியலே.

ரவி: புரியுமா? ஏன் புரியும்? இல்லேன்னு, இந்த பாஷன் மோகம் எவ்வளவு பெரிய பாதாளத்திலே கொண்டு போய் சேர்த்திடும்னு, ஆரம்பத்துலேயே உங்க குடும்பத்துக்குப் புரியாமே போயிடுமா?

வாஸ: பாஷனோட ஏன் இவ்வளவு பகையோ?

ரவி: எனக்கா? எனக்கேன் பகை?....ம்....இந்தகாலத்துப் பெண்கள் 12, 13 வயது வரைக்கும் தங்களுக்குள்ள சொந்த அழகோட, கடவுள் கொடுத்த அழகோட வளர்றாங்க — அப்புறம் தன் அழகுக்கு சாயம்பூச ஆரம்பிக்கிறாங்க—நல்ல உடம்பும் வெள்ளடுச்சிப் போகுது.

வாச: (சிரித்து) பெண்கள் மாத்திரமா?

ரவி: பெண்கள் வர்க்கத்துலே கொஞ்சம் அதிகம்.... ம்....பெண்களாப் புறந்தவுங்க பெண்களாகவே வாழத் தெரிஞ்சுக்கணும்.

வாஸ: (சிரித்து) நீங்க என்ன வேணுமானாலும் சொல்லுங்க, இண்ணக்கி நான் உங்கிட்டே சண்டை போடப் போறதே இல்லே.

ரவி: இது நீ சொல்ற வார்த்தை இல்லே, வாஸந்தி உன்னோட உடைபேசச் செய்யுது. ஒருத்தனோட நடையும் பாவனையும் அவனோட உடையாலே மாறிடுமுன்னு சும்மாவா சொன்னாங்க—புதுசா சூட் போட்டு, டை கட்டுனவன் முகத்தைக் கொஞ்சம் பாரு... அதோ தெருவுலேயும்.........(சிரிக்கிறான்)

[ஒருவன் டிப்டாப்பாக டிரஸ் செய்துகொண்டு மிக விரைப்புடன் போகிறான்—கால் மாத்திரம் நொண்டுகிறது]

## காட்சி 29

**விஜயன் அறை**

(அறையிலுள்ள காலண்டர் 6-ம் தேதி காட்டுகிறது—காந்தி இன்னும் வீடு திரும்பாததது கண்டு விஜயனுக்குக் கோபமாக இருக்கிறது)

விஜ: (எரிச்சலாக) கௌரி

கௌ: என்ன?

விஜ: காந்தி இன்னும் வரவில்லையா?

கௌ: இல்லை...

விஜ: வாஸந்தி?

கௌ: அது அதிகமா வெளியே போறதே இல்லையே....

விஜ: காந்திமதி தனியாவா போயிருக்குது?

கௌ: இப்பவெல்லாம் தனியாகத்தான் போற வழக்கம்.

விஜ: உம்....(6-ம் தேதியைக் காட்டும் காலண்டரைப் பார்க்கிறான்) ...ம்....இரண்டு நாளைக்கு முன்னுலேயே வர்றதா டம்பமா சொல்லியாச்சு....

கௌ: ம்?

விஜ: இண்ணிக்கி ஒரு விவாகத்துக்குப் போகணும்னு ஏதாச்சும் காந்தி சொல்லலையா?

கௌ: வேறே எங்கேயோ பிரசங்கம்னு....

(டெலிபோன் பெல் அடிக்கிறது)

விஜ: ஹலோ விஜயன்தான்...யாரு...காந்தியா....என்ன இண்ணிக்கி கல்யாணத்துக்கு நீ வரலியா?...ம்.... அசௌகரியமா? ஏன்?.......பிரசங்கமா? ஓஹோ ''மனைவியின் கடமை'' ங்கறதைப் பத்தியா....? ...ம்... (போனைக் கோபமாகக் கீழே வைக்கிறான்) பேஷ்.... (அவன் முகத்தில் எல்லையற்ற கோபம்)

## காட்சி 30

### பிரசங்கம் செய்யும் இடம் முதலியன

[ஆரம்பத்தில் ''மனைவியின் கடமை'' என்ற பிரசங்கம் காந்திமதி செய்து கொண்டிருக்கிறாள்— ஒரே பெண்களின் கூட்டம் — பலத்த கரகோசங்கள்—அடுத்து பல காட்சிகள் மாலை

யும் அணிந்துகொண்டு காந்திமதி காட்சியளிக்கிருள். இப்படி பல காட்சிகள் பல இடங்களில் அவளுக்குப் பல வகையில் டிரஸ்— எங்கும் அவளைப் பாராட்டுகின்றனர். ஒரே புகழ் மாலைகள்.

...காந்திமதியின் சமூக சேவைகளைப் பற்றி பத்திரிகைகள் வானளாவப் புகழ்கின்றன — பலவகையான போட்டோக்கள் — வாழ்த்துக்கள்—அவளுக்கு பல டைட்டில்கள்.

"நடன கலா பூஷணி"—"மாதர் திலக சேவகி"—தரித்திர உத்தாரண தர்ம சம்வத்தினி" இந்த எத்தனையோ—அவளைப் பாராட்டும் விழாக்கள் பலப்பல......இத்தியாதி...... இத்தியாதி]

## காட்சி 31

**கடைத் தெருவில் ஒரு வெற்றிலை பாக்குக் கடை**

[ஒரு தினசரி பத்திரிகையில் கொட்டை எழுத்தில் போடப்பட்டிருக்கிறது. விமல் படிக்கிருன்]

**விம:** காந்திமதியின் ஜாஜ்வல்யமான 101-வது "பெனபிட் பர்பாமன்ஸ்" இந்திரபுரியின் பெண்கள் சங்கத்தின் இலவச வாசகசாலையின் நிதிக்கென பிரத்யேகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது— ராத்திரி 7-30 க்கு டிக்கட் (வரியுள்பட) ரூ. 101, 51, 25, 10.

[விமல் அதைப் படித்துவிட்டு, அர்த்த புஷ்டியுள்ள பார்வையுடன் கடிகாரத்தைப் பார்க்கிருன்— கடிகாரம்—ஓடவில்லை. கையைக் குலுக்குகிருன்]

**விமல்:** (மெதுவாக) ம்......வாஸந்தி தனியாகத்தான் (உரக்க) ரிக்ஷா ஏ....ரிக்ஷா

**ரிக்:** ஸார்...?

விம: தெற்கு ராஜ வீதிக்கு — விஜயன் வீடு.

ரிக்: ஒண்ணேகால் ரூபாய்

விம: ஒரு ரூபாய் வாங்கிக்கலாம் ம்....வேகமாய் போக ணும்....(ரிக்ஷாவில் ஏறிப்போகிறான்.)

## காட்சி 32

**விஜயன் வீட்டுத் தோட்டம்**

[வாஸந்தி பாவாடை, தாவாணி, ஜம்பர் வெகு சாதாரணமாக உடுத்திக்கொண்டு செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்கிறாள். விமல் வருகிறான்]

விம: வாஸந்தி இன்னிக்கி உன் முகம், அதோ அந்த ரோஜா மலரைப்போல மலர்ந்து எவ்வளவு பிரகாச மாக இருக்குது தெரியுமா? (சமீபத்தில் வருகிறான்)

வாஸ: (ஜலதோஷம் பிடித்திருந்ததால், கம்மிய குரலில்) கொஞ்சம் எட்டி நின்னே பேசலாமே.

விம: (சிரிக்கிறான்)

வாஸ: (வீட்டிற்கு போக முயற்சிக்கிறாள்)

விம: வாஸந்தி ஏன் ஒரு மாதிரியா பேசுறே? ஜல தோஷமா?

வாஸ: அது என்ன தோஷமோ?....அண்ணா ஆபீஸ்லே இருப்பாரு....

விம: காந்திமதி எங்கேயோ "பெனிபிட்பர் ஃபாமன்ஸ்" ன்னு போயிருக்காப்போல இருக்குது.

வாஸ: (மௌனம்)

விம: அதனாலேதான் இப்போ—(அசட்டுச் சிரிப்புடன்) ஹி...ஹி...ஹி....நான் இங்கே வந்தது, (சிரித்து) ஹ...ஹ ஆசை இருந்தா, அலெச்சலும் உண்டுன்னு பெரியவுங்க தெரியாமே சொல்லலே. ஹ...ஹ...... ஹ...

[மெல்ல, வாஸந்தியை அடுத்துப் போகிறுன். வாஸந்தி விலகிப் போகிருள்]

**வாஸ:** விமல் உங்களுக்குக் கொஞ்சமும் மரியாதை தெரியாது போலிருக்கே.

**விம:** இந்த காரியத்துலே மரியாதை அதிகமா இருக்கிற—ஹ...ஹ அவ்வளவு நல்லதல்ல. ஹ...ஹ... ஹ...

**வாஸ:** எனக்கு மரியாதை யுள்ளவங்க கிட்டேதான் பழகிப் பழக்கம்...ம்...போகலாம்.

**விம:** (பிரியமாக) வாஸந்தி

**வாஸ:** (கோபமாகப் பார்க்கிருள்)

**விம:** நான் இப்போ போயிடுறேன்...ஆனு என்னேட ஒரே லக்ஷியம் நீதான் னு...

**வாஸ:** நிறுத்து உன் பிரசங்கத்தை...இப்ப நீ போகல் லேன்னு...(உரக்க) கெளரி...

**விம:** கெளரியைக் கூப்பிட வேண்டாம் வாஸந்தி...ம்... நீ நல்லா யோசனை செய்து பாரு........(போய்க் கொண்டே) நான் ஒரு நாளும் ஊக்கத்தை இழக்க மாட்டேன். ஊக்கத்தை இழந்தவன்தான் உலகத்திலேயே பெரிய பாப்பர்ங்கிறது என் அபிப்பிராயம்.

[விமல் நாலேந்து அடி எடுத்து வைக்கிறுன். சிகரெட் தவறி கீழே விழுகிறது. அதிலிருந்து ஒரு பாதி சிகரெட் தனியே போய் விழுகிறது. அவன் அந்த துண்டு சிகரெட்டை எடுத்து டின்னில் போட்டுக்கொண்டு போகிறுன். வெளியே போகும்போது ரவி வருகிறுன். ரவியைக் கண்டதும் விமல் சிரிப்பது போல பாவனை செய்து, வாஸந்தியின் பக்கம் உல்லாசமாகத் திரும்பி, சீட்டி அடித்த வாறு போகிறுன். இதைக் கண்ட ரவியின் முகம் மாறுகிறது. ஆனுல், விமல் எல்லையற்ற

சந்தோஷமு—னிருப்பதாக பாவனே செய்த வாறு போகிருன்]

ரவி: (கடுமையாக) வாஸந்தி

வாஸ: (மெதுவாகச் சிரிக்கிருள்)

ரவி: சட் சிரிக்காதே......உன்னுேட இந்தபுக்கு, நீ கற்பனே செய்யிற அந்த அழகு இல்லே.

வாஸ: (பூ வாளியைக் கீழே வைத்து) வீட்டுக்குள்ளே போய் பேசலாம் ரவி.

ரவி: இன்னெரு தடவை சுதந்திரமா என் பேரைச் சொல்லிக் கூப்பிடாதே.........ஹூம் நீ இவ்வளவு பெரிய சாகஸக்காரின்னு தெரியாமே போச்சே

வாஸ: என்ன சொல்றீங்க?

ரவி: (அழுத்தமாக) நீ ஒரு பெரிய சாகஸக்காரின்னு சொல்றேன்.

வாஸ: சாகஸமா?

ரவி: அளவுக்கு மீறின சாகஸம்.

வாஸ: (கோபமாக) சரி, அப்படியே இருக்கட்டும்.

ரவி: அப்படியே இருக்க உன்னுேட அனுமதி தேவையில்லே- நான் வாறேன்......

வாஸ: சந்தோஷம் போய் வாங்க (கோபமுடன் நிற்கிருள்)

ரவி: ம்......கட்டிக்கொள்ளும் ஆடையைப் போலவே, மனதையும் மாத்திக்கிறதுலே, பெண்கள் எவ்வளவு கைகாரிங்கன்னு இப்பதான் புரிஞ்சிக் கிட்டேன்.

வாஸ: (கேலியாக) புரிஞ்சுப் போச்சுல்ல பின்னே நமஸ்தே!

[கேலி செய்யும் வகையில் மிகவும் பணிவாக நமஸ்காரம் செய்து, பூ வாளியை எடுத்துப் போகிருள்.]

ரவி: ஹூம்......மலர்ந்த புஷ்பம் அழகும் வாசனையும் உள்ளதுதான்......ஆனாலும், மலரையடுத்து விஷப் பாம்புகளும் இருக்குங்கிறது ஞாபகமில்லாமே பழகிட்டேன்.

[ரவி போகிறான்—போகும் வழியில் ஒரு வண்ணாத்திப் பூச்சி முள்ளில் பட்டுத் துடித்துக் கொண்டிருக்கிறது.]

## காட்சி 33

### விஜயன் வீட்டுத் தோட்டம்

[இரவு நிலா-விஜயன் தோட்டத்தில், மிகவும் பாஷனா- முதன் முதலில் காந்தி டிரஸ் செய்து வந்து, விஜயனை மகிழ்வித்த அதே இடத்தில், விஜயன் மட்டும் தனித்திருக்கிறான்-காந்தியில்லை-விஜயன் யோசனை செய்தபடி உட்கார்ந்திருக்கிறான்-மணி 9 அடிக்கிறது]

வாஸ: அண்ணா இப்பவெல்லாம் "கிளப்"புக்குக்கூட போகாமே......

விஜ: (அசிரத்தையாகப் பார்க்கிறான்)

வாஸ: வேளாவேளைக்குச் சாப்பிடாமே, இப்படி உற்சாக மில்லாதிருந்தா, உடம்பு என்னவாகும்? இளைச்சிப் பாதியாயிடுச்சு......

விஜ: (மௌனம்)

வாஸ: அண்ணா நான் சொல்றேன்னு......

விஜ: வாஸந்தி......உம்...நீ உள்ளே போ......(தாமதம்) ஹூம்......பாஷன் மனைவியும் சரி, ரொம்ப பிரபல்யமடையாத ஒரு சினிமா நடிகையும் சரி...... அவளோட ஸோல் புரொப்ரைட்டரா அடைய முயற்சி செஞ்சா......இதுதான் கதி......காந்திமதி விஜயன் போய்...இப்ப ஸ்ரீமதி காந்தி தேவி

கௌ: (தூரத்தில்) மெதுவாக வாஸந்தி......சாப்பாடு... தயாராயிடுச்சு......

விஜ: யாரது? கௌரியா? இங்கே வா...ஸ்ரீமதி காந்தி தேவி இன்னும் வரலையே......

கௌ. (நெருங்கி வந்து) இன்னும் வரலே......

விஜ: எங்கே போருங்கன்னு, உன்கிட்டேயாவது சொல்லிவிட்டு போனுங்களா?

கௌ: உங்ககிட்டேயே சொல்லாதப்போ......

வாஸ: அண்ணி ஏதாவது அவசர காரியமா......

விஜ: (கோபமாக) அவசரகாரியம்! எனக்குச் சமாதானம் சொல்ல வேணும்......நீ போ வாஸந்தி

கௌ: வாஸந்திகிட்டே கோபப்படுறதுலே இப்போ என்ன பயன்?

விஜ: ம்......?

கௌ: நான் சொல்றேன்னு கோவிச்சுக் கிட்டாலும் சரி உள்ளதை சொல்லத்தான் போகிறேன்.

விஜ: என்னது?

கௌ: தவறுன்னு மன்னிச்சுக்குங்க.........காந்திமதி அம்மாவோட இந்த போக்கு நீங்க சொல்லிக் கொடுத்ததுதானே? அதுவும் பலவந்தமா......

விஜ: சரியாகச் சொன்னே கௌரி வாழ்க்கைக்கு அவசியமில்லாத வெறும் நாகரிகம்...வாழ்க்கையோட ஆனந்தத்தையே சின்னபின்னம் செய்துடுமின்னு தெரியாமே...... நான்தான்...

கௌ: இந்த பகட்டு நாகரிகமெல்லாம் வெறும் வர்ணக் காகிதம் போலன்னு நான் பலதரம் சொன்னேன்......

விஜ: அதை மனைவிங்கிற வெடிமருந்து மேலே சுத்த விட்ட நான்- அதன் பலனையும் அனுபவிக்கத் தானே வேணும்......

[வாஸந்தி சகோதரனை ஏக்கத்துடன் பார்க்கிருள்.]

## காட்சி 34

**விஜயன் வீட்டு டிராயிங் ரூம்**

[காந்தி எரோப்பிளேன் போட்ட புடவையும், சட்டையும்; போட்டுக் கொண்டு, ஒரு பாட்டை "ஹம்" செய்தவாறு புறப்படு கிருள்- ட்ராயிங் ரூமில்......

"ஹேஸன் ஸ்லோவி" என்ற புத்தகத்தை படித் துக் கொண்டிருக்கிருன் விஜயன்- காளே மாடு போட்ட "புஷ்கோட்" அணிந்திருக் கிருன்- புத்தக அட்டையில், ஏரோப்பிளேனே மாடு இழுப்பது போல போட்ட படம்- காந்திமதி விஜயனே கவனியாது சிறிது தூரம் போய், ஏதோ நினைத்தவாறு, திரும்பி விஜயனிடம் வருகிருள்-ஒரு 'நாகரிகப் புன் முறுவல்' அவன் உதடுகளில்]

**விஜ:** (புஸ்தகத்தைப் படிக்கிருன்) ஆகாரத்தைப் போட்டு விட்டு, அன்பைக் காட்டாதிருப்பது, ஆடு மாடு வளர்ப்பது போல்; அன்பைக்காட்டி மரி யாதை காட்டாதிருப்பது வளர்ப்புப் பிராணியை வளர்ப்பது போல; மரியாதைக் காட்டி, உள்ளத் தில் மதிப்பில்லாதிருப்பது......

**காந்:** (அருகில் வந்தவாறு) ஒண்ணு சொல்ல மறந்துட் டேன்.

**விஜ:** ஒண்ணல்ல- எல்லாமே உனக்கு மறந்துபோய் கொண்டிருக்குது ஸ்ரீமதி காந்திமதி

**காந்:** (செல்லமாக) சொல்றதைக் கேளுங்களேன்.

**விஜ:** நீ சொல்றதை மட்டுமில்லே. ஊரார் சொல் றதையும் கேட்டுத்தான் வாறேன்.

**காந்:** ஐயோ எனக்கு நேரமாவுது.

**விஜ:** ஆமாம் மனுஷனேட ஆயுஸ் ரொம்ப குறைவு தான்.

காந்: நான் ஆயுஸைப்பத்தி சிந்திக்கிறவளல்ல.

விஜ: அதுதான் தெரியுதே......

காந்: இப்ப நான் சொல்றதைக் கேளுங்களேன்.......

விஜ: ரெண்டு பேருலே, ஒருத்தர் சொல்றதை மற்ற வுங்க கேக்கத்தானே வேண்டியிருக்கு.

காந்: இதென்ன இண்ணிக்கி விதண்டா வாதம்? ...வர்ற செவ்வாக்கிழமை, நம்ப வீட்டுக்கு மூப்பது, நாற்பது சினேகிதருங்க வருவாங்க.

விஜ: உன்னோட சிநேகிதங்களா?

காந்: ஆமாம்...நம்மோட சிநேகிதருங்கதான்.

விஜ: விசேஷம்?.......

காந்: அண்ணிக்கு உங்க பிறந்த நாளில்லையா? அதுக் காக ஒரு பார்ட்டி தரலாமுன்னு நெனைச்சிருக்கேன்.

விஜ: நெனைச்சிருக்கே. அவ்வளவுதானே?

காந்: இல்லே—எல்லோரையும் வரும்படியா.......

விஜ: என்னை கூடகேக்காமே......

காந்: உங்ககிட்டே சொல்லணுங்கிறது... ...

விஜ: அவ்வளவு அவ'சியமாப்படலை உனக்கு......ஆனா, ஒரு சிறுதப்பு செய்துகிட்டே நீ. என்னோட பிறந்த நாள் செவ்வாக்கிழமையில்லே... ......

காந்: செவ்வாயா?

விஜ: இப்ப, நினைவுகூட தடுமாறிப் போயிடுதுல்ல, அது போல இதுவும் கொஞ்சம் தவறிப்போச்சு—என் பிறந்த நாள் புதன்கிழமை.

காந்: (வெகுசாதாரணமாக) ஒருநாள் தானே வித்தி யாசம்.

விஜ: ஆமாம் அதுகூட பரவாயில்லைதான்.

காந்: "பார்ட்டி" தானே முக்கியம்

விஜ: அப்படின்னு நீ நெனேக்கிறெ நூத்துலே ஒரு வார்த்தை

காந்: எப்படியிருந்தாலும், செவ்வாக்கிழமை எல்லாரும் இங்கே வருவாங்க......பிறந்தநாளை ஒருநாள் முன்னுலேயே கொண்டாடிடலாம், என்ன?

விஜ: ம்...உன் நாகரிகத்தைப்போலவே, என் பிறந்த நாளும் முன்னேறிகிட்டே போகுது. பேஷ்

காந்: சும்மா பைத்தியம் போல அதும் இதும் சொல்லாமே இருங்க.

விஜ: நான் பைத்தியத்தைவிட இன்னும் உயர்ந்த ஸ்திதியிலே இருக்கேன், ஸ்ரீமதி காந்திதேவி இப்ப நாளெரு பாஷன் நாரீமணியோட கணவன்.

[அவள் பதில் சொல்லாது போகிருள்]

விஜ: (உலாவிக்கொண்டே) இதுபோல உள் ளஸ்திரீகளுடைய பேருக்கும் புகழுக்கும் அப்பாலேதான், கணவனுடை ஆடம்பரமான சமாதியா?......ம்?

[ஜன்னல் வழியாகப் பார்க்கிருன். "சாப்பாடு தயார்" என்ற போர்டை கறயைான் அரித்திருப்பது தெரிகிறது]

## காட்சி 35

**ராம்நாத் வீட்டுத் தோட்டம்:**

[ரவி ஏதோ யோசனை செய்தபடி தோட்டத்தில் உலாவிக்கொண்டு இருக்கிருன். ஜயஸ்ரீ ஓடி வருகிருள்]

ஜய: அண்ணு நான் ஒரு ஜோஸ்யம் சொல்லட்டுமா?

ரவி: என்ன ஜயஸ்ரீ?

ஜய: நீ இங்கே எதுக்காக நிக்கிறேன்னு...சொல்லட்டுமா?

ரவி: ம்.........

ஜய: சரி, கண்ணை மூடிகிட்டு இந்த ரெண்டு விரல்லே ஒண்ணைமட்டும் தொடு.

[ரெண்டு விரல்களை ஜயஸ்ரீ ரவியின் முன்னால் நீட்டுகிருள்—ரவி கண்களை மூடியபடி ஜயஸ்ரீயின் ஒரு விரலைத் தொடுகிருன்]

ஜய: ம்......கண்டுபுடிச்சுட்டேன்......நீ இப்போ...... வாஸந்தி......அக்காவை......

ரவி: (பழித்து) உங்க...வாஸந்தி......அக்காவை......

ஜய: நல்ல, தங்க அக்கா—இல்லே அண்ணு?

ரவி: ஆளு; கில்ட்தான் கொஞ்சம் குறையணும்.

ஜய: (திடீரென்று) ஹையா அதோ வாஸந்தி அக்கா...

[ரவி ஆவலுடன் திரும்பிப் பார்க்கிருன்; யாருமில்லை]

ஜய: (சிரித்துக் கையைக் கொட்டி) அண்ணு உன்னை நான் ஏமாத்திப்புட்டேனே—ஏமாத்திப்புட்டேனே

[கேலி செய்து பாடுகிருள்—ரவி கோபப்படுகிருன்]

ரவி: ம்......ஏய் ஜயஸ்ரீ......நீ போகமாட்டே?

ஜய: நான் அம்மாகிட்டே எல்லாத்தையும் சொல்லி ஆச்சுங்க......

ரவி: என்னங்க?

ஜய: (சற்று எட்ட நின்று) நீ புஸ்தகத்திலே, வாஸந்தி அக்கா படத்தை ஒளிச்சி வச்சிருந்தல்ல, அதை நான் கண்டு பிடிச்சு......அம்மாகிட்டே......

[சிரிக்கிருள்]

ரவி: சே அது சரித்திர புஸ்தகமில்ல—அந்த போட்டோ லார்டு கிளைவ் தெரியுமா?

ஜய: ஓஹோ கிளைவா? ஏன் அண்ணு ஆம்பிளைங்க சேலை கட்டி, ஜடை போட்டு சாந்து பொட்டுகூட

வச்சுக்குவாங்களா? (கேலியாக சிரித்து) ஹ......ஹ......அப்படின்னு......நீயும்......

**ரவி:** ஏய்......ஜயஸ்ரீ......எது அளவுக்கு மீறித்தான் போகுது...ம்...போறியா...இல்லியா?......(ஜயஸ்ரீ போகிறுள்)

**ரவி:** (தனியேமெதுவாக) ம்...அவ மனஸை ரொம்ப நோக அடிச்சுட்டேன், போல இருக்கிறது.

[காந்திமதியின் வீட்டில், வாஸந்தி தோட்டத்தில் இருக்கிறுள்]

**வாஸ:** (தனக்குள்மெதுவாக) ம்...அவர் மனஸை ரொம்ப நோக அடிச்சுட்டேன் போலிருக்குது.

**கௌ:** (மரம் பின்னுல் ஒளித்தவாறு) அதனுலே, அவரு கோவிச்சுக்கிட்டா முடியுமா?

**வாஸ:** கௌரி,

**கௌ:** (மெதுவாகச்சிரித்து) காலேஜுக்குப்போய் வந்தது ரொம்ப சௌகரியமா யிருந்துச்சு......ஆனு ஒருவாரமா......போகாமே......(சிரிக்கிறுள்)

**வாஸ:** அவர் முகத்தை நேரே பார்க்கவே எனக்கு பயமாயிருக்குது கௌரி.

**கௌ:** இப்ப இப்படித்தானம்மா இருக்கும். அங்கே போனு, பயம் பறந்தோடி போயிடும் — நாணம் தான் கப்புன்னு வந்து பிடிச்சுக்கும்.

**வாஸ:** (தனக்குத்தானே) ஹூம், அண்ணிக்கி நான் என்னெல்லாம் பேசிட்டேன்...நான் பேசினத்துக்கெல்லாம், அவருகிட்டே போய் மன்னிப்பு கேட்டா...

**கௌ:** (சிரித்து கண்சிமிட்டி) நீ அவருகிட்டே எவ்வளவோ கேக்க வேண்டியிருக்குது. ஆனு,

மொதல்ல கேக்கவேண்டியது, மன்னிப்புத்தான்— சிக்ஷையுள்ள இடத்துலேதான் ரக்ஷையும்.

**வாஸ:** (மெதுவாக சிரிக்கிறாள்)

**கௌ:** ம்...நல்லா...சிரிம்மா......கல்யாணமாகாத பெண்ணோடெ வெற்றியெல்லாம் சிரிப்பிலேதான்... (சிரிக்கிறாள்)

## காட்சி 36

**விஜயன் ஆபீஸ்**

[விஜயன் மிகவும் கோபமாகக் காணப்படுகிறான்— மனதில் எல்லையற்ற சஞ்சலம்]

**விஜ:** (பேப்பரைப் பார்த்தவாறே மெதுவாக) ம்...அனுபவங்கிறது...நம்ப கையிலுள்ள பொருள்களை இழந்ததக்கப்புறம் நமக்கு ஏற்படுதே புத்தி — அதுதானு?...எவ்வளவு சரியாயிருக்கு (பேப்பரைக் கவனித்துச் சற்று கோபமாக, உரக்க) அந்த ராமனை இங்கே வரச்சொல்லு......

[விஜயன், கோபமாக இதுவரை பேசி அறியாத தங்கப்பன், திகைத்து நிற்கிறான்]

**விஜ:** (கோபமாக) டேய்......ஏண்டா மரம்போல நிக்கிறே?...அந்த கம்போஸிடர் ராமனை இங்கே வரச்சொல்லு...

(அட்டென்டர் பயந்தபடி போகிறான்)

[விஜயன் ஒரு பைலைப் பார்த்துக் குறுக்கே கோடு கிழிக்கிறான். ஒரு டிராப்டைக் கிழித்தெறிகிறான். காந்திமதி "பெனிபிட் பர்பாமன்ஸ்" பற்றி வந்த நியூஸ் ஐட்டத்தில் பெரிதாகக் கோடு போடுகிறாள், ராமன் வருகிறான்]

**விஜ:** அந்த நியூஸ் ஏன் சேர்க்கலை?...ம்...நேரா நின்னு பதில் சொல்லு.

**ராம:** எந்த நியூஸ்?

**விஜ:** எந்த நியூஸா நான்ஸென்ஸ் அந்த புது மந்திரி சபை அமைப்புப் பற்றி நான் கொடுத்த நியூஸ் தான்.

**ராம:** அது எங்கிட்டே வந்து சேரலே ஸார்

**விஜ:** கிடைக்கலேயா?

**ராம:** இல்லே... ஸார்

**விஜ:** ம்... இவ்வளவு அசிரத்தையா?...ப்ரொப்ரைட்டர் கிட்டே ரிப்போட் செய்து, உங்களையெல்லாம் வேலையைவிட்டு நீக்க, நோட்டீஸ் கொடுத்துட்டு மறு காரியம் பாக்குறேன்.

**ராம:** ஐயோ ஸார்... நான்...

**விஜ:** என் முன்னலே நிக்காதே...உம்...போ (ராமன் போகிருன்)

[சிகரெட் எடுக்க, விஜயன் பாக்கெட்டிலிருந்து சிகரெட் கேஸ் எடுக்கிருன். அத்துடன் அந்த நியூஸ் ஐட்டம் கீழெ விழுகிறது]

(அதை எடுத்துப் பார்த்து) தங்கப்பன்

**அட்:** ஸார்...

**விஜ:** அந்த ராமனை இங்கே கூப்பிடு......(மெதுவாக) இந்த நியூஸ் எப்படி என் 'பாக்கெட்'க்குள்ளே போச்சு? (ராமன் வருகிருன்) ராமா ...ம்...என்னுடை ஞாபகப் பிசகாலே அந்த நியூஸ் எங்கிட்டேயே தங்கிப் போச்சு.......ம்......இந்தா இண்ணிக்கு நியூஸ்லே சேத்திடு.

**ராம:** (படித்துப் பார்த்துவிட்டு) வேண்டாம் ஸார்—இனி இந்த நியூஸாலே உபயோகமில்லே...

**விஜ:** ஏன்?

**ராம:** இந்த மந்திரி சபை இண்ணிக்கி ராஜினுமா செய்திடுச்சி......இண்ணிக்கி வேருெரு புதிய மந்திரி சபை...

விஜ: சரி...நீபோ... (லீவுலெட்டர் பார்க்கிறுன்—வைத்திய குறிப்புப்பற்றி எழுதுபவன் லீவுலெட்டர்) ம்...வைத்திய குறிப்பு எழுதுறவனுக்குச் சுக மில்லே...சதா லீவு லெட்டர்...சே...ஏய்

தங்: ஸார்...

விஜ: போய் கோபியைக் கூப்பிடு.

தங்: கோபி! வாரப்பலன் எழுதி வந்த ஜோஸ்யர் காலமாயிட்டாருன்னு, நீ ஜோஸ்யப் பகுதியிலே எழுதி வர்றீல்ல?...அதைப்போல வைத்தியப் பகுதியிலேயும் செஞ்சுடாதே......வைத்தியருக்கு டேஞ்சராயிருக்காம். அவர் திரும்பி வந்தாப் பார்க்கலாம் அதுவரைக்கும் வைத்தியப் பகுதிக்குப் பதிலா 'கிராமம் போவோமே' ன்னு ஒரு புதிய காலம் தொடங்கு...புத்தியோட எழுது.

கோபி: ஸரி...ஸார் (போகிறுர்)

விஜ: (கோபமாக) ஏய்......இவனுங்க இந்த ஆபீஸிலே எதுக்காக சம்பளம் வாங்குறுனுங்க......ம்...அந்த அட்வர்டைஸ்மெண்ட் மேனேஜரைக் கூப்பிட்டு... ம்...தங்கப்பன்...

(காலிங் பெல்லே கோபமாக அடிக்கிறுன்)

## காட்சி 37

### காந்திமதியின் அறை

[காலே 7-30 மணி 'சைம்ஸ்'—காந்தியின் ஒரு ஹம்மிங், டிரஸ் செய்துகொள்ளும் பாட்டாக மாறுகிறது. வாஸந்தி கண்விழித்துப் பார்க்கிருள்—காந்தி மேக் அப் செய்து கொண்டிருக்கிருள்—அன்றுதான் "ஹேர் டிரஸ்ஸிங் டே" காந்திமதி மேஜையின் மேல் 'ராம பாணம்' பத்திரிகை கிடக்கிறது — அதில் 'நாகரிகப் பேய்' என்ற ஒரு கதையை விஜயன் எழுதியிருக்கிருன். அதற்கு ஒரு 'கார்ட்டூன்'-

அவள் அதை அலக்ஷியமாகப் போட்டுவிட்டு, 'ஹேர் ஸ்டைல்' என்ற பத்திரிகையைப் புரட்டிப் பார்த்து 'மேக் அப்' செய்து கொள்ளுகிருள்—மிஸ்டர் எக்ஸ் வருகிருர்]

**எக்ஸ்:** குட்மார்னிங்

**காந்:** என் 'ஹேர் ஸ்டைல்' எப்படியிருக்குது?

**எக்:** (பிரமாதமாக பல கோணங்களில் பூதக்கண்ணுடி மூலம் எட்டி நின்று பார்த்து) கொஞ்சம் இந்தப் பக்கம் திரும்புங்க......ஆங்...இந்த 'ஆங்கிள்'லே கொஞ்சம் அதிகமா போயிடுச்சே. நெற்றியிலே ஒரு ஏழு ஏழரை சுருள் அதிகமா யிருக்கணும்...

**காந்:** எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தேன், சுருள மாட்டேங்குது...

**எக்:** நான் சொல்றபடி செய்யுங்க. இங்கே பென்ஸிலின் இருக்குதா? பென்ஸிலினுலே ஆகாத காரியம் இந்த உலகத்திலே எதுவும் கிடையாது. ஏழு பென்சிலின் எடுத்துக்கணும் ஒவ்வொண்ணுக் கும்......

**கௌ:** (வந்துகொண்டே) அம்மா எஜமானர் வந்துட் டாரு.

**காந்:** வரட்டுமே...(எக்ஸ்பர்ட்டைப் பார்த்து) அப்புறம்?

**விஜ:** (அடுத்த அறையிலிருந்து கொண்டு) காந்தி...

**காந்:** (எக்ஸ்பர்ட்டிடம் மெதுவாக) ...ம்...தயவு செய்து கொஞ்சம் இருங்க.........(உரக்க) இதோ வந்துட் டேன்...(போகிருள்)

**எக்ஸ்:** (கௌரியிடம்) ஹ......ரொம்ப மோசமா யிருக் குதே......

**கௌ:** (மௌனம்)

**எக்ஸ்:** இப்படியா கூந்தலைக் கட்டிக்கிறது? இண்ணிக்கி 'ஹேர் டிரஸ்ஸிங் டே'ங்கிறது மறந்து போச்சா? இந்த கூந்தலே, ஸ்டைலையா......

கௌ: (சற்றும் மதிக்காமல்) போதும் எனக்கு அதெல்லாம் வேண்டியதில்லை......

எக்: சே......இந்த முகத்துக்கு 'ஈஜப்ஷன் ஸ்டைல்' தான் எடுப்பா யிருக்கும்......மம்மிகளுக்கு கூந்தல் அலங்காரம் செய்யிருப் போல......

கௌ: இங்கே அம்மியும் வேண்டாம் குழவியும் வேண்டாம்; உங்க வேலையைப் பார்த்துகிட்டு போங்க......

எக்: ஹோ இந்த ஸ்திரீக்கு இண்ணிக்கி கூந்தல் காம்படிஷன்ல்லே......வெறும் ஸைபர்தான்......

கௌ: அது உங்க மூளையிலே யல்ல......

[கௌரி கோபமாகப் பார்த்துவிட்டுப் போகிருள்.]

## காட்சி 38

### விஜயன் வீட்டுத் தோட்டம்

[வாஸந்தி தோட்டத்தில் 'நாகரிகப் பேய்' என்ற கதையைப் படித்துக் கொண்டிருக்கிருள். விமல் வருகிருன்.]

விம: (சிரித்து) பரீக்ஷை எல்லாம் முடிஞ்சும்......படிப்புக் குறைவே யில்லே......ஹ...ஹ...ஹ...

[வாஸந்தி திரும்பிப் பார்த்து, விமலேக் கண்டதும் வெறுப்புடன், எழுந்துபோக முயற்சிக்கிருள்]

விம: வாஸந்தி ஏன்...... எழுந்துட்டே?......

வாஸ: என்ன செய்யணும்னு எனக்குத் தெரியும்.....

விம: (அன்புடன் சொல்வது போல) வாஸந்தீ என்னுடைய வேண்டுகோளை......மறுபடியும்...

வாஸ: வேண்டுகோளா?......

விம: ஆம் வாஸந்தி (நெருங்கி) என் இருதயத்திலே உனக்காக, நான் காதல் கடிதம் எழுதிட்டேன்... ஆனு...அதுக்கு ஸ்டாம்பு ஒட்டறதும் முத்திரை போடுறதும் அவசியமில்லையா?

**வாஸ:** தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாமே வந்த வழியே போய்வரலாம்.

[பின் பக்கம் போகிறாள்.]

**விம:** (பக்கம் சென்று) போகாதே வாஸந்தி......என் மனஸிலே ஒரு ரகஸ்யம் இருக்குது......ரொம்ப பயங்கரமான ரகஸ்யம். அதைச் சொல்லணும்னு...

**வாஸ:** எந்த ரகஸ்யத்தையும் நான் கேக்க தயாரா யில்லை. கொஞ்சம் தள்ளி நிண்ணே பேசுங்க......

**விம:** இல்லை......அது உங்க குடும்ப மானத்தையே பாதிக்கும் ரகஸ்யம் (சமீபமாக வந்து) நான் உன் கிட்டே யாசிக்கிறதைப் போல, ஒரு ஆசாமி என் பிரியத்துக்காக கெஞ்சித் தவிக்குது. அதை நீ யோசித்துப் பாக்கணும்.

**வாஸ:** அதைப் பத்தி எனக்கு அவசியமில்லை.

**விம:** வாஸந்தி என்னோடெ 'உம்' ங்கிற சம்மதத்துக்காக தவம் கிடக்கிறது யாருன்னு உனக்குத் தெரியுமா......?உன்னோடெ

**வாஸ:** (மௌனம்-சட்டை செய்யாது வேறு பக்கம் பார்க்கிறாள்)

**விம:** உன்......அண்ணி...காந்திமதி

**வாஸ:** (மிகவும் கோபமாக) என்ன? என்ன தைரியம் உனக்கு? (என்று சொல்லியபடி கன்னத்தில் பளாரென அடித்து விடுகிறாள்)

[விமல் அவள் கையைப் பிடித்துக் கொள்ளுகிறான். தூரத்தில் வரும் விஜயன் இந்தக் காட்சியை அரைகுறையாகப் பார்க்கிறான். அவனுக்கு வாஸந்தி தவறாக நடந்து கொள்வதாகப் படுகிறது.]

**விஜ:** வாஸந்தி (கோபத்துடன் உரக்கக் கூப்பிடுகிறான்)

விம: (சிரித்து) விஜயன் தயவு செய்து மன்னிச்சுக்கோ......பரவாயில்லே......வாஸந்தி தெரியாமே செய்திடுச்சி......ஆனு நான்...என் தங்கையைப் போல தான் நெனெச்சிருக்கேன்...என் கையைப் பிடிச்சதை நீ தப்பா எடுத்துக்காதே...வாஸந்தி...என்ன இருந்தாலும் சின்ன பொண்ணுதானே...

[கோபமாக இருந்த விஜயன் இதைச் சரியாக கேட்சாமல், வாஸந்தியை படாரென அடித்து விடுகிருன்-வாஸந்தி அழாமல் கன்னத்தை ஒரு கையால் பிடித்தபடி, அவனை ஒருமுறை ஏறெடுத்து பார்த்துவிட்டு, அப்பால் போகிருள்]

விம: ஹூம்......பருவமல்லவா? பாவம்......ஒரு சிறு சபலம்.

விஜ: இருந்தாலும்...

விமல்: ஹ...இப்போ என்கிட்டே தன் காதலை சொன்னதாலே ஒண்ணும் தவறிப் போயிடலே; நான் சகோதரன் போல...

விஜ: ஹூம், காதலாம் காதல். நவ நாகரிகத்துக்கு முதல்படி...

விம: இன்னும் சொல்லப்போனு தப்பு என்னுடையது தான்...நீ இல்லாதபோது நான் இங்கே வந்தது......

விஜ: நீ வந்தா என்ன? அதுக்காக...

விம: இது காதல்லே முடிஞ்சது ஒரு ட்ராஜடிதான். போனுப் போகுது...எனக்காக வாஸந்தியை...நீ...

விஜ: மன்னிக்க வேண்டியது நீதான் விமல்.

விம: நான் தான் முதல்லேயே பரவாயில்லேன்னு சொல்லி விட்டேனே......இந்த விஷயம் நமக்கு மாத்திரந்தானே தெரியும்...... ஹ...ஹ...

[மெதுவாக சிரிக்கிறான்-சிகரெட்டை எடுத்துத் தீப்பெட்டி வேண்டுமென்று சைகை காட்டு கிறான்.]

## காட்சி 39

**ராம்நாத் வீட்டின் முன் ஹால்**

[மிஸஸ் ராம்நாத், ரவி, ஜயஸ்ரீ முதலியோர் அங்கே இருக்கிறார்கள். ஸ்ரீமதி காந்திதேவி சிரித்துக் கொண்டு அங்கே வருகிறாள்.]

**காந்:** நமஸ்தே நமஸ்தே

**மிஸ:** காந்திதேவியா வாங்க...வாங்க......

**ஜய:** ஜெய்ஹிந்த் மாமி

**ரவி:** (மெதுவாக) இது போல ஆசாமிகளுக்கு, ஜெய் ஹிந்த் வேற

[காந்தியின் உடையையும் அலங்காரத்தை யுங் கண்டு, ரவி சற்று கோபமாகத் திரும்பி கொள்ளுகிறான். அவன் முகத்திலிருந்த அதிருப்தியை, காந்திதேவி எதிரேயுள்ள நிலைக்கண்ணாடியில் பார்த்து விடுகிறாள்.]

**காந்:** (சிரித்து) ஏது, இண்ணக்கி ரவிக்கு என்மேலே இவ்வளவு கருணை?

**ரவி:** உங்களுடைய இந்த ஆடம்பரமான போக்கைக் கண்டு......

**காந்:** (சிரித்து) நான் அழகா இருக்கிறது ரவிக்கு பிடிக் கலை.

**ரவி:** அழகு வேண்டியதுதான். ஆனா, இது அழகா? பெண்ணுக்கு உலகத்துலே வேண்டியது அழகு ஒண்ணுதானா?

**காந்:** என்ன?

**ரவி:** இந்த அழகு எவ்வளவோ வழியிலே குலைஞ்சு போகும். குணமில்லாத அழகு, பலவித விபரீத விளைவுகளுக்கும் ஆணிவேர்போல.

**மிஸ:** (அதட்டி) ரவி இது என்னது? என்ன சொல்றே?

**காந்:** (சிரித்து) சும்மா போகட்டும்.

**ஜய:** (கைதட்டி) அண்ணு இண்ணக்கித்தான் ரொம்ப ளோங்ககிட்டே தைரியமா பேசி இருக்குது.

**காந்:** ரவி உனக்கு ஏன் பிடிக்கலே?

**மிஸ:** அவன் ஒரு பைத்தியக்காரன்... அவன் கிட்டே என்ன பேச்சு காந்திதேவி.

**ரவி:** ஆமாம் வேண்டாந்தான். விலைவாசிங்க கீழே விழணும்னு, வாங்குறவங்க சாமான் மேலே விழாமே இருக்க வேண்டியதும் அவசியம்னு தெரிஞ்சிக் குங்க.

**காந்:** (சிரித்து) அப்போன்னு இது பிளாக் மார்க்கெட் அழகுன்னு சொல்றே?

**ரவி:** அதைவிட மோசமானது. தாவி ஓடி வரும் குழந் தையை அள்ளியெடுத்து முத்தமிட விரும்புற ஒரு தாயோட ஹிருதயத்தைக்கூட தடுப்பது உதட்டுச் சாயம் வெளுத்து விடுமல்லவா?

**மிஸ:** ரவி நீ அத்துமீறி பேசுறே.....

**காந்:** பேசட்டும் (சிரித்து) இந்தா பார் ரவி உலகம் ஒரு கண்ணாடிபோல, நாம் சிரிச்சாத்தான் சிரிக்கும் "உம்"னு இருந்தா......உலகமும் "உம்"னுதான் இருக்கும்.

**ரவி:** ஆமா, மஞ்சக்கண்ணாடி மாட்டிக்கிட்டு பாத்தா, எல்லாம் மஞ்சளாத்தான் தெரியும்ங்குறதையும் ஞாபகத்துலே வச்சுக்கணும்......ஹூம்... இன்பங் களைப்பெற விரும்புவதைவிட, இலட்சியங்களைப் பெற விரும்புறதுதான்......

காந்: ரவி கொஞ்சம் சாந்தமாப் பேசு. எனக்கு இலட்சியமில்லேன்னு சொல்றே? பொதுமக்களுக்கு நான் செஞ்சுவர்ற......

ரவி: ஊர்விளக்கை மாசில்லாமே துடைச்சு, திரியைச் சரிப்படுத்தி, பிரகாசம் செய்யவேண்டியது அவசியம்தான். ஆனு, இதற்கு முன்னுலே வீட்டு விளக்கைக் கொளுத்தணும். இல்லேன்னு, தொண்டு முடிஞ்சு, வீட்டுக்கு வர்றப்போவே, இருட்டுலே தடுமாற வேண்டியிருக்கும்.

மிஸ: "பொண்ணுங்க கிரஹ லக்ஷ்மிங்க. அவுங்க வீட்டை நிம்மதியாவும், சமாதானமாகவும், உள்ளத் திருப்தியோடவும் வச்சுக்கிட்டிருந்தா போதும்..." அப்படி, இப்படின்னு அவன் லெக்சர் அடிக்க ஆரம்பிச்சுட்டானல்ல......இனி விடிஞ்சாப்பலே தான்.

ரவி: இது, நீங்க செய்ற மேடைப் பிரசங்கம் போல வெறும் ஏட்டுச்சுரைக்காயல்ல. நீங்க வீட்டைப் பாத்துக்கிட்டா, உலகம் தானே முன்னேறும். வேலையில்லாமே சிரமப்படுற ஆம்பிளேங்க, இதைக் கவனிச்சுக்குவாங்க.

[இவன் இப்படிக் கடுமையாகப் பேசிக்கொண்டிருக்கும்போது வாஸந்தி வருகிருள். ரவி சற்றுக் கோபமாகப் பேசுவதைக் கேட்டு பிரமித்து நிற்கிருள்]

காந்: ...ம்...ரவி நீ பேசுறது........

ரவி: மன்னிக்கணும்...பதட்டத்துலே ஏதேதோ பேசிட்டேன்.

மிஸ: அந்த சின்னப் பொண்ணு வாஸந்தியை, என்னமா எல்லாம் இவன் வாட்டி வதைக்கப்போருனே?

காந்: வாஸந்தியும், இவன் சொல்லியோ என்னமோ கட்டுப் பெட்டியா மாறிவருதே. அதைச் சொல்லுங்க (காந்திதேவி சிரிக்கிருள்)

ரவி: இந்தக் காலத்துலே ஜனங்க ஆடையைத்தான் முக்கிய கௌரவமாக கருதுவாங்க. அவுங்க மதிப்பு ஆடை மதிப்போட நிண்ணுடுறதுலே என்ன ஆச்சரியம் வாஸந்தி இந்தியப் பெண்ணோட ஆடை போட, இந்திய கலாச்சாரத்தையும் அனுசரிச்சு வருது; அவள் அழகோடு நல்ல குணமும் சேர்ந்திருச்சு. என்னைக் கேட்டா ஒவ்வொரு இந்தியப் பொண்ணும் வாஸந்தி போலத்தான் இருக்கணும்.

காந்: (சிரித்து) இப்பப்போ வெக்கத்தாலே தலை குனிஞ்சு வருதே, அந்த வாஸந்திதான் வேணும். சிரிச்சுவந்த பழைய வாஸந்தி வேணும்.

ரவி: பழைய வாஸந்திங்க நம்முடைய சுதந்திரத்துக்கே எதிரிங்க அர்த்தமில்லாத சிரிப்பிலே எதையும் அர்த்தமில்லாமே செஞ்சிடுவாங்க. இப்போ உள்ள, நாணங்கலந்த அடக்கமான, அறிவுள்ள, பரந்த மனதுள்ள வாஸந்திங்கதான் நாட்டுக்குத்தேவை.

[இதைக்கேட்டு வாஸந்தி உள்ளம் பூரிக்கிருள். எதிரே ஒரு வண்ணத்திப் பூச்சி, ஆனந்தமாக மலர்ச் செடியில் மது உண்டு கொண்டிருக்கிறது]

மிஸ: சரி...சரி...வாங்க காந்திதேவி......காலேஜிலே செய்யவேண்டிய "டிபேட்"டை இங்கே நடத்துறுன்.

காந்: ரவி இது தெரிஞ்சுக்க...இது விளம்பர உலகம்... சேவை செஞ்சா மாத்திரம் போதாது. தமுக்கு போடவும் தெரியணும்.

[இருவரும் உள்ளே போகிருர்கள்]

## காட்சி 40

பல இடங்கள்:

[விஜயனும் காந்திதேவியும் சந்திக்கும் பல காட்சிகள்—விஜயன் வீடு—தோட்டம்—போர்டிகோ முதலியன]

விஜ: (வீட்டுக்கு வரும்போது, காந்திதேவி வெளியே போவதைக் கண்டு, கேலியாக) ஓ தேவி புறப் பட்டாச்சா?

காந்: (சிரித்துக்கொண்டு) சமூக நலனிலே பெண்கள் பங்கு பற்றி இன்னிக்கி மீட்டிங் இருக்குது.

விஜ: (கிண்டலாக) ஓ அதுக்குத் தலைமை வகிக்கணும் ஹா—ம் அறிவுக்கும் எல்லையில்லை. அன்புக்கும் எல்லையில்லை.

காந்: ஆமாம்...வரட்டுமா?...ம் இன்னும் 10 நிமிஷத் திலே அங்கே இருக்கணும்...(போகிருள்)

விஜ: ம்...போ...போ...ஜல்தியாப்போ.....இல்லேன்ன வானம் இடிஞ்சு, மழை பெஞ்சிடப்போவுது. பெண் களோட தேக பலத்துக்கு பயப்படாத ஆண்கள் ஏராளம்...ஆன, அவுங்களோட வாய்க்கு அஞ்சி ஒதுங்காத மானமுள்ள ஆள் கிடையாது.

காந்: (திடுக்கிட்டு) ஐயையோ; மறந்தே போயிட்டேனே!

விஜ: (கேலியாக) ஆமாம்...விதவைங்க சங்கம் சார்பா உள்ள லெக்சர்......???

காந்: உங்களுக்கு ஞாபகமிருந்துமா, பேசாமே இருந் திட்டீங்க?...முன்னலேயே ஞாபகமூட்டின என்ன?

விஜ: தேவி மறந்துட்டேன்......இனிமே ஞாபகமூட்டு கிறேன்.

(காந்திதேவி போகிருள்)

ம்...போயாச்சு...உலகத்திலேயே ஆப்த சினேகி தங்க மூணுபேர்தான்—நாகரிகந் தெரியாத வயோ திக மனைவி, பழகிய நாய், கையிலுள்ள பணம்... ஹா—ம்

[பல நாட்கள் விஜயனும், காந்திமதியும் சந்திக்க வில்லை. பிறகு ஒரு நாள் அவன் ஆபீஸுக்குப் போகும்போது அவள் குறுக்கிடுகிருள்]

காந்: (வீட்டுக்கு வரும்போது) எங்கே ஆபீஸுக்குப் போறீங்களா?

விஜ: (போய்க்கொண்டே) அடடே ரொம்ப நாளைக்கப் புறம், இண்ணக்கி நாம வீட்டுலே சந்திச்சுக்கிட் டோமே இவ்வளவு சீக்கிரமா உன்னாலே வீட்டுக்கு திரும்ப முடியும்னு நான் நினைக்கவே இல்லே...ம்... குஷ்டரோக நிதிக்கூட்டம் இவ்வளவு சீக்கிரமாவா முடிஞ்சுப் போச்சு?

காந்: ஆமாம்...நாளை பெண்கள் பாடசாலை நிதி...

விஜ: (தூரத்தில் நின்றுகொண்டு) இனிமே பெண்கள் தங்கள் புருஷங்களுக்காக நிதி ஒண்ணு தேட வேண்டியதுதான் பாக்கி ......ம்......பெண்ணோட அன்பு தாடி போலன்னு சொன்னானே, ஒரு சின்ன தப்பு செஞ்சுட்டான் ......ஒரு நாகரிகப் பெண்ணோட அன்புன்னு சொல்லி இருந்தா இன் னும் சரியா இருந்திருக்கும். வெட்ட வெட்ட, வள ரத்தான் செய்யுது.

* * *

விஜ: ம்...ம்...

காந்: ம்...ம்...

விஜ: நமஸ்...ஸ்...ஸ்...தே

காந்: (திடுக்கிட) நமஸ்...தே

விஜ: நான் வீட்டுக்கு வந்துட்டேன்...இனி காவல் காத் துக்கிறேன்...நீங்க போங்க.

காந்: நான் சமூக சேவைக்கு...

(காந்தி தயங்கித் தயங்கி, சமூக சேவைக்கு புறப் படுகிறாள்)

விஜ: ...ஹூம்...இதுதான் பெண்ணோட சுதந்திரம்... ம்...எந்தச் சந்தர்ப்பத்திலே, யாரு, எதை, எப்படி, ஏன் செய்யணும்ங்குற அவசியமில்லே...

* * *

[வீட்டில் விஜயனும் காந்தி தேவியும் சந்திப்பதே அபூர்வமாகி விடுகிறது — வாரக் கணக்காகவும் சந்திப்பதில்லை. விஜயனுக்கு இரவெல்லாம் பத்திரிகை ஆபீஸில் வேலை. காந்தி தேவிக்குப் பகலெல்லாம் நாட்டுக்குச் சேவை—திறப்பு விழா, அஸ்திவாரக் கல், தலைமை தாங்குதல் வகையரு அவள் மூச்சாக இருக்கிறது]

**விஜ:** கௌரி நாட்டுக்குச் சேவை செஞ்சு, அம்பாரம் தூக்கப்போன ஸ்ரீ காந்தி தேவியார், இன்னும் திரும்பவில்லையா?

**கௌ:** ... ... ...

**விஜ:** என்னையும் அந்த விடுதியிலே சேத்திடச் சொல்லு, கவலை தீந்து போயிடும்...ம் மனிதன் பிறப்பதும் குறையிலே, இருப்பதும் குறையிலே, இறப்பதும் குறையிலே என்பதை அறியாத மடையனு இருந்திருக்கேன். ஆனு, இதுதான் பாஷன் உலகமா இருக்குதே.

**கௌ:** நீங்க பகைமை காட்டக்கூடாது; அது எதையும் அழிச்சிடும்.

**விஜ:** என்ன?

**கௌ:** இல்லே...அன்புதான் எதையும் வளக்கும்...அதனுலே...

**விஜ:** ஒரு பிடி மண்ணை அன்போட அள்ளி பாஷன் மனைவி தலையிலே போடு...

## காட்சி 41

[விஜயன் ஆபீஸ். அவன் ஏதோ எழுதிக்கொண்டிருக்கிருன்]

**விஜ:** "குணசாலியான பெண் தன் புருஷனுக்குக் கிரீடமாகிருள்; இச்சை உண்டு பண்ணுகிறவள் எலும்

புருக்கியாகிருள்'' என்று சொல்வதும் சரியல்ல. குணசாலியான பெண்ணே உலகில் கிடையாது. இயற்கை சிருஷ்டித்த பொறுத்துக் கொள்ளக் கூடிய தவறுகளின் சிகரம் குணசாலியான பெண் நாகரிக மங்கையோ? பொறுமை உண்டா? விஷங் கலந்த உணவு, ஆட்டங்கொண்ட பல், துஷ்ட மந்திரி இவர்களின் விஷயத்தில் வேருடன் களை வதே உண்மையான சுகத்தைக் கொடுக்கும் என் பது பஞ்சதந்திர வாக்கு. இத்துடன் ஒரு நவ நாகரிக மனைவியையும் சேர்க்காது விட்டது குறை தான் ... அடடே, இதோ ஒரு புரூப் இருக்கிறதே ... ஏய் தங்கப்பன்.

**தங்:** ஸார்

**விஜ:** இது என்ன புரூப்?

**தங்:** எடிட்டர் ஸார் வந்தாங்க ... தலையங்கம் எழுதியாச் சான்னு தேடுனங்க ... அப்புறம், எழுதி வச்சுட்டுப் போனுங்க ...

**விஜ:** இந்த காலத்திட்டம்— ... இதுதான் எடிட்டோரி யலா ... பேஷ் பெண்களைத் திருத்துறதா இந்தத் திட்டத்துலே சேத்துக்கலையா? ... தங்கப்பன் ... ஒரு மனைவியைப் பத்தி, பேப்பர்லே பேர் வருதே, அந்த ஒரு மனைவியைப்பற்றி, உன் அபிப்பிராயம் என்ன?

**தங்:** (தயங்கி) எனக்கு என்ன ஸார் தெரியும்? ...

**விஜ:** தயங்காதே சும்மா சொல்லு ...

**தங்:** ம் ... மனைவி ... சிறு வயசுலே எஜமானி, நடு வய துலே கூட்டாளி, வயசு காலத்துலே தாதியைப் போல ...

**விஜ:** சட் சுத்த தப்பு ... நீ யாருக்கும் என்ன வேணு மானுலும் உபதேசம் செய் ... ... ஒருத்தரைக் கலி யாணம் செஞ்சுக்கவோ, சண்டைக்குப் போகவோ உபதேசம் செய்யாதே ... ரெண்டும் பயங்கரம்.

## காட்சி 42

[காந்திதேவியின் அறை. ஏதோ தலை அலங்காரம் செய்து கொண்டிருக்கிறாள். விமல் வருகிறான்]

**விமல்:** ஹல்லோ குட் ஆப்டர்நூன் மிஸஸ் காந்திதேவி!

**காந்:** யார்? மிஸ்டர் விமலா?...வாங்க...வாங்க...

**விமல்:** (திடுக்கிட்டவன் போல) ஆ இதென்ன ஏன் உங்கக் கண்ணுங்க இப்படிக் கலங்கி இருக்குது?

**காந்:** ஒன்னுமில்லே......

**விமல்:** இல்லை...ம்...சும்மா சொல்லுங்க காந்திதேவி...

**காந்:** ம்...பிரமாதமா ஒண்ணுமில்லே...அவர்...அதான் மிஸ்டர் விஜயன்-முன்போல் கல கலப்பா இருக்கிறதில்லை......

**விமல்** (பெரிதாகச் சிரித்து) இதுக்குத்தானு?......வீட்டு வாசற்படியிலே உக்காந்து, புருஷன் வரவை எதிர்பார்த்து நிற்கிற ஒரு பட்டிக்காட்டுப் பெண் போல......(மீண்டும் சிரிக்கிறான்)

**காந்:** இல்லை மிஸ்டர் விமல்...ஒவ்வொரு சமயம் அவர் முகம் வாடி இருக்கிறப்போ, என் மனசும் கஷ்டப் படுது...ம்...அவர் ஏன் அப்படி மனவருத்தம் அடையுறார்ன்னே தெரியலை......

**விமல்:** மிஸஸ் காந்திதேவி...நீங்க சொல்றது வேடிக்கையா இருக்குது. வாழ்க்கையிலே யாருக்கும் ஒரே ஒரு சந்தர்ப்பம் தான் கிடைக்குது. அதைப் பயன் படுத்திக் கிட்டாத்தான் பேரும் புகழும்... இப்போ நீங்க கீர்த்தியடையற காலம். உங்களுக்குத் தற்சமயமுள்ள சந்தர்ப்பத்தை இழக்கணும்ங்குறீங்களா?

**காந்:** (இதைக் கவனியாமல்) ஆனு, அவர் மனசு நோகும்படி நான் என்ன செய்தேன்னே எனக்குத் தெரியலையே...

**விமல்:** மை காட் நீங்க தப்பு செய்றதா?... ஹூம் எவ்வளவு அறிவுள்ள ஆசாமியா இருந்தா...சந்தேகம் தீராமல் தானிருக்கும்.

**காந்:** அவர் மாத்திரம் முன் போல எனக்கு உற்சாக மளிச்சு வந்தா...

**விமல்:** நூல்லே கொஞ்சம் பிளவு இருந்தாலும், ஊசி காது வழியே அது போகாது......அவருக்கு ஏதும் ஆபீஸ் வேலை இருக்கலாம்...நீங்க...

**காந்:** பெண் முடியறப்போ சிரிப்போ; ஆனு நினைச்சப்போ அழுவாள்னு நினைச்சுக்கிட்டு......

[காந்திதேவி மளமளவென்று அழுது விடுகிருள்.]

**விமல்:** (நெருங்கி வந்து) மிஸஸ் காந்திதேவி இதோ பாருங்க...இதென்னது?...ஐயோ நீங்க ஏன் இப்படி வருந்துறீங்க...ஆத்துதண்ணி, குடிக்க ருசியா இருக்கலாம். ஆனு, கடலை யடைந்தவுடனே குடிக்க முடியுதா?....அது போலத்தான் தாம்பத்திய வாழ்க்கையும்...இதுக்காக......தயவுசெஞ்சு கண்ணைத் துடைச்சுக்குங்க......

[விமல் இன்னும் நெருங்கி, அவள் கண்ணைத் துடைப்பதுபோல குனிகிருன். விஜயன் ஆபீஸிலிருந்து வருகிருன். அவன் இந்தக் காட்சியைக் கண்டு திடுக்கிடுகிருன.]

**விஜ:** (போகும்போது மெதுவாக) ம்...பொம்பளைகளுக்கு மூணு விதமான கணவன்மார்களா தேவை—போஷிக்க ஒருவன், காதலிக்க ஒருவன், உதைக்க ஒருவன்.

[தன் அறையில் போய் உட்காருகிருன்]

சே என்ன சைத்தான் போலல்ல நெனச்சுட்டேன். விஜயனு தன் காந்தியைப்பற்றி இப்படிச் சொன்னது. என்ன கேவலம் என் காந்தி உத்தமி.......(வேறு ஏதோ எண்ணி) ஆனு, காதல் புரியும் பெண், ஒரு நரியைவிட ஆயிரம் மடங்கு தந்திரசாலி.

[விமலும் காந்திதேவியும் அவன் அறைக்கு வருகிறார்கள்.]

**விமல்:** என்ன விஜய் கண்டும் காணமல்....

**விஜ:** கண்பார்வை கொஞ்சம் மங்கி இருக்கு இப்போ. ஒரு கறுப்புக் கண்ணடி......

**காந்:** என்ன மீண்டும் வெளியே போகவா......

**விஜ:** ஓ...தேவிக்கு என்னைப் பற்றியும் ஞாபகம் இருக்குதா.......

**விமல்:** மிஸ்டர் விஜயன் உங்களாலே மிஸஸ் விஜயன் மனசு ரொம்ப கஷ்டப்படுது.

**விஜ:** உங்ககிட்டே சொல்லிட்டாங்களே...இனி லேசாகப் போயிடும்...

[விஜயன் வெளியே போகிறன்]

**காந்:** (கண்களில் கண்ணீர் துளிர்க்க) சாப்பிடாமேக் கூட...

**விஜ:** (போய்க் கொண்டே) என் சாப்பாட்டைப் பற்றியுமா ஞாபகம் இருக்குது....

[போகிறன்]

**விமல்:** ம்...என்ன மாறுதல்...ஹும் பூனை இருக்கும் இடத்துலே, எலியும் குடித்தனம் செஞ்சு, பேரன் பேத்திகளை எடுத்திடுதே அதுதான் வேடிக்கை.

[விமல் சிரிக்க முயற்சிக்கிறன்.]

[இரண்டு பூனைகள் தூரத்தில் கோபமாகச் சண்டை போடுகின்றன-எல்லாம் ஒரு பொம்மை எலியைப் பிடிக்க]

## காட்சி 43

**விஜயாவின் வீடு**

[விஜயன் மிகவும் கோபமாக இருக்கிறன். காந்தி தேவியின் அழகு சாதனங்களெல்லாம் பல இடங்களில் சிதறிக் கிடக்கின்றன.]

விஜ: சே...என்ன வாழ்வு...தொட்டில் ஆட்டும் கைதான் செங்கோல் பிடிக்கும்னு சொல்வாங்க.... பாஷன் போற போக்கைக் கண்டா, ஆண்தான் தொட்டில் ஆட்டணும்போல இருந்தது. தொட்டில் ஆட்டுறது ஓஞ்சல்ல செங்கோல் பிடிக்க முடியும். ம்...(விக்க)...வாசந்தி வாசந்தி......

[வாசந்தி பயந்து வருகிருள்]

விஜ: உன் அண்ணி ஸ்தானத்திலே உள்ள தேவி....

வாஸ: (சமாதானம் செய்யும் வகையில்) அண்ணு அண்ணி எவ்வளவு பயந்து வெளியே போனுங்க தெரியுமா?

விஜ: (பழித்தவாறு) அப்படிங்களா?.... (மெதுவாக) உண்மைக்கு வரம்பு இருக்க முடியும். ஆனு பொய்க்கு? நீடிப்புக்கு?

வாஸ: பெரிய டாக்டரம்மாவே வந்துட்டாங்க......ம்... (சந்தோஷமாக) அண்ணு ஒண்ணு சொல்ல மறந்துட்டேனே.

விஜ: என்ன?

வாஸ: அண்ணியோட மதிப்பு ரொம்ப உசந்து போயிருக்கு. கவர்மென்ட்லேயே புகழ்ந்து......

விஜ: (கோபமாக) அதனுலே இவுங்க பூரிச்சுப்போட்டாங்க

வாஸ: (திடுக்கிட்டு) அண்ணு

[காந்திதேவி உற்சாகத்துடன் வருகிருள். குழந்தைகளுக்காக ஒரு நிதி தேடியதில் மிகவும் சந்தோஷம்]

காந்: (விஜயனைக் கண்டு) ஆ... வந்துட்டீங்களா? ஞாபகமா எனக்கு அங்கே ஒண்ணும் ஓடவேயில்லே.

விஜ: (வேண்டுமென்றே பிரியமாக) இருந்திருக்கும்...... அதான் முகத்திலேயே தெரியுதே.

**காந்:** ரொம்ப நாளா உங்ககிட்டே ஒண்ணு சொல்ல நினைக்கிறேன். நீங்க, என்மேலே கோபமாக இருக்கீங்க. நான் என்ன தப்பு செய்றேன்னே தெரியலே......ஏன்னு......(திடீரென்று அவன் முகபாவத்தைக்கண்டு திடுக்கிட்டு) என்ன என் முகத்தையே ஏன் அப்படிப் பாக்கிறீங்க?

**விஜ:** ஒண்ணுமில்லே...பேசுறப்போ சிந்துற அழகைப் பார்க்கிறேன்.

**காந்:** என்ன?

**விஜ:** அழகான பொம்பளே ரொம்ப சந்தோஷம் அடைஞ்சா கட்டிய புருஷன் எவ்வளவு கஷ்டப் படணுங்குறதை உங்க முகபாவத்திலிருந்து அளக்க முயற்சிக்கிறேன்.

**காந்:** ஆ

**விஜ:** இங்கே புருஷனைக் கவனிக்கப் பொழுதில்லே— இவ, ஊர்பிள்ளைகளே கவனிக்கப் போயிட்டாளாம் (உரக்க) வெளியே போனவன் திரும்பவே மாட்டான்ங்குற நினைப்போ?

**காந்:** (அழுதவாறு) தயவுசெஞ்சு இப்படியெல்லாம் பேசாதீங்க.

**விஜ:** (பழித்து) பின்னே எப்படி எல்லாம் பேசணுங்க?...ம்...எந்த மனுஷன் முன்னுலே, எப்படி அழணும்னு தெரிஞ்ச பெண்ணுக்கு இந்த உலகத்திலேயே ஒண்ணுமே சிரமமில்லே......

**காந்:** (அழுகிருள்)

**விஜ:** (அதட்டி) அழுகையை நிறுத்து...ம்...காந்திமதி தேவி உன்னே நான் மணந்து கிட்டது எதுக்காவ?

**காந்:** .........

**விஜ:** என்ன பதிலில்லே? பகலெல்லாம் மாடா ஒழைச்சு வந்து இந்த மனோவேதனேபடவா?

காந்: நான்...பகல்...முழுதும்...இங்கே இருந்தேனே.

விஜ: இங்கே இருக்கே அதாவது நான் இங்கே இல்லா தப்போ?

காந்: (கெஞ்சியவாறு) நான் ஒண்ணு சொல்றேன்.

விஜ: என்ன?

காந்: நான் இருக்கிறபோது நீங்களும் இருந்தா...... (தயங்கி) வேலையை விட்டுட்டு......

விஜ: (கடுங்கோபத்துடன்) அடி பாவி என்ன சொன்னே? உன் சௌகரியத்திற்கு நான்...... நீ சம்பாதிச்சுப்போடுவே, நான் வீட்டிலேயிருந்து... உனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தமிருக்கணும்......

[பளாரென அறைந்துவிடுகிருன்]

காந்: ஆ......அம்மா

[இந்தக் கலாட்டாவைக்கேட்டு வாஸந்தி ஓடி வருகிருள்]

வாஸ: (பதறி) ஐயோ அண்ணா......அண்......

விஜ: (கோபமாக) வாசந்தி நீ அப்பால் போ!

வாஸ: (அழுது) அண்...ணா

விஜ: ம்...இவ்வள தாரத்துக்கு வந்துட்டியா? காரணம், நான் ஒரு அல்ப சம்பளக்காரன்—நீ? நீ? ஒரு பெருத்த பொதுநல சேவகி...சர்க்காரே புகழும்.

விஜ: சர்க்காரே புகழும் எல்லேக்கு...உங்க பிரசங் கத்தைக் கேட்டு பத்திரிகையில் போடவேண்டிய வெறும் அற்பன்தானே நான்......

காந்: ஐயோ அப்படியா நான் சொன்னேன்?

விஜ: ஏன், சொல்லேன்...இந்த வீட்டிலே, எனக்கு இனி மேலே என்ன வேலே? ஒரு வேலேயுமில்லே-இதுவரைதான் என்ன இருந்துச்சு? ஒரு வேளே சாப்பாடு......ஹோட்டலிலே கிடைக்காதா? (வெளியே போக முயற்சிக்கிருன்)

**காந்:** (பதறி) எங்கே?......எங்கே போறீங்க?

**வாஸ:** அண்ணு

**விஜ:** (போய்க்கொண்டே) வெளி கௌரவத்தோட மமதையிலே, தன்னையே மறந்திருக்கிற உன் அண்ணிகிட்டே சொல்லு, உன் அண்ணு எப்பவோ செத்துப்போட்டான்னு (போகிருன்)

**காந்:** ஆ...(மயங்கி விழுகிருள். வாஸந்தி ஓடிவந்து தூக்க முயற்சிக்கிருள்)

## காட்சி 44

**எடிட்டர் அறை:**

[எடிட்டர்முகம் கோபத்தால் கடுத்திருக்கிறது—விஜயன் உள்ளே பிரவேசிக்கிருன்.]

**விஜ:** (வந்துகொண்டே) கூப்பிட்டீங்களா?

**எடி:** ஆமாம்... இங்கேவாரும்...ம் இது ஒரு ஆபீஸ்னு உங்களுக்குத் தெரியுமா?

**விஜ:** தெரியும்.

**எடி:** இதை ஞாபகமூட்டத்தான் கூப்பிட்டேன்.

**விஜ:** சரி......(போக முயற்சிக்கிருன்)

**எடி:** இன்னும் ஒரு நிமிஷ பேட்டி......

**விஜ:** (சற்று கோபமாக) நீங்க எனக்கு அதிகாரியா இருக்கலாம். அதுக்காக......

**எடி:** (சற்று ஏளனமாக) இப்படியெல்லாம் பேசுவது உங்க சுயமதிப்புக்கு இழுக்கானது; இல்லே?...... ப்யூன் அந்த ரிஜிஸ்டரை எடு......

[ப்யூன் ரிஜிஸ்டரைக் கொண்டு வருகிருன்]

**எடி:** இதோ பாரும்... இது யார் பெயர் தெரியுமா?

**விஜ:** என் பெயர்தான்.

**எடி:** இதெல்லாம் என்ன?

விஜ: ஆபீசுக்கு ஒழுங்காக வராதது.

எடி: எத்தனை நாட்கள்?

விஜ: எண்ணிப் பார்த்தா தெரியும்.

எடி: (அதட்டியவாறு) விஜயன்

விஜ: ரொம்ப அதட்ட வேண்டாம் ஸார்?.......இதுக்கு இப்போ என்னை என்ன செய்ய சொல்றீங்க?

எடி: 13 நாட்கள்.... நீங்க எடிட்டோரியல் எழுதியும்...

விஜ: 13 நாளாவது

எடி: இதுபற்றி நான் பல தடவை சொல்லியாச்சு. இனி சொல்ல வேண்டிய அவசியமிருக்காதுன்னு நெனக்கிறேன்.

விஜ: ரொம்ப தாங்க்ஸ்

[விஜயன் மீண்டும் போக முயற்சிக்கிறான்]

எடி: கொஞ்சம் நில்லுங்க ஸார்....உங்க போக்கே உங்களுக்கு புதிசா இல்லே?

விஜ: (தூரத்தில் நின்று, அதட்டியவாறு) என்ன?

எடி: இனி, இதுக்கு மேலே அதட்டவுந்தான் செய்வீங்க... உங்க மனைவி இவ்வள பிரபலம் அடைஞ்ச பிறகு இனி இந்த வேலே எல்லாம் துச்சந்தானே

விஜ: (கடுங்கோபத்துடன்) ஓய் நிறுத்தும்

எடி: ஆ

விஜ: இனி ஒரு வார்த்தை மேலே பேசினே, முதலிலே போயிருக்கிற 4 பல் போக, பாக்கி 28-யும் அலக்கா பேத்து உன் கையிலே தனியே கொடுத்திடுவேன். என் பெண்ஜாதியைப் பத்திப் பேச நீ யாருடா?

எடி: என்ன சொன்னே?

விஜ: இதோ—உன்னோட இந்த பிச்சைக்கார வேலேக்கு ஒரு கால் கடுதாசி...வேலேயாம் வேலே...ம்...... என்னை நீ என்னுன்னு நெனச்சுக்கிட்டிருக்கே?

எடி: (மிகவும் கோபத்துடன்) ஆமாம்... ஆமாம்....ஏ.... ப்பூன்

விஜ: (போய்க்கொண்டே) அற்பப்பயல்.......தன்னைப் போல பிறத்தியாரையும் நெனச்சுக்கிட்டான்.

எடி: ஆறுகளுக்கு உப்பு நீரிலேதான் முடிவு; இதயம் ஒன்றுபட்ட தோழமைக்கு ஸ்திரீகள் முடிவு. இது பஞ்சதந்திர வாக்கல்ல—பொய்க்குமா என்ன?

## காட்சி 45

கடற் கரை

[விஜயன் கோபமாக உலாவிக்கொண் டிருக்கிறான்]

விமல்: (வந்துகொண்டே) விஜயன் நீ ராஜினமா செய்து விட்டாயாமல்ல....

விஜ: ம் . அந்த மானேஜரை, ஒரு அறை விட்டு வராதது அவன் அதிர்ஷ்டம்.

மோஹ: விஜயன் கோபம் உண்டான சமயம் தன்னை அடக்கிக் கொள்பவனே பலசாலி. இதை தெரிஞ்சுக்காமே....

விஜ: மோஹன் உன்னை ஒன்றும் சமாதானம் சொல்ல கூப்பிடலே...நீ இதுலே குறுக்கிடாதே.

விமல்: நான் சொல்றதைக் கேளு... மனிதன் வெற்றி யடையறதும், மீளா நரகத்துலே விழுந்து போறதும், ஒரு நொடிப் பொழுதோட தீர்மானந்தான்.

விஜ: இந்த வாழ்வுக்கு வெற்றி ஒண்ணுதான் குறைச்சல்....போ

மோஹ: சங்கடமான சமயத்துலே ஏற்படுற பரபரப்பு, சுலபமான விஷயத்தையும் புரியாமே அடிச்சிடுறது விந்தைதான்.

விமல்: உனக்கு, வாழ்க்கையிலே, ஏன் இப்படி வெறுப்பு தட்டிப்போச்சு?

**விஜ:** என் விதி....வானவீதியிலே தத்தளிக்கும் பருந்தும், நெருப்பிலே விழுந்த பாம்பும், பெண்ணு கிட்டே அகப்பட்ட ஆணும் தப்பிக் கரையேற முடியுமா?

**மோ:** அதெல்லாம் ஒண்ணுமில்லே....வாழ்க்கையே நாம் திருத்தி அமைக்கிறதுதான்....

**விஜ:** நல்லா திருத்தி அமைச்சேன்...அதுவும் இவ்வளவு நல்ல இல்லக் கிழத்தியோட....சந்திரனைப் போலத் தான் காதல். அது வளராதப்போ, தேஞ்சு போவுது.

**விமல்:** ஆ இதென்ன வாக்கு? மிஸஸ் விஜயனையா குறை சொல்றே?

**விஜ:** அதே அம்மையைத்தான். பெண் அழகாப் பெறந்துட்டா போதுமா? அதைப் பரிமணக்கச் செய்றது அச்சம், நாணம், மடம், பயிர்ப்புன்னு...

**விமல்:** மிஸ்டர் விஜயன் நிறுத்து; நீ புரிஞ்சுக்காமே பேசறே...

**விஜ:** விமல்...நான் கேக்கவே விரும்பலே.......நீ உன் வியாக்யானத்தை முதல்லே நிறுத்து.

**விமல்:** எப்படி நிறுத்துவேன்? தர்க்க ஞாயத்துக்கு உட்பட்டு வராத அபிப்பிராயத்துக்கு, ஒரு முழக் கயிறு கொடுத்துத்தான் நிறுத்துவேன்...வாழ்க்கையே ஒரு தெய்வத்தாலேதான் பூர்த்தியாவுது—அது பெண்.

**விஜ:** (ஏளனமாக) ஆமா, அந்த தெய்வம், கூரையைப் பிச்சுக்கிட்டுத்தான் கொடுக்கும்; இப்படி ஊரெல்லாம், சதா சேவை சேவையென்று அலெஞ்சு கொடுக்காது....ஹூம்...குடும்பத்திலே புருஷனுக்கு ஒரு சேவையை செய்யக் காணோம்......உலகத்துக்கு சேவையாம் சேவை...

**மோ.** அவுங்க என்னதான் செய்யலேங்குறே?

**விஜ:** என்ன செய்ருங்கன்னுதான் கேக்குறேன்?.... மனிசனு பிறந்திடறது சுலபம் — ஆனு, மனிசனு வாழத் தெரியணும்.

**விமல்:** அவுங்க...?

**விஜ:** அவுங்களும், மனுஷனு வாழணும், பெண்ணு வாழணும், மனேவியா வாழணும், தன் கணவன் மனசு கோணுமே வாழணும்னுதான் சொல்றேன்.

**மோ:** என்ன? உன்னேத் துன்பப்படுத்தி அவுங்க மனசு மகிழ்ச்சியடையுதுன்னு சொல்றே?

**விஜ:** ம்....?

**விமல்:** அதனுலே அவுங்களுக்கு ரொம்ப திருப்தி, இல்லே? முட்டாள்தனம் மேலிடுறப்போ, பகுத்தறிவு பின் வாங்குறதுலே ஆச்சரியமில்லே.

**விஜ:** என் மனசை இன்னும் குழப்பாதீங்க...

**விமல்:** கோபத்தைக் கொஞ்சம் விட்டு, யோசனே செஞ்சு பாரு. ஆளப்பட்ட கோபம்தான் புத்திசாலித் தனம்...விஜயன் எனக்காக வேணும்........நல்லா யோசிச்சுப் பார்...மிஸஸ் விஜயனே இந்த ஊரே புகழுது....ஏன், இந்த ஜில்லாவே புகழுது; எல்லாரும் புகழுருங்க. ஆனு, உனக்கு மாத்திரம் அன்பில்லே...

**விஜ:** ........

**மோ:** இவ்வள இருந்தும், துளி அகம்பாவமிருக்குமா?

**விமல்:** ஆனு, நீ ஆணுங்கிற மமதையிலே...காரணம்... சுயநலம் சந்தேகம் உள்ளே நுழையறப்போ, அதே கதவு வழியே அன்பும் நம்பிக்கையும் வெளியேறத்தான் செய்யும்.

**மோ:** கோபம் உன்னே வெற்றிகொள்ள விடாமே, யோசித்து பாரு.

**விஜ:** என்ன?

விமல்: உன் மனசு குறுகிறது......பரந்த மனப்பான்மையே இல்லே. அவுங்க ராவெல்லாம் அனாதைகளுக்காக உழைச்சு, சோர்ந்து வீட்டுக்கு வந்தா, நீ எப்படி நடந்துக்குறே?

விமல்: உன் முகம் சந்தோஷத்துலே மலராதான்னு எவ்வளவு முயற்சி செய்றாங்க அவுங்க... ஆனா நீ...?

விஜ: என்னதான் வேஷம் போட்டாலும் உள்ளத்தோட உணர்ச்சிகளை பிரதிபலிக்கிற கண்ணாடியல்லவா முகம்? அதை மறைக்க முடியுமா?

விமல்: விஜயன் நீ கோபங் கொள்ற ஒவ்வொரு நிமிஷமும், அறுபது விநாடி மகிழ்ச்சியை இழந்திடுறேங்குறதை யோசிக்காமலேயே கோபப்படுறே. ஆனா, நல்லா தெரிஞ்சுக்க....ஆகாயம்கூட இருள்றது, கொஞ்ச நேரத்துக்குத்தான்; ஆனா, மனிஷனோட மனம்.......

விஜ: .........

விமல்: இப்படிக்கூட என்ன?....என் கூட வா....

விஜ: எங்கே? மிஸஸ் காந்திதேவிக்காக ஒரு கூட்டம் போட்டிருக்காங்களே, அங்கேயா?

மோ: ஆம்......

விஜ: நான் வரமாட்டேன்...வரமுடியாது...

மோ: ஏன்?

விஜ: (அர்த்தமற்று) ஏன்?

விமல்: வறட்டு அகம்பாவம் பாறைதான். பிளவு ஒண்ணு சேராது. ஆனா பொன்?

மோ: விஜயன் இதைச் தெரிஞ்சுக்கோ, அகங்காரத்தை வெல்லுவதுதான் உண்மைக் காதல்...

விஜ: வியாதிக்கு மருந்துண்டு, வீதிக்கு?

விமல்: விதி, மனுஷன் அழுறத்துக்காகப் பிறக்கலே. போர் புரிய....உண்மையை மனசு அறிஞ்சும்,

அர்த்தமில்லாத பெருமைக்கு முன்னாலே அது வணங்க மறுக்குது பார், அப்போ அதை அதட்டி....

விஜ: இதெல்லாம்....நீங்க என்ன சொல்றீங்க?....

விமல்: விஜயன் யோசனை செய்துபார். மனம் புரண்டால் மருந்துண்டா?

மோ: உன்னுடைய வாழ்க்கை வானம் வெளுக்க வேணுமா? அதுலே ஒரு சந்திரனும் பிரகாசிக்கணும்... இதுக்காகத்தான்...

விஜ: ம்....

விமல்: ம்....புறப்படு....என் கூட வா...கூட்டத்துலே அவுங்க உன்னை ஆசையா வரவேப்பாங்கபார், அப்போ அவுங்களோட உண்மையான மதிப்பு தெரியும்...உனக்கு என்ன பெருமையா இருக்கும்... இப்படிப் பட்ட மனைவியை அடைஞ்ச நீ தான் பாக்கியசாலின்னு தெரிஞ்சுக்குவே...

[இருவரும் இழுத்துக்கொண்டு போகிறார்கள்.]

விமல்: அடடே...எங்கேப்பா இழுத்துகிட்டு போறீங்க?

விமல்: மிஸஸ் காந்திதேவியோட மனசை நீ வெளிப்படையா தெரிஞ்சுக்க.

## காட்சி 46

**பிரசங்கம் செய்யும் இடம்**

[மிஸஸ் காந்திதேவி அனாதைக் குழந்தைகளுக்காகப் பிரசங்கம் செய்யும் இடத்தில், கூட்டம் ஆரம்பமாக வேண்டிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன]

காந்தி: வாஸந்தி...என்ன, உங்க அண்ணா இன்னும் வரலையா?

வாஸ: இல்லையே....அண்ணி

**காந்:** (கண்ணீரை மெதுவாக துடைத்துக் கொள் கிறாள்)

**வாஸ:** அவர் தங்கி இருக்கிற ஹோட்டலுக்குப் போய் நான் எவ்வளவோ சொல்லி வந்தேன்...

**காந்:** ஹூம் நூறு பலம் மூளையைவிட ஒரு பலம் ஹிருதயம் நல்லது. எனக்கு இது தெரியாமே போச்சே

**வாஸ:** (மெதுவாக) அண்ணி இதோ பெரிய டாக்டரம்மா....

[லேடி டாக்டர் வந்து மேடைமீதேறி பிரசங்கம் செய்யத் தொடங்குகிறாள்]

**டாக்டர்:** சகோர சகோதரிகளே இன்று நாம் எதற்காகக் கூடியிருக்கிறோம் என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. நம்முடைய தேசிய சேவகி ஸ்ரீமதி காந்திதேவி அவர்களின் ஓயாத உழைப்பும் அரிய திறமையும் யாவரும் அறிந்ததே. அவர்களாலே, இந்த ஊருக்கே ஒரு தனி பெருமை என்றாலும், அது ஒன்றும் மிகையில்லை. அவர் தன்னுடைய குடும்ப சுகத்தையும் பொருட்படுத்தாது பொது ஜன சேவையையே......

[இங்கே பிரசங்கம்நடந்து கொண்டிருக்கும்போது, விஜயனும் அவன் தோழர்களும் உள்ளே வர முயற்சிக்கிறார்கள். காவற்காரன் உள்ளே அனுமதிக்க மறுக்கிறான்.]

**காவல்:** ஐயா....ஒரு வார்த்தையிலே வச்சிக்குங்க....விட முடியாதுன்னு விட முடியாது.

**விஜ:** விட முடியாதா? ஏன்?

**காவல்:** ஏன்ன அப்படித்தான்....

**விஜ:** ஓய்...நான் யார் தெரியுமா?

**காவல்:** யாரா இருந்தா எனக்கென்ன?

**விஜ:** காந்திமதியோட கணவன்...

**காவல்:** (பெரிதாகச் சிரிக்கிறான்)

**விஜ:** என்ன?

**காவல்:** (சிரித்து) அந்த அம்மா, நீங்க வரலேயேன்னு கவலைப் பட்டுக் கிட்டிருக்காங்களாக்கும்

**விஜ:** ஆ...(விஜயன் கோபத்தால் துடிக்கிறான்)

**காவல்:** போய்யா, வேலேமெனக் கெட்டவரே அந்த அம்மாளோட கணவராம் கணவர் முகத்தைப் பார்க்கலே முகம்...

**விஜ:** ஆ...காவற்காரன் இகழும் எல்லேயா எனக்கு (ஏழெட்டு அடி பலமாக அடித்து விடுகிறான்)

**காவல்:** (கூக்குரல்) ஆ...ஐயோ அப்பா...அடிக்கிறாங் களே—ஆ

[பெருத்த கலகலப்பு. என்ன என்ன வென்று பலர் வருகிறார்கள்]

**விஜ:** (மிகவும் கோபத்துடன்) பிச்சைக்காரப் பயலே... உனக்கு இவ்வளவு துடுக்கா?......என்னைப்பார்த் தால் அற்பனாகத் தெரியுதோ......

**தலைவர்:** (வந்துகொண்டே) என்ன......என்னது?

**காந்:** (வந்துகொண்டே) ஆ......நீங்களா?

**விஜ:** அம்மா உனக்கு எவ்வளவு ஆணவமிருக்கணும்?... என்னை இப்படி எல்லாருக்கும் முன்னாலே அவ மானம் செய்யணும்னு உனக்கு எவ்வளவுநாளா ஆசை?......

**காந்:** ஆ......ஐயோ......நான்......

**விஜ:** ஹூம் உனக்கேற்பட்ட பவுசுலே, அந்த அற் பப் பதருக்கும்லே நான் ஒரு மனுஷனாப்படலே? இனி......

**காந்:** வேண்டாம்...வேண்டாம் எனக்கு இனி பவுசு வேண்டாம்......

விஜ: (தூரத்தில் பழித்தவாறு) பவுசு வேண்டாமா? அதைக் கட்டிக்கிட்டே அழு......

காந்: பதவி வேண்டாம்...சேவையும் வேண்டாம். தொண்டும் ஒண்ணும் வேண்டாம். நீங்க இருந்தா போதும்...உங்க மனசு சந்தோஷப்பட்டா, அதுவே சுவர்க்கம்...நீங்க...ஆ...(மயங்கி விழுகிறாள்)

வாஸ: அண்ணி...அண்ணி...அடடே மயங்கி விழுந்துட்டாங்களா...அடடா...மயக்கம்......

[கூட்டத்தில் கலவரம் ஏற்படுகிறது. பலர் விஜயன் முரட்டுத்தனததைப்பற்றிக் கோபிக்கிறார்கள்]

விஜ: (மெதுவாக) என்ன மயங்கி விழுந்திட்டாளா?

[மெதுவாக வெளியே போகிறான். எல்லோரும் அவனைத் திட்டுகிறார்கள்]

## காட்சி 47

**விஜயன் அறை:**

[விஜயன் தன் அறையில் படுத்திருக்கிறான். அடுத்தடுத்து நேர்ந்த பல சம்பவங்கள், அவன் நிலையை மிகவும் பாதித்துவிட, அவனுக்கு நல்ல ஜுரம். ஏதோ முனகியவாறு, புரண்டு புரண்டு படுக்கிறான். மீட்டிங்குக்குச் சென்ற காந்திதேவி இன்னும் திரும்பி வரவில்லை. வாஸந்தியும், மிஸஸ் ராமநாத்துடனும், ரவியுடனும் கடற்கரைக்குச் சென்றிருந்தபடியால் இவர்களுக்கு விஜயனின் நிலைமை தெரியாது. வீட்டில், கௌரி மாத்திரமே இருக்கிறாள். அவள் பதறிப்போய், தன்னாலான சிச்ருஷை செய்கிறாள்.]

விஜ: (பிதற்றியவாறு) வணக்கமற்ற மனைவி எதிரிக்குச் சமானந்தான்...ம் தங்கப்பா எடிட்டோரியல் நீயே

எழுது. உனக்கு எடிட்டரைவிட, நல்லா எழுத வரும்.

கௌ: (மெதுவாக) ஜீரண சக்தி போயிட்டா, சாப்பாடும் விஷமாகத்தான் தோணும். ஆனா, ஜீரணசக்தியைப் போக்கடிச்சது யாரு?...ம்...என்னமா இருந்த குடும்பம். காந்திமதி அம்மா மேலேயா தப்பு?... புத்திசாலியான பொம்பளை தான் செய்யக்கூடிய காரியத்தைச் செய்யமாட்டா...இதுவுமா அவுங்களுக்குத் தெரியாமே போச்சு? இன்னும் வரலையே... இவரோட இந்த நிலைமை தெரிஞ்சுமா?......

கடற்கரை:

[கடற்கரையில் ரவி, வாஸந்தி, மிஸஸ் ராமநாத் ஜயஸ்ரீ முதலியவர்கள் உல்லாசமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

மிஸ: காந்தி இப்பப்போ பீச்சுக்கு வர்றதேயில்லையே....

ரவி: அவுங்களுக்கு இங்கே வரயெல்லாம் பொழுதிருக்குமா என்ன?—அஃதுவும் நம்மோட

மிஸ: ரவி அண்ணக்கியே சொல்ல நினைச்சேன்...... அகங்காரமும், தற்புகழ்ச்சியுமில்லாமே பிறர் மனசு இளகும்படி நீ பேசக் கத்துக்கணும்.

ரவி: (சிரித்து) என் பேச்சு, பல பேருக்கு நன்மை செய்ததாயிருந்து, ஒருத்தருக்கு வருத்தத்தைக் கொடுத்தா, அதைப் பற்றி எனக்குக் கவலையில்லே அம்மா

மிஸ: யதார்த்தவாதி வெகுஜன விரோதி.

ரவி: இதையும் ஞபகத்துலே வச்சுக்கோ அம்மா—வதந்திக்கு வாசனம் தேவையில்லே...ஸ்ரீமதி காந்தி தேவியைப் பற்றி......

வாஸ: (கோபமாக) என்ன, என் அண்ணியைப் பற்றியா இப்படிச் சொல்றீங்க?

ரவி: வாஸந்தி கோபப்படாதே...நான் சொல்லலே. உன் அண்ணவேதான், சந்தேகப்படத் தொடங்கிட்டார் இனி வதந்தி கிளம்ப எவ்வளவு நேரமாகும்?

மிஸ: ரவி உன் வாயை இந்த உப்புத் தண்ணியிலே கொப்பளிச்சிட்டுவா...காந்தி தங்கம். அவளைப் பற்றி எதாச்சும் சொன்ன, வாயழுகிப் போயிடும்.

ரவி: நான் என்ன சொல்றேன்ன, பித்தம் போக ணும்ன வில்வப் பழந்தான் திங்கணும், பனம் பழம் பசிக்குத்தான். அது பித்தத்துக்கு சரியில்லே. அவுங்க பாஷன் போகணும்ன......

ஜய: இப்போ யாருக்குப் பித்தம்? அக்காவுக்கா?

ரவி: இல்லே...அரைகுறை அறிவாலே அதிகப்புண் ஏற்படும்னு வாஸந்திக்குத் தெரிஞ்சு போச்சு... இனி பயமில்லே, உங்க பெரிய அக்கா இருக்காங் களே— காந்திதேவி அவுங்களைச் சொல்றேன்.

[வாஸந்தி ரவியைப் பார்த்து இலேசாகச் சிரிக்கி ருள்—ரவி அதைக்கண்டு சொக்கிப் போகி ருன்—ஒரு செம்படவன் கையிலிருந்த மீன் நழுவி சமுத்திரத்தில் விழுகிறது. ரவி அவ ளைப் பார்த்துக்கொண்டே இருக்கிருன்]

மிஸ: (வேடிக்கையாகச் சிரித்து) இப்போ புரியுது... பிடியிலிருந்த மீன் நழுவி கடல்லே விழுந்திச்சே அதுபோல.......

ஜய: (சிரித்து) சிறையிலேருந்து விடுபடுகிறது நல்லது தானே.

ரவி: (சிரித்து) அதுவும் கடல்போல விசாலமான இடத் துக்கு என் மனசு நழுவிப் போறதுன்ன, வேண் டாம்னு சொல்லமாட்டேன்.

மிஸ: சரி, அப்போன்ன...ம்...

ரவி: இதோ நாங்களும் வர்ரோம்... தனியா இருக்க விரும்பலே. ஒரு யுவனும் ஒரு யுவதியும் சகோதர,

சகோதரி பாவத்திலே தனிமையா பழகுறோம்ங் குறது எல்லாம் வெறும் ஹம்பக். இந்த பந்தமெல் லாம் வேறு ஆசாமிங்க இருக்கிறப்போ வச்சுக்க ணும். இதையறியாமே, கபடமில்லாத ஆண்களும் பெண்களும் தனியா இருந்து, இந்தத் தனிமை யிலே கபடத்தை கத்து....ம்...எவ்வளவு சகோதர சகோதரிங்க கெட்டுப் போறாங்க.

**மிஸஸ்:** டேய் என்ன, என்கிட்டேயே லெக்சர் அடிக்க ஆரம்பிச்சுட்டே?

**ரவி:** உங்ககிட்டே இல்லே அம்மா — நாகரிக உலகத் துக்கு....நாகரிகம் எப்படிப் பிறக்குது? பொழுது போக்கத் தெரியாமே ஆ சா மி தவிக்கிறான். உடனே நாகரிக ஜனனம். சோம்பேறித்தனம் தானே அ தோட உயர்ந்த சின்னங்கள்ளே ஒண்ணு.

**மிஸஸ்:** (சிரித்து) உலகத்துலேயே பொண்ணுங்க இல் லாட்டா, எல்லாம் ஞானிகளா ஆயிடுவாங்க இல் லையா?

**ரவி:** (சிரித்து) உள்ள சில ஞானிகளாவது யோக்யமா இருப்பாங்க.

[ரவி ஜாடையாக வாஸந்தியைப் பார்க்கிறான். வாஸந்தி தலை குனிந்து கொள்ளுகிறாள் — வலைஞன் இரண்டு மீன்களாகப் பிடித்து கூடைக்குள் போடுகிறான்]

**ஜயஸ்ரீ:** (கைதட்டி) அம்மா அம்மா ...ஒரு மீனு போய், ரெண்டு மீனை கூப்பிட்டுகிட்டு வந்திருக்குது

[எல்லோரும் சிரித்துக்கொள்ளுகிறார்கள்]

## காட்சி 48

**விஜயன் படுக்கை அறை**

[கடற்கரையிலிருந்து வந்த வாஸந்தி தன் அண் ணன் நிலையைக் கண்டு துடிக்கிறாள்]

**வாஸ:** (பதறி) கௌரி அண்ணாவுக்கு இது எப்படி ஏற் பட்டுச்சு?

**கௌரி:** நான் என்னம்மா செய்வேன்....இப்படியேதான் கொண்டு வந்தாங்க.......விமல்தான் டாக்டரைத் தேடிப் போயிருக்காரு.

**வாஸ:** ஐயோ நான் என்ன செய்வேன் கௌரி... அவர்...அவர்....

**கௌரி:** ரவிதானே....அந்தப் பிள்ளையும் டாக்டரைத் தேடித்தான் போயிருக்குது.

[காந்திதேவி ஆவலோடு வருகிருள்—யாரோ சில பெணகள் அவளைக் காரில் கொண்டு வந்து விட்டுப் போகிருர்கள். வேகமாக வந்ததால் தலையில் நிலைப்படியின் அடிவிழுகிறது. விஜய னின் நிலை கண்டதும் உடல் பதறுகிறது]

**காந்:** கௌரி வாஸந்தி இவருக்கு என்ன? ஐயோ இனி நான் என்ன செய்வேன்?

[மயங்கி விழுந்து விடுகிருள்]

## காட்சி 49

**படுக்கை அறை**

[விஜயன் படுக்கையில் படுத்திருக்கிருன்]

**விஜ:** (மெதுவாக) சகல கலைகளையும் கண்டுபிடிக்கிறது உண்மைதான்...ஆனு, இந்த நாகரிக மனைவியை? இந்த பாஷன் உலகத்தை?.......பணமிருந்தாலும், பிறகு ஏழ்மைபாகத்தான் மாறவேண்டி யிருக்குது.

[கௌரி வருகிருள்]

கௌரி!

**கௌரி:** என்ன?

**விஜ:** காந்திதேவி எங்கே?

**கௌ:** ஏதோ படிச்சுக்கிட்டிருக்காங்க.

**விஜ:** நைட் டிரஸ்ஸிலே இல்லியா?

காந்: ஆமாம்...ம்...நம்ம பெண்களுக்கும் இந்த நைட் டிரஸ் இல்லேன்னு தூக்கம் வரமாட்டேங்குது....ம் இல்லறத்துக்கு அவசியம் இல்லாளின் ஒற்றுமை, யாம். ம்... இல்லறம்னு ஒண்ணு இங்கே இருக்குதா?

[காந்திதேவி நைட்டிரஸில் வருகிருள்]

காந்: கௌரி கஞ்சி இன்னும் தரலையா?

கௌ: ஆச்சம்மா?

விஜ: (மெதுவாக) ம்...இவ்வளவாவது அக்கரை ஏற்பட்டதே....தன் கைனுலே ஊட்டி வளர்த்ததெல்லாம் மறந்து போச்சு.

காந்: என்ன?

விஜ: ஒண்ணுமில்லே.

காந்: நான் இந்த விளக்கை அணேச்சிடட்டுமா? டாக்டர் நீங்க நல்ல படுத்துத் தூங்கணும்னு....

விஜ: ஆமாம் சொல்லியிருக்காரு...ம்...கௌரி விளக்கை அணேயம்மா...

காந்: நான் அணேச்சிடுறேன்......இது ஒரு காரியமா? (விளக்கு அணேக்கிருள்)

விஜ: (முனகியவாறு) தாங்க்ஸ்

(வெளியே விமல் கதவைத் தனியே தட்டுகிருன்)

காந்: யாரது?....

விமல்: விமல்

காந்: விமல்...இந்நேரத்திலா மறுபடியும்?...

விமல்: முக்கியமான விஷயத்தை நீங்க மறந்துட்டீங்க... ஞாபகமூட்ட வந்தேன்.

காந்: என்ன அது?

விமல்: நியூ டவுனில் நாம் ஒப்புக் கொண்டிருக்கிற பெனிபிட் பர்பாம்ன்ஸ்

காந்: என்ன?

விமல்: நாளண்ணிக்கி வர்றதா சொல்லி...

**காந்:** ஆமாம்....ஆனு இப்போது எப்படி...?

**விமல்:** அப்படியின்னு போகமுடியாதா?...அவுங்க எவ்வளவோ பப்ளிஸிடி எல்லாம் கொடுத்திட்டாங்க.... நாம போகலேன்னு......சுய உரிமை மறந்து, பிறருடைய உரிமை மறக்காமே இருக்கிறதுதான் ஒருத்தன் கடமை.

**காந்:** நல்ல உரிமை....உரிமை உரிமைன்னுதான் நான் இந்த நிலையிலே வந்திருக்கிறேன். பாஷன் உலகத்திலே ஒன்ருேட இந்த நாகரிகக் கலை....

**விமல்:** வாழ்க்கையிலேயே ரெண்டு கலைங்கதான் உண்டு. ஒண்ணு கலைக்காதல்—ரெண்டாவது காதற்கலை... நீங்க...

**காந்:** தயவுசெய்து அப்பால்போங்க.

[வேருெரு அறைக்குச் சென்று, கதவை தடாலென மூடிக்கொள்கிருள்]

## காட்சி 50

**விஜயன் வீடு**

[நிசப்தமான இரவு—காந்திதேவி கிளப்புக்குப் போகாததால், பொழுது போகவில்லை. ஏதோ பாஷன்பற்றிய புத்தகம் அவள் கையில்—தூரத்தில் விளக்குப் போட்டு படித்துக் கொண்டிருக்கிருள். விஜயன் இன்னும் தூங்கவில்லை. அவளைப் பார்த்தவாறு படுக்கையில் கிடக்கிருன்]

**காந்:** (பக்கத்தில் வந்து) என்ன இன்னும் தூங்கலையா?

**விஜ:** (அவசரமாகத் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு) ...என்ன?

**காந்:** (திடுக்கிட்டு) ஆ அழுதுகிட்டிருந்தீங்களா?

**விஜ:** இல்லை...

**காந்:** பின்னே இது....?...

விஜ: ஒண்ணுமில்லே......என்னமோ யோசிச்சிக்கிட்டிருந்தேன்....ம்...நீதி — இருளையும் ஒளி வீசுற மாணிக்கம் போல் அநீதியோ — பகல்லேயும் மங்கிக் கிடக்கிற கரித்துண்டு.

காந்: நீங்கள் சொல்வது புரியலயே....ராத்திரி தூங்காமே, இப்படி...

விஜ: உடைந்த சங்கு ஊத்துப் பரிக்குமா?...அது சரி காந்தி, ஒரு சின்ன காரியம் செய்றியா?

காந்: சொல்லுங்க...

விஜ: கொஞ்சங்...கீதை படிக்கிறியா? கேட்டுக்கிட்டே படுத்திடுறேன்...

காந்: இதோ (கீதையின் ஆங்கில மொழிபெயர்ப்பு கொண்டு வருகிருள்)

விஜ: இதென்ன புஸ்தகம்?

காந்: கீதை—இக்கிலிஷ் டிரான்ஸ்லேஷன் ஒரு பெரிய ஆங்கில அறிஞர்...

விஜ: (கஷ்டத்தோடு) வேணுமா போய்ப் படுத்துத் தூங்கு.

[காந்தி விஷயம் புரியாமல் போகிருள்]

விஜ: கூனல் விழுந்தாச்சு....இனி கல்லறைதான் சரிப் படுத்தும்.

[ஓடும் கடிகாரம் திடீரென்று 13, 14 மணி அடிக்க ஆரம்பித்து விடுகிறது—]

*   *   *

[வியஜன் படுக்கை அறையை அடுத்த ஹால் — ரவியும் வாஸந்தியும் அவன் தூங்குகிருன் என்று எண்ணி குசு குசுவென பேசிக்கொண்டிருக்கிருர்கள்]

ரவி: என்ன? உன் அண்ணி வெளியூருக்குப் போருங்களா?

வாஸ: அந்தப் பாழாப்போற மனுஷன் விமல் அப்படித் தான் பேசிக்கிட்டிருந்தான்...வரணும்னு கண்டிச்சு

சொல்ருன்—ஏதோ பப்ளிஸிடி எல்லாம் கொடுத்தாச்சாம்.

**ரவி:** கஷ்டக் காலத்தைப் போல சிறந்த ஆசான் வேற கிடையாது. இவ்வளவு கஷ்டப்பட்டும் உன் அண்ணிக்கு அறிவு ஏற்படலையே!

**வாஸ:** (ஏதோ ஆலோசித்தவாறு) கூரை தாழ்ந்திருந்தா குனிந்துதான் போகணும்.

**ரவி:** எனக்கு என்னமோ, உன் அண்ணி, இந்த சந்தர்ப்பத்திலேயேயும் உதவி நிதிக் கச்சேரின்னு டான்ஸுக்குப் போறது சரியாப்படலே.

**வாஸ:** அண்ணன் காதுலே விழப்போவுது....மெதுவாச் சொல்லுங்க...

**ரவி:** அவருக்கு ஏதோ சந்தேகமாவே இருக்குது. காந்திதேவி என்னன்ன...

**வாஸ:** ஐயோ ஏன் சந்தேகம் சந்தேகம்னு...கடற்கரையிலே நீங்க சொன்னதிலிருந்து எனக்கு ஒரே கவலையா இருக்குது. அண்ணிமேலே அண்ணனுக்கு சந்தேகமா?...ம்?

**ரவி:** சந்தேகம், பறவைக் கூட்டத்திலே வௌவால் மாதிரி...உன் அண்ணி மேலேயும் தப்பு இல்லாமே இல்லே....பொம்பளைகளுக்குப் பேசத் தெரியறதை விட பேச்சை நிறுத்துறது முக்கியம்னு தெரிஞ்சிருந்ததை மறந்துட்டாங்க...

**வாஸ:** அதோ அண்ண முளிச்சிருக்காப்பிலே இருக்குது வாங்க அப்பாலே போகலாம்.

[அவர்கள் போகிருர்கள்—இவர்கள் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த விஜயன் ஒரு பெரிய பெருமூச்சு விடுகிருன]

**விஜ:** அவுங்க கச்சேரிக்குப் போகணும்—நான் இந்த நிலையிலே இருக்குறப்போ — போகட்டும். கிலி பிடிச்சாச்சு எனக்கு; இனி புலி அடிக்க வேண்டி

யதுதான் பாக்கி......துக்கத்தால் சூழப்பட்ட மனுஷன் துக்கத்தைத்தானே சுவாசிக்கணும்...ஆனு துக்கம் சூருவளியா அடிச்சுக்கிட்டிருந்தா...

[வெளியில் காற்று மிகவும் வேகமாக அடித்துக் கொண்டிருக்கிறது]

**அதிகாலே**

[தன்னை மறந்து கண்ணயர்ந்த விஜயன், ஏதோ பயங்கர கனவு கண்டு திடுக்கிட்டு எழுந்திருக்கிருன். காந்திதேவி சோபாவில் துவண்டு உறங்கிக்கொண்டிருக்கிருள். அவள் நிலையைக் காண விஜயனுக்கு பரிதாபமாக இருக்கிறது. அந்த சமயம் தினசரித் தாளை வீசியெறிந்து விட்டுப் போகிருன், பத்திரிகைக்காரப் பையன்]

**விஜ:** (பத்திரிகையைப் பிரித்து) அ...பெனிஃபிட் பர்ஃபாமன்ஸ் பற்றி பேப்பர்லேயும் விளம்பரம் வந்திடுச்சா....

எதிர்பாராத மகோன்னத நடன ப்ரோக்கிராம். நடனகலாவல்லி ஸ்ரீமதி காந்திதேவியாரின் மகோன்னத நளின நடனங்கள்.

**விஜ:** நடனகலாவல்லி பிரமாதமாத்தா னிருக்குது....... விளம்பரத்துலே ஏதேதோ கொடேஷன் எல்லாம் இருக்குதே...

மாதர்களே நம்மை ஆள்கிருர்கள். அவர்களை இன்னும் மேன்மை படுத்துவோமாக.

—கவி ஷெரிடன்

[ஷெரிடன் ஒரு பைத்தியக்காரன]

கொடுங்காற்று வீசும்போது குனிந்து குழையும் நாணலை ஒத்தவர்கள் மாதர்கள்.

—வாட்லே

[ரொம்ப சரி]

அவர்களுக்குப் பலம், அவர்களுடைய சட்டங்கள். பெண்களுக்கு பலம், அவர்கள் பார்வை—கண்ணீர் நிறைந்த பார்வை.

—சாவில்லி

[ம்...பார்வை...பார்வையில் ஏமாந்துதானே.......]

மாதர்களின் நிறையுடைமையின் மீது வைக்கப்படும் நம்பிக்கையே, சில்லறை வாழ்வின் பேரின்பத்துக்கு அடிப்படையாகும்.

—லாண்டார்

[ஆமா, அவுங்க கச்சேரி, மீட்டிங்ன்னு அலையலாம்.]

பெண்களை பலவீனர் என்றால், மானநஷ்ட குற்றமாகும்...

—மகாத்மா காந்தி

விஜ: என்ன இவர் கூடவா இப்படிச் சொல்லி இருக்காரு?... கண்டு களியுங்கள்

இந்த ஐந்து வாக்கியங்களையும் சித்தரிக்கும் ஆடும் அழகி என்ற ஓவியம்.

பல்வேறு தேசநடனங்களும் சேர்க்கப் பட்டிருக்கின்றன...காரிகையரே சமூகத்தின் நல்லொழுக்கத்தின் ஆதாரம் என்பதைப் படம் பிடிக்கும் இந்த ஆடும் அழகியாக ஸ்ரீமதி காந்திமதி தேவியார் தோன்றுகிறார்கள்...காணத் தவறாதீர்கள்... மறுசமயம் வாய்ப்பதரிது....

பேஷ் முழுபக்கம் விளம்பரம்....ம்...ஆயிரத்துக்கு மேலே, விளம்பரச் செலவா இருக்கும்னு தோணுது....

[காந்திதேவி திடுக்கிட்டு எழுந்திருக்கிறாள்.]

காந்: ஆ...அப்படியே தூங்கிட்டேன் போல யிருக்குது....சே எவ்வளவு நேரமாயிடுச்சு....

விஜ:...(கேலியாக) அசதியிலே படுத்திட்டே போல யிருக்குது....(பெருமூச்சோடு)ம்......என் முகத்தைப் பார்த்து நீ எழுந்திருச்சு, எவ்வள நாளாச்சு.

காந்: (சிரித்து) உங்க முகம் பார்த்து எழுந்திருச்சா, எனக்கு எப்பவும் சந்தோஷமான சமாச்சாரமா வரும்.

விஜ: இப்பவும் என்ன?....இதோ வந்திருக்குதே விளம்பரம்...இதோபாரு....

காந்: (திடுக்கிட்டு) ஆடும் அழகியா...

விஜ: ஆமாம்....உன் புரோக்கிராம்தான்...நீ எப்போ புறப்படணும்?

காந்: ஆ...என்ன? நான் போகணுமா?

விஜ: பின்னே வேண்டாமா? ஒப்புத்துக்கிட்டு, போகாமே இருந்தா, அது மானர்ஸ் இல்லே...

காந்: ஆனா உங்க நிலைமை? டாக்டர் மருந்து தர்றூரே....

விஜ: இது ஒண்ணும் பிரமாதமில்லே.......இன்னும் ரெண்டு நாள்ளே, குத்துப் பிள்ளையார் போல ஆயிடுவேன்...டாக்டர் மருந்து தர்றூர். வாஸந்தி, கௌரி, ரவி எல்லாம் இருக்காங்க.......அது போதாது? நீ போகலாம்...அதுலே ஒண்ணும்........

காந்: ஆனா...நான் போகணுமா?

விஜ: (ஈனஸ்வரத்தில் சிரித்து) ம்...இதெல்லாம் முன்னாலேயே யோசித்திருக்க வேண்டிய விஷயம்.

காந்: (மெதுவாக) ம்...பெண்ணோடை வாழ்க்கையிலேயே உள்ள சந்தோஷம், கணவனோடை அன்பு ததும்பும் ஸ்பரிசலத்திலே தான் இருக்குதுன்னு...

விஜ: (சிரிக்க முயற்சித்து) நீ படிச்சிருக்கே இதெல்லாம் பொய்...இந்த பாஷன் உலகத்துலே கணவன் ஒரு இன்ஷ்யூரன்ஸ் பாலிஸிபோல....எவ்வள பேரு பாலிஸி எடுத்து, நடுவுலேயே விட்டிருங்க...ம்....நீ போய், போக வேண்டியதுக்குத் தயார் செய்.

[இதை நிஜமென்று நம்பி காந்தி மௌனமாக அப்பால் போகிருள்.]

விஜ: பெண் துன்பக்கடலின் எல்லை; எல்லையில்லாப் பொறை; புகழின் வரை; அடக்கத்தின் உயிர் நிலை? பேஷ் இத்துடன் அடக்கத்தின் உயிர் நிலை...இனி காந்திதேவி அம்மையாருக்குக் கவலையே இல்லை. கட்டின புருஷனே பர்மிஷன்

கொடுத்திட்டேன், இல்லியா?... ம் ...மாதர்களே நம்மை ஆளுகிருர்கள்னு ஷெரிடன் சொன்ஞனே, அவன் வாழ்க!

[கோபத்தோடு சிரிக்கிருன். சிரிக்க முடியாமல் இருமல் வந்து விடுகிறது. வாஸந்தி பயந்து உள்ளே வருகிருள். விஜயன் கண் நிறைய கண்ணீர் இருப்பதைக்கண்டு, காரணந் தெரியாது கலங்குகிருள்—]

## காட்சி 51

**விஜயன் வீட்டில்**

[காந்தி தேவி வெளியூர் கச்சேரிக்கு போக வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிருள்- வாஸந்தி இதைக்கண்டு ஆச்சரியமடைகிருள்.]

**வாஸ:** அண்ணி...எங்கே?

**காந்:** ஆடும் அழகி பர்ஃபாமன்ஸிக்கு

**வாஸ:** (மிகுந்த வியப்புடன்) என்ன, பர்பாமன்ஸா?

**காந்:** ஆமாம்... ...

**வாஸ:** அண்ண...?...

**காந்:** அவரேத்தான் போகச்சொன்ஞரே.

**வாஸ:** அண்ணி அவசரப்படாதீங்க....பதறிச்செய்கிற காரியம் சிதறிப்போகும்.

**காந்:** என்னது?

**வாஸ:** ஒளி உதயமாவதுக்கு முன்னுலே, இருள் அடைஞ்சிருக்கிறது சகஜம்...

**காந்:** நீ பெரிய மனுஷி...உங்கிட்டே உபதேசம் வாங்கிக்கிட்டுப் போறேன்....(தனக்குள் மெதுவாக)... ம்...அந்த விமல் ஏன் வரலேன்னு தெரியலையே...

**வாஸ:** அண்ணி நீங்க என்னைக் கோச்சிக்கிட்டாலும் சரி—சிநேகிதன்போல அபிநயிக்கிருனே, அவ

னைப்போல அஞ்சக்கூடிய மனுஷன் யாருமே இல்லை...

காந்: ஏது?....உன் அண்ணாவோட போக்கோட, உன் வாயும் கொஞ்சம் அதிகமாயிட்டாப்பிலே இருக்குது.

[வாஸந்தி பதில் ஒன்றும் சொல்லாமல் அவள் முகத்தையே பார்க்கிறாள்—கௌரி வருகிறாள்]

காந்: கௌரி பாங்குலேருந்து பணம் இன்னும்வரலையா?

கௌ: செக் திரும்பி வந்திடுச்சு

காந்: ஆ...ஏன்?

கௌ: செக் செலாவணியாகாதாம்.

காந்: என்ன? விமல்கிட்டே கொடுத்து, நான் கட்டச் சொன்ன பணம் எல்லாம் பாங்குலே கட்டலையா?

கௌ: என்னமோ...ஓவர்டிராப்டோ என்னமோன்னு சொல்றாங்க...அவ்வளவு பணம்தான் பாங்குலே இருக்குதாம்.

காந்: அடப்பாவி விமல் எங்கே?

கௌ: ஊர்லேயே இல்லியாம்...

காந்: (பெருமூச்சுடன்) குழந்தைகள் நிதிக்காகன்னு சேகரிச்ச பணம் எல்லாம் போயிடுச்சா?

[காந்திதேவி அப்படியே உட்கார்ந்து விடுகிறாள், என்றும் அறியா சஞ்சலம் அவள் இதயத்தில். ஏதோ குருவிக்கூடு சின்னாபின்னமாக விழுவதுபோலவும், குஞ்சுகள் பயந்து அலறுவது போலவும் அவள் கண்முன் தோன்றுகிறது]

* * *

[காந்திதேவி, தன் பர்ஃபாமன்ஸை முன்னிட்டு தனியேபுறப்படுகிறாள். மனதில் சந்தோஷமே இல்லை. அவள் வருமுன் ரயில் புறப்பட்டு போய்விடுகிறது]

**காந்:** (ஸ்டேஷனை அடைந்ததும்) என்ன? ரயில் புறப் பட்டுப் போயிடுச்சா...

**போர்ட்டர்:** இண்ணிக்கு கரெக்டா வந்து கரெக்டா போயிடுச்சு....நல்ல மழை பெய்யும்...ஆனா, ஆண்ட வனே புயல் வேணாமுங்க....

**காந்:** அடுத்த ரயில்?

**போர்:** இனி, ஒரு ஒண்ணரை மணிநேரங் கழிச்சு.... வெயிட்டிங் ரூம்லே தங்கி, ஏதாவது புஸ்தகம் படிச்சுக்கிட்டிருந்தா...

**காந்:** சரி....

[வெயிட்டிங் ரூமில் தங்குகிருள். ஏதோ மிகவும் பாரமாக இருப்பதுபோல உணர்கிருள், அவள் ஆடவேண்டிய ஆடும் அழகி. போஸ்டர் அவள் முன்னே]

**காந்:** சே என் மனது ஏன் இண்ணிக்கி இவ்வளவு சஞ்சலப்படுது...அந்த விமல்?....ஆற்றைக் கடந்த வுடனே ஓடக்காரன் போக்கிரிதான்....ம்...அந்த வாஸந்திகூட எனக்கு புத்தி சொல்ல ஆரம்பிச் சுட்டா...ஆனா, அழஅழச் சொல்வர் தமர்; சிரிக் கச் சிரிக்கச் சொல்வர் பிறர்....ஒருவேளை அவ சொல்றது சரியா இருக்குமோ? நான் இப்படி அலையக்கூடாதா? என் லக்ஷ்யம்? என் ஆசை? ஆசை உள்ளவரைக்கும் அலைச்சல் இருந்துதானே ஆகணும். என் ஆசைதான் என்ன? கணவ னுக்குத் தகுந்த மனைவியா இருக்கிறதா, இல்லை... பாஷன் உலகத்துலே?....ஆயிரம் கலம் நெல் லுக்கு ஒரு அந்துப் பூச்சி போதுமே. ஒரு மனைவி எவ்வளவு சிறந்தவளாயிருந்தாலும், இந்த அநா வசிய ஆடம்பரம்? இதனாலேதானா...இவர் எங் கிட்டே இப்படி நடந்துக்குறார்?...எலியைத் துரத்த வீட்டைக் கொளுத்துறதுபோல எங்கிட்டே என் னமோ தவறுன்னு நெனச்சுக்கிட்டு, குடும்ப இன்

பத்தையே சின்னுபின்னம் செய்துக்கிறரே....இன்பத்தை எண்ணலாம்; விரும்பலாம்; அடையலாம். ஆனு, விலேக்கு வாங்கமுடியுமா?...கற்ற மனிதன் ஒருகுளம்; அறிவுடையவன் ஒரு ஊற்றுன்னு, இவரை ஒரு ஊற்றுன்னு நெனச்சேனே....

[அர்த்தமில்லாமல், தொடர்பின்றி இவள் யோசனை எங்கெங்கோ சுழன்றுகொண் டிருக்கிறது. மேலே சுற்றிய விசிறியைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருக்கிருள். எங்கோ ஒரு குரல் கேட்கிறது; டேய் டேய்.. ... லேன் கிளியர் இல்லே......நான் சொல்ற வரைக்கும் சிவப்புக்கொடிதான் காண்பிக்க ணும்......உஷார் அவசரப்பட்டிடாதே.....]

## காட்சி 52

**விஜயன் அறை:**

[விஜயன் மிகவும் வருத்தத்துடன் படுத்திருக்கிருன். தன்னுடைய அந்த நிலேயில் காந்திதேவி பிரிந்து போவாள் என்று அவன் எண்ணவே யில்லே. விமல் அவசரமாக வருகிருன்]

**விமல்:** (அவசரமாக) விஜயன்

**விஜ:** யார்? விமலா? நீ....ஊர்லே இல்லேன்னு...

**விமல்:** நான் இல்லாமே...காந்திதேவிக்குத் துணை வேணும்?...(கவலேயுடன்) ஆனு...இப்போ காந்தி தேவிக்கு...

**விஜ:** (பதட்டத்துடன்) என்ன?

**விமல்:** ஒரு ஆக்ஸிடென்ட் ஆயி...

**விஜ:** ஆ....என்ன?

**விமல்:** அவுங்க ஆஸ்பத்திரியிலே இருக்காங்க...

**விஜ:** என் காந்தியா?...ஆ....நான் என்ன செய்வேன் அவ என்ன செஞ்சாலும், சுகமா இருந்தா போதும்னு இருந்தேன்...

**வாஸ:** அண்ணு என்ன?

**விஜ:** உன் அண்ணிக்கு ஆபத்தாம்; இதோ நானும் வர்றேன்...நாம் போய்....

(விஜயன் பலஹீனத்தால் தடுமாறி விழுகிருன்]

**விம:** வேண்டாம் விஜயன் நானும் வாஸந்தியும் போய்...

**வாஸ:** என்ன?

**விஜ:** (பலஹீனமாக) ரவியையும் கூப்பிட்டுக்கிட்டுப் போ...

**வாஸ:** அவரும் கௌரியும் ஏதோ மருந்து வாங்கணும்னு....

**விஜ:** புன்னே, நீயே போய்...

**விமல்:** கால தாமதம் ஆவுது...ம் போவோம்...அப்படி பயப்படும்படியா ஒண்ணுமில்லே...விஜயன் நீ கவலைப்படாமே இரு....

[இருவரும் போகிருர்கள்...ஒரு பூனே மரத்தின் மேல் பதுங்கிப் பதுங்கி போகிறது, ஒரு பட்சியைப் பிடிக்க]

* * *

[காந்திதேவி உட்கார்ந்திருக்கிருள். விசிறி சுழல்கிறது. அந்த சுழற்சியிலிருந்து ஒரு வட்டமான ஹால் தோன்றுகிறது. ஆடும் அழகி டான்ஸ் புரோகிராம் ஒத்திகை நடக்கிறது. செக்ரடரி வருகிருள்]

**செக்:** (மிகவும் சந்தோஷத்துடன்) ரொம்ப தாங்ஸ் காந்திதேவி நீங்க எங்கே வராமே இருந்திடுவீங்களோன்னு பயந்துகிட்டு இருந்தோம்....முதல் ரயிலும் தவறிப்போய்....

**காந்:** (சிரித்து) ஒப்புத்துக்கிட்டு வராமே இருந்துட்டா? பொதுஜனங்க என்னைப்பற்றி என்ன நினைப் பாங்க.

**செக்:** ரொம்ப சரியான வார்த்தை, பொதுஜன அபிப் பிராயத்தை மதிக்கிற அளவுக்குத்தான் ஜன ஆட்சி வெற்றியடையுது ...அதுவும் உங்களைப் போல புகழடைஞ்சவங்க ...

**காந்:** (சிரிச்சு) தன்னைத்தானே புகழ ஆரம்பிச்சா இந் திரனும் தன் புகழை இழந்திடுவான் ...

**செக்:** கடமையைச் செய்யத் தவறிப் போறுங்களே, அவுங்கதான் கோழைங்க.

**காந்:** அதைவிட இந்த சமூகங்கிட்டே எனக்கு ரொம்ப வும் பயம்... ஆயிரம் நன்மை செஞ்சிட்டு ஒரு தீமை செஞ்சிட்டாப் போதும்—எல்லாம் தீமைதான் ...

**செக்:** தீமைன்னு ஒண்ணு தனியாவா இருக்குது?.... மனுசன் சந்தர்ப்ப நிர்ப்பந்தத்தாலே தானே அநேகமா தீமை செய்ருன்.

**காந்:** (தன் கணவனைப்பற்றி எண்ணி தனக்குள்) ஒரு வேளை அவர் ...

**செக்:** என்ன?

**காந்:** (ஒண்ணுமில்லே...என் ஹஸ்பண்டுக்கு உடம்பு சுகமில்லே அதை நினைச்சேன் ...

**வேலைக்காரன்:** (வந்துகொண்டே) ரிஹர்சலுக்கு எல்லாம் ரெடியா இருக்காங்க ...

**காந்:** (எழுந்திருந்து) வாங்க போவோம்.

[ரிஹர்ஸல் துடங்குகிறது—எல்லாம் நடனம்...... ஆடும் அழகி வருகிருள். அவள் காதலன் அவளை ஆரம்பத்தில் மிகவும் போற்றுகிறுன். ஸொஸைடியில் பழகும் சுபாவமுள்ள அவன், அவளும் ஸொஸைடியில் பழக நிர்ப்பந்தம்

செய்கிறான். புயலில் நாணலாக வளைந்து தர பெண்ணுக்கு வலிமையுண்டு. என்று நம்பு கிறான். அவள் பழகத் தொடங்குகிறாள். அவள் நடிப்பில் ஆனந்த பாஷ்பம் முன்பும் துயரக்கண்ணீர் முன்பும் இவன் மனம் இளகு கிறது. அவள் ஆட ஆட, இவன் தாளம் போடுகிறான். ஆனால் அவளோ? இல்லற வாழ்க்கையை மறந்தாள். சமூகசேவை அவ ளுடைய தினசரி வேலையாகிறது. பெண்கள் பலவீனர்கள் என்ற சொல்லை மாற்றவேண்டு மென்று உழைக்கிறாள். அவள் கணவன் இதைக் கண்டு ஆரம்பத்தில் வியப்படைகிறான். பிறகு தன்னிடம் பழகவும் அவளுக்குப் பொழுதில்லை என்று வெருள்கிறான். பிறகு வெறுப்படைகிறான். கணவனின் கண்களின் மூலம், அவளும் தன் குறைகளை அறிந்து கொள்ளவில்லை. வைக்கோல்போர் ஆகாய மளாவி நின்றாலும், சிறு தீப்பொறியால் மறைந்துவிடுவது போல், இந்தச் சிறு சந் தேகத்தால் குடும்ப சுகமே மறைந்துவிடு கிறது, மனச்சாந்திபெற, இவள் இன்னும் அதிகமாக சமூகசேவை செய்கிறாள்.

கற்பனையை நம்பி, கண்ணால் பார்க்கக் கூடியதை அலட்சியம் செயவது அறியாமை என்பதை அவளும் எண்ணிப் பார்க்கவில்லை. கடைசியில், அவள் நோய் வாய்ப்படுகிறாள். இவள் அப்போதும் சிசுக்களின் நிதிக்காக பெனிஃபிட் பர்ஃபாமன்ஸ் என்று கிளம்பி விடுகிறாள். ஆனால், திரும்பி வரும்போது வீட்டில் அழும் குரல் கேட்கிறது......]

**காந்:** (பதறி எழுந்து) ஓ....ஐயோ இது என்ன?... (இருக்கும் இடம் ரயில்வே ஸ்டேஷன் என்று அறிந்து) இது எந்த இடம்?...நான் எங்கே...ஆ இது ரயில்வே ஸ்டேஷன்தானா...நான் கண்டது வெறும் கனவா?....ஐயோ...ஆ...இது ஸ்டேஷன் தான்....இதோ...ஆடும் அழகியின் சித்திரம்....எவ்

வளவோ பதிவிரதா சிரோன்மணிகளோட கதையை உதாரணமா சொல்றோம்... ஆனா, நம்மை நாம திருத்திக்கலேன்னா... பயன்?

**போர்ட்:** (வந்து) அம்மா ரயில் வர்ற நேரமாயிடுச்சு.

**காந்:** நான் ஊருக்குப்போகலே...ம்...இந்த சாமான்களை யெல்லாம் ஒரு டாக்ஸியில் கொண்டுபோய் வை.

**போர்ட்:** என்ன?

**காந்:** ஆமாம்....தீமைக்குத்தீமை செய்வது மிருகக்குணம், நன்மைக்கு நன்மை செய்வது மனிதகுணம்; தீமைக்கு நன்மை செய்வது தேவகுணம்....ம்.... நான் என்ன தீமை செஞ்சும் அவர் எவ்வளவு பெருந்தன்மையா....

[போர்ட்டர், ஒன்றும் புரியாமல், சாமான்களைத் தூக்கிக்கொண்டு வெளியே போகிறான்— காந்திதேவி மௌனமாகப் போகிறாள் — யாரோ கத்துகிறார்கள். டேய் ஸிக்னல் காட்டு—ஆல் கிளியர் இப்போ.........பச்சைக் கொடி எங்கே?......]

**போர்ட்:** (சிரித்துக்கொண்டே) அம்மா வர்றப்போ சிவப்புக் கொடி காட்டுனவ. போறப்போ, பச்சைக் கொடி...மகாலக்ஷ்மி போல நீங்க இருக்கீங்க...நீங்க ஊருக்குப் போவாமே, வீட்டுக்கு இப்போ திருப்பிப் போவது நல்ல காரியத்துக்குத்தான்....

(காந்திதேவி மௌனமாகவே போகிறாள்)

## காட்சி 53

**கிராமத்தில்**

[கிராமத்தில் ஒரே குழப்பம். பொய் சொல்லி வாஸந்தியை அழைத்து வந்த விமல், கேசவ பிள்ளை, கோவிந்தப்பிள்ளை போன்ற கிராம வாசிகளிடம் மாட்டிக் கொள்கிறான்—]

**கேச:** குழந்தை வாஸந்தி இந்தப் பாவி கையிலே எப்படியம்மா சிக்கினே?

**வாஸ:** அண்ணிக்கு அபாயம்னு சொல்லி....

**கோவி:** (சிரித்து) இந்த ஆளாலே எனக்கு ஒரு பயன்.... என் இடது கை வாதத்தாலே நிமித்த முடியாமே இருந்துச்சல்ல, அடிச்ச அடியிலே என் வாதமே பறந்து போயிடுச்சு. (இருமல்) ஆனா இந்த இருமல்...

**கேச:** இந்த மனுஷன் ஒண்ணு சதா சீக்கு சீக்குன்னு தன்வந்தரியே வைத்தியனா வந்தாலும் ஆயுள் இல்லாதவனை என்ன செய்ய முடியும்காணும்?... நீங்க ஒரு காரியம் செய்யணும்—உண்பதற்காக உயிர் வாழக்கூடாது. உயிர் வாழ்வதற்காக உண்ணணும் அப்போ பத்தியம், பைத்தியம், வைத்தியம் எல்லாம் பறந்து போயிடும்.

**கோவி:** நீங்க கேள்விப்பட்டதில்லே போல இருக்குது—பெரியமனுஷங்களுக்குக் கவலை அதிகம்—வியாதியஸ்தர்களுக்குப் பசி அதிகம்....

**வாஸ:** மாமா அண்ணனுக்கும் உடம்பு சுகமில்லே.... கொஞ்சம் சீக்கிரமாப் போனா...

**கேச:** என்ன? மாப்பிள்ளைக்கு உடம்பு சுகமில்லையா? ஏன்?

**வாஸ:** எல்லாம் வீட்டுக்குப் போய் அண்ணியைக் கேளுங்க....

**கேச:** எனக்கும் வரவர அந்தப் பொண்ணோட போக்கும் பிடிக்கலே...என்னமா மாறிப்போயிடுச்சு.... ம்...வா...போவோம்.

**கோவி:** நானும் வந்துட்டேன் இதோ ஒரு நொடியிலே, ஒரு பாட்டில் மருந்து எடுத்துக்கிட்டு ஆஸ்பத்திரிக்கும் போக வேண்டியிருக்குது.

**கேச:** (போய்க்கொண்டே)ம் ... நாய்க்குத்தான் தன்

ஜாதியை முதற் பகைண்ணு கேள்விப்பட்டிருக்கேன்; இப்போ மனுசனையும் நம்ப முடியவில்லை...

**கோவி:** (சிரித்து) மனுசனைத்தவிர வேற யாரையும் நம்பலாம். ஆனா மனுசர்கள்ளே டாக்டர்களை வேனுமானா, நம்பலாம்.

**கேச:** மொதல்லே மனுசன் மதுவைக் குடிக்கிறான்; அப்புறம் மது மதுவைக் குடிக்குது—கடைசியிலே மது மனுசனைக் குடிச்சிடுதங்குறது, உங்க விசயத்துலே ரொம்ப சரிங்காணும்.

**வாஸ:** மாமா போவோமா?

**கேச:** சரி... சரி... அப்புறம் உங்க சிக்கை கவனிக்கலாம். இப்போ மொதல்லே ஊருக்குப் புறப்படுவோம்.

[குறுக்கே கிடந்த மரங்களை நீக்கி, விமல் வந்த காரிலேயே புறப்படுகிறார்கள்]

## காட்சி 54

**விஜயன் வீடு**

[விஜயன் மிகவும் கவலையுடன் படுத்திருக்கிறான். அவன் முன் காந்தியின் தனி போட்டோ, கலியாணமான தும் இருவரும் சேர்ந்து எடுத்த போட்டோ, அவனுக்கு அவள் முதலில் எழுதிய கடிதம் எல்லாம் கிடக்கின்றன. காந்திதேவி ஓடிவந்து, அவன் கால்களில் விழுகிறாள்]

**காந்:** அ(ழுதவாறு) என்னை மன்னிச்சிடுங்க... என்னை மன்னிச்சிடுங்க.... நான் அறிவில்லாமே...(விம்மி விம்மி அழுகிறாள்)

**விஜ:** (ஒன்றும் புரியாமல்) என்ன என்ன... காந்திதேவியா?...

**காந்:** தேவியில்லை....அந்த அகங்காரம் எல்லாம் அழிஞ்சு போச்சு...உங்க காந்தி...பழைய காந்தி... எனக்குப் பேரு வேணும்; புகழ் வேணும்; கீர்த்தி வேணும்...கௌரவம் வேணும்; இந்த சுவர்க்கம் கிடைச்சா போதும்....

[காலை இறுகப் பிடித்துக்கொண்டு அழுகிருள்.]

**விஜ:** ம்...கண் தனக்கு இஷ்டமான பொருளைப் பாக்குது—மனம் விரும்புது ஆசை மூத்துது. தடை செய்றவங்களைச் சீறிப்பாயுது அதனாலே அமைதி குலையுது. அமைதி குலைஞ்சு, இன்பம் கிடைக்குமா?

**விஜ:** (இதைக் கவனியாது) உனக்கு என்னமோ அபாயம்னு விமல் வாஸந்தியை அழைச்சிட்டுப் போனானே?

**காந்:** என்ன?

[இந்த சமயத்தில் கோவிந்தப்பிள்ளை கேசவப் பிள்ளை முதலியோர் வருகிறார்கள்.]

**வாஸ:** (ஓடிவந்து) அண்ணா....அண்ணா

**காந்:** வாஸந்தி

**விஜ:** வாஸந்தி நீயும் நல்லபடியா வந்துட்டியா?

**காந்:** வாஸந்தி உன் புத்திமதிகூட எனக்குத் தெரியாமே போயிடுச்சே....திறமைசாலின்னு ஒரு சமயம் இருந்தவங்க, பின்னாலே முட்டாள் ஆயிடுறாங்களே...அதுவும் என்னைப்போல....

**கோ:** நீ என்னம்மா காந்திமதி, டாக்டருங்களை எடுத்துக்கோ

**வாஸ:** அண்ணி நீங்க இவ்வளவு சீக்கிரமா மாறுவீங்கன்னு நான் நெனக்கவே இல்லை....

**கோ:** ஆக, என் பொண்ணு பழைய பொண்ணா ஆயிடுச்சு.

[கௌரியும் ரவியும் வருகிறார்கள்.]

**ரவி:** அந்த மருந்து கிடைக்கலேயே!, ஊர் பூரா சுத்தியும்....

**கோவி:** பாத்தீங்களா? இதுதான் சுதந்திர நாடாம். விரும்புற மருந்து கிடைக்கலேன்னு, என்ன சுதந்திரம் வேண்டி இருக்குது...

**விஜ:** (சிரித்து) இனி எனக்கு மருந்து தேவையில்லே. பழைய காந்திமதி கிடைச்சுப் போயிட்டா.

**கௌ:** நெஜந்தானு....அம்மா உங்ககிட்டே நான் எவ்வளவோ தடவை சொல்லியிருக்கேன்—வேதவாக்காக இருந்தாலும், நம்ம மனசாட்சி அதை ஒத்துக்கிட்டாத்தான், அதைச் செய்யணும்...எவ்வளவு தடவை உங்க மனசே குறுகுறுத்தது. ஆனு, அந்த விமல் நிர்ப்பந்தத்துக்காக...

**கேச:** ஹூம் ஏழையோட ஒரு காசு உலகத்துலே உள்ள தங்கம் எல்லாத்தையும்விட மதிப்பு உள்ளதுங்குறதை ஞாபகத்துலே வச்சுகிட்டா, காசுக்குத் தர்ற வறட்டுக் கௌரவம் எல்லாம் பறந்து போயிடும்.

**கோவி:** பாஷன் உலகத்துலே என்ன சந்தோஷம், ஏற்பட்டாலும், கணவனுக்குப் பணிவிடைசெஞ்சு, அவன் முகத்துக்கு முன்னலே ஒரு மனைவிக்கு ஏற்படுற சந்தோஷம், ஒருநாளும் கிடைக்காது, நிர்மலமான மாலைக்காத்து வீசறப்போ உடலுக்கு என்ன ஆனந்தம் ஏற்படுது அதுபோல.

**கௌ:** (சிரித்து) வியாதியும் பறந்துபோயிடும்.

**ரவி:** என்ன கௌரியா? இப்படிப்பேசினு? ...ஹாஸ்யமா?

**வாஸ:** வியாதியே ஒரு விதத்துலே ஹாஸ்யந்தானே! வேணும்னு நம்ம கோவிந்தப்பிள்ளை மாமாவை...

**கௌ:** இப்பவே பரிகாசம் செய்யக்கூடிய தைரியம் வாஸந்திக்கு ஏற்பட்டுப்போச்சே.

**விஜ:** (மெதுவாக சிரித்து) நல்லா பரிகாசம் செய்யட்டும்...ஆனா ஒருத்தரை ஒருத்தர் புகழவும்வேணும்.

**காந்:** பெண், ஆணைப் புகழட்டும், ஆனா பெண்ணை புகழ்ந்து வேண்டாத பாஷன் உலகத்துலே பிடிச்சுத் தள்ளவேண்டாம்.

**கோவி:** குழந்தை டோஸ் தருது.

**விஜ:** என்னைக் குத்திச்சொல்றியா காந்தி......எனக்கு இதையெல்லாம் தேவையில்லை (சிரித்து) இந்த பாஷன் உலகத்திலே எந்த எல்லை வரைக்கும் நாகரிகம் வேணும்னு நான் நல்லா தெரிஞ்சுக்கிட்டேன்!

[எல்லோரும் சிரிக்கிறார்கள்]

**(திரை)**

**முற்றும்**

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS



EXTENSION LIBRARY
16 DEC 1957
MADURAI
Univ. Grants Commission.

ஸ்ரீமகள் அச்சகம், சென்னை-1. 1056-1-3